
# ஒரு தரமான வாழ்க்கை





மக்கள் நல்வாழ்வு சபை நோக்கி நூல் 3

# ஒரு தரமான வாழ்க்கை

வெளியீடு
மக்கள் நல்வாழ்வு சபை
தமிழ்நாடு ஒருங்கிணைப்பு குழு



மக்கள் நல்வாழ்வு சபை நோக்கி நூல் 3

ஒரு தரமான வாழ்க்கை!
முதற் பதிப்பு : ஜூலை 2000
மக்கள் நல்வாழ்வு சபையின்
தேசிய ஒருங்கிணைப்பு குழுவால் வெளியிடப்பட்ட
Making Life Worth Living!
என்ற ஆங்கில மூலத்தின் தமிழாக்கம்
தமிழ்நாடு ஒருங்கிணைப்புக் குழுவால்
வெளியிடப்படுகிறது

படங்கள் : ஆர். குமரகுருபரன்
லேசர் அச்சு : லேசர் சிஸ்டம், சென்னை - 600 014.
அச்சாக்கம் : மணி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 005.

தயாரிப்பு, இருப்பு, விநியோகம்

சவுத் விஷன்
6, தாயார் சாகிப் 2வது சந்து,
சென்னை - 600 002.

## தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிலுள்ள அமைப்புகள்

1. அனைத்திந்திய மக்கள் அறிவியல் இயக்கங்களின் கூட்டமைப்பு (AIPSN)
2. பாரத் ஞான் விஞ்ஞான் சமிதி (BGVS)
3. தேசிய மக்கள் இயக்கங்களின் கூட்டமைப்பு (NAPM)
4. சிறு குழந்தைகள் பராமரிப்பு சேவைக்கான கூட்டமைப்பு (FORCES)
5. மருத்துவ நண்பர்கள் குழாம் (MFC)
6. ஆல் இந்தியா டிரக் ஆக்ஷன் நெட்வர்க் (AIDAN)
7. மக்கள் ஆரோக்கியத்துக்கான விழிப்புணர்வு, ஆய்வு மற்றும் செயல்பாடு (SOCHARA)
8. இந்திய மருந்து விற்பனைப் பிரதிநிதிகள் சங்கம் (FMRAI)
9. கத்தோலிக்க நல்வாழ்வு மையம் (CHAI)
10. கிறிஸ்டியன் மெடிக்கல் அசோசியேஷன் (CMAI)
11. ராம்கிருஷ்ணா மிஷன்
12. இந்திய நலக் குழுமம் (VHAI)
13. ஆசியன் கம்யூனிட்டி ஹெல்த் நெட்வர்க் (ACHAN)
14. அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் (AIDWA)
15. இந்திய மாதர் தேசிய சம்மேளனம் (NFIW)
16. தேசிய பெண்கள் அமைப்புகளின் கூட்டணி (NAWO)
17. பெண்கள் கூட்டுத் திட்டம் (JWP)
18. அனைத்திந்திய பெண்கள் மாநாடு (AIWC)

*நல்வாழ்வு கொள்கையில் அக்கறையுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட அமைப்புகள் மக்கள் நல்வாழ்வு சபையின் பிரச்சாரத்தில் இணைந்து செயல்படுகின்றன.*

## தமிழ்நாடு ஒருங்கிணைப்புக் குழுவிலுள்ள அமைப்புகள்

1. அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் (தமிழ்நாடு) (AIDWA)
2. அனைத்திந்திய சர்வ சேவா பண்ணைகளின் சங்கம் (ASSEFA)
3. பெண்சிசுக் கருக் கலைப்புக் எதிரான பிரச்சாரம் (CASSA)
4. தமிழ்நாடு கத்தோலிக்க நல்வாழ்வு மையம் (CHAI)
5. இந்திய கிறிஸ்துவ மருத்துவ மையம் (CMAI)
6. க்ரை (CRY)
7. பிரஜை. நுகர்வோர். குடிமை நடவடிக்கைக் குழு (CAG)
8. தாஹன் ஃபவுண்டேஷன் (DHAN Foundation)
9. தமிழ்நாடு நுகர்வோர் அமைப்புகளின் கூட்டணி (FEDCOT)
10. கிராமபுற ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலனுக்கான காந்திகிராம் நிறுவனம்
11. இந்திய குழந்தைகள் நலச் சங்கம் (ICCW)
12. மதுரை பல்கலைக் கழக ஆசிரியர் கூட்டணி (MUTA)
13. நலவொளி இயக்கம்.
14. மக்கள் இயக்கங்களின் தேசிய கூட்டணி (NAPM)
15. இந்திய மாதர் தேசிய சம்மேளனம் (NFIW)
16. பெண்ணுரிமை இயக்கம்
17. பாண்டிச்சேரி அறிவியல் இயக்கம் (PSF)
18. பிரிப்பேர் (Prepare)
19. ஸ்கோப் (SCOPE)
20. சாம் (SAM)
21. ஸிஸ்டர்ஸ் - டாக்டர்ஸ் பாரம் ஆப் இந்தியா (SDFI)
22. சோக்கோ டிரஸ்ட் (Soco Trust)
23. தமிழ்நாடு சிறு குழந்தைகள் பராமரிப்பு சேவைக்கான கூட்டமைப்பு (TN-FORCES)
24. தமிழ்நாடு நல்வாழ்வு வளர்ச்சிக்கான அமைப்பு (TNHDF)
25. தமிழ்நாடு மருந்து விற்பனைப் பிரதிநிதிகள் சங்கம் (TNMSRA)
26. தமிழ்நாடு பெண்கள் எழுச்சி மையம்
27. தமிழ்நாடு ஆரம்பக் கல மேம்பாட்டு பிரச்சாரம் (TanPIC)
28. தமிழ்நாடு சமூக நலப்பணி மையம் (TASSOS)
29. தமிழ்நாடு அறிவியல் இயக்கம் (TNSF)
30. தமிழ்நாடு தன்னார்வ நலக் குழுமம் (TNVHA)
31. தன்னார்வ சுகாதார நிலையம் (VHS)
32. தமிழக பெண்கள் ஒருங்கிணைப்புக் குழு (Women's Collective)



## மக்கள் நல்வாழ்வு சபையின் நோக்கம் என்ன?

மருத்துவ உலகில் வியத்தகு முன்னேற்றங்கள் பல ஏற்பட்டுள்ளன. மனிதனின் சராசரி ஆயுட்காலம் அதிகரித்துள்ளது. ஆயினும் மக்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பதில் உலக அளவில் தற்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஏழை - பணக்காரர் இடையிலான ஏற்ற-தாழ்வு அதிகரித்துக் கொண்டு செல்வதும், ஏழை நாடுகளுக்கும் பணக்கார நாடுகளுக்கும் இடையே இடைவெளி கூடிக் கொண்டு செல்வதும்தான் இதற்குக் காரணங்கள். மக்களுக்கு ஓரளவு கிடைத்திருந்த சுகாதார (மருத்துவ) வசதிகளையும்கூட பெருகிவரும் வறுமை அரிக்கத் தொடங்கிவிட்டது. எச்.ஐ.வி. வைரஸின் தாக்குதல், அதனால் ஏற்படும் எய்ட்ஸ் நோய். மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளாலும் மக்கள் நல்வாழ்வுத் தரம் சரிந்து கொண்டு செல்கிறது.

வருவாய் ஏற்ற-தாழ்வு மட்டுமல்லாமல், சமூக சேவை வசதிகள் சுருங்கிக் கொண்டு செல்வது. இனரீதியிலும் ஆண்-பெண் பால் ரீதியிலும் பாரபட்சம் காட்டப்படுவது ஆகிய காரணங்களாலும் நல்வாழ்வுத் தரம் சரிகிறது. தெற்காசியா, ஆப்பிரிக்காவின் சகாராப் பகுதி, லத்தீன் அமெரிக்கா, மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பா ஆகிய பகுதிகளில் உள்ள நாடுகளில் வாழும் ஏழை எளிய மக்களும் பூர்வ குடிகளும்தான் பெரும் பாதிப்புக்கு ஆளாகின்றனர். மருத்துவ வசதி கிடைக்காமையால் அவர்களிடையே இறப்பு விகிதம் அதிகரித்துள்ளதை ஆய்வறிக்கைகள் காட்டுகின்றன. வளர்ந்த நாடுகளின் பாரம்பரிய மருத்துவ அறிவு மற்றும் சிகிச்சை முறைகளும் சமூக அமைப்பு முறைகளும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

உலகப் பொருளாதார அமைப்பு முறையைச் சீரழித்ததன் விளைவாகத்தான் மேற்சொன்ன கேடுகள் ஏற்பட்டு வருகின்றன. பொருளாதார உலகமயமாக்கல் காரணமாக ஏழை நாடுகளின் கடன் சுமை மேலும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது; பணக்கார நாடுகளுக்கு சாதகமான மற்றும் ஏழை நாடுகளுக்குப் பாதகமான உலக் வர்த்தக நடைமுறைகள் திணிக்கப்படுகின்றன. இவற்றால் உலகப் பொருளாதார அமைப்பு முறைக்கு

மேலும் சீரழிவு ஏற்பட்டுள்ளது. அதோடு, நல்வாழ்வுத் துறையில், ஆரம்ப சுகாதாரப் பாராமரிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட தோல்வியும் உலக மக்களின் மருத்துவ வசதிப் பிரச்சினையை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கிவிட்டது.

1. மக்கள் நல்வாழ்வில் தேசிய இலக்கை அடையத் தவறியது; மருந்துக் கொள்கையைக் கிடப்பில் போட்டது; ஒட்டுமொத்த சமூகக் கொள்கையின் அங்கமாக மக்கள் நல்வாழ்வைப் பார்க்கத் தவறியது.

2. சமுதாயத்தின் பல்வேறு துறைகளுடன் மக்கள் நல்வாழ்வுத் துறை பின்னிப் பிணைந்துள்ளதை அரசு காணத் தவறியமை; அனைத்துத் துறைகளிலும் மக்கள் நல்வாழ்வுக்கு முன்னுரிமை கொடுக்கத் தவறியமை;

3. நல்வாழ்வுத் திட்டங்களில் உண்மையான ஈடுபாட்டுடன் மக்கள் சமுதாயத்தைப் பங்கேற்கச் செய்வதில் ஏற்பட்ட தோல்வி.

4. மருத்துவ சேவைத் துறையில் தனியாரை அனுமதித்தது; அதனால் ஏற்பட்ட ஏற்ற-தாழ்வு மற்றும் மருத்துவ சேவையின் அனைத்து நிலைகளிலும் அரசு தன் கடமைகளிலும் பொறுப்பிலும் இருந்து விலகிக் கொண்டமை;

5. மருத்துவ வசதியை வெறும் தொழில் நுட்ப ரீதியிலான வசதியாகப் பார்க்கும் குறுகிய கண்ணோட்டம் ஆகிய குறைபாடுகளாலும் உலக அளவில் மருத்துவ சேவையானது நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கிறது.

**மக்கள் நல்வாழ்வு மாநாட்டின் நோக்கம் என்ன?**

வட்டார, தேசிய, சர்வதேச அளவில் கொள்கைகள் வகுக்கும்போது, மக்கள் நல்வாழ்வுக்கும் சமத்துவமான வளர்ச்சிக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்; இக்குறிக்கோளை ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு வாயிலாக எட்ட வேண்டும். மக்கள் நல்வாழ்வுப் பிரச்சினைகளுக்கு தொலைநோக்குடன்கூடிய நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். மேற்கூறிய இலக்குகளை அடைவதே மாநாட்டின் இலட்சியம்; இதற்காக மக்கள் நடத்தும் இயக்கங்களுக்கு இம்மாநாடு ஆதரவளிக்கும்.

டாக்கா மாநாட்டை முன்னிட்டு, பல நாடுகளில் மக்கள் நல்வாழ்வை முன்னிறுத்திப் பல பிரச்சார இயக்கங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தியாவிலும் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் கூட்டமைப்புகள், மக்கள் இயக்கங்களுடன் சேர்ந்து பிரச்சார இயக்கங்களை நடத்துகின்றன. இந்திய அரசின் தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகளால் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு



ஏற்பட்டுள்ள கேடுகள் குறித்து அவை பிரச்சாரம் செய்ய உள்ளன. மக்கள் நல்வாழ்வுக் கொள்கை குறித்த விவாதத்தில் சாமானிய மக்களையும் ஈடுபடுத்துவது; உடனடியாக அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வை உறுதி செய்ய நடவடிக்கையில் இறங்குமாறு அரசாங்கத்தை நிர்பந்திப்பது; இதற்கு மக்களின் கருத்தைத் திரட்டுவது ஆகியன இப்பிரச்சாரத்தின் நோக்கங்கள். அதோடு, மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஏழை மக்களை பல்வேறு இயக்கங்கள் மூலம் அணிதிரட்டுவது, அடிப்படையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வலுவான மக்கள் இயக்கத்தைக் கட்டியமைப்பது ஆகியவையும் மேற்கூறிய தேசியப் பிரச்சாரத்தின் நோக்கங்களாகும்.

**இந்தியப் பிரச்சாரத்தின் ஆறு அம்சங்கள்**

'மக்கள் கையில் அவர்களது நல்வாழ்வு' என்ற இலக்கை அடைய செய்ய வேண்டியவை'

1. பெரும்பான்மை மக்களின் வாழ்க்கையைச் சீரழிக்கும் புதிய பொருளாதாரச் சீர்திருத்தம் மற்றும் உலகமயமாக்கல் கொள்கையை நாட்டை விட்டு விரட்டுவது;

2. சுகாதார சேவைத் திட்டமிடலைப் பரவலாக்குதல்; ஜனநாயகப்படுத்துதல்; அத்திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான நிதி ஒதுக்கீட்டை உறுதி செய்தல்;

3. மக்களை மையப்படுத்திய நல்வாழ்வுத் திட்டங்கள்; அவற்றின் செயல்பாட்டில் அவர்களது பங்கேற்பை உறுதி செய்தல்.

4. திட்டமிடுதலைப் பரவலாக்குதல் மூலமும் பொருத்தமான தொழில்நுட்பங்கள் மூலமும் அனைத்து மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல்.

5. மருத்துவ சேவையை கட்டுப்பாடற்ற, நெறியற்ற முறையில் வணிகமயமாக்குவதைக் கட்டுப்படுத்துதல்; அறிவுபூர்வமான, நெறி சார்ந்த, திறமையான மருத்துவ சேவையை ஊக்குவித்தல்;


6. ஏழை எளியோரின் அமைப்புகளை உருவாக்கவும், சமுதாயத்தில் நிலவும் ஏற்ற-தாழ்வுகளைக் குறைக்கவும் மக்களின் செயல்திறனை வளர்க்கவும் பாடுபடுவதற்காக மக்கள் இயக்கங்களையும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் ஓரணியில் திரட்டுதல்.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அனைவருக்குமான நல்வாழ்வு<br>அனைவருக்குமான அடிப்படைத் தேவைகள் | 9 |
| 2. | அடிப்படை சுகாதார வசதிகளைப் பெறுதல் | 16 |
| 3. | வெற்றிகளிலிருந்து பாடம் கற்றல் | 30 |
| 4. | அடிப்படைக் கல்வி | 41 |
| 5. | மக்களின் வாழ்க்கையை பாதுகாப்பது | 60 |
| 6. | பதிலடி | 80 |


### அத்தியாயம் - 1

# அனைவருக்குமான நல்வாழ்வு
# அனைவருக்குமான அடிப்படைத் தேவைகள்





ஆரம்ப நல்வாழ்வு பராமரிப்பு (Primary Health Care) என்பது சுகாதாரத்துறையை (Health Sector) மட்டும் சார்ந்தது இல்லை. கூடவே அதைச் சார்ந்த பல தேசிய மற்றும் சமூக மேம்பாட்டிற்கான துறைகளையும் அம்சங்களையும் உள்ளடக்கியது. குறிப்பாக விவசாயம், கால்நடைப்பராமரிப்பு, உணவு, தொழில், கல்வி, வீட்டுவசதி, பொதுப்பணி, தகவல் வசதிகள், மற்றும் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த முயற்சிகளை ஆரம்ப நல்வாழ்வு கோருகிறது.

*அல்மா அட்டா பிரகடனம் 1978*





## *அறிவொளி இயக்கத்தின் போது ஒரு வகுப்பு*




## அவர்கள் எழுதிய கடிதங்கள்

கடவுளே,
இன்று தண்ணீர் லாரி கண்டிப்பாக வர வேண்டும்
கடவுளே,
நமது கிராமத்திற்கு பஸ் சர்வீஸ் சீக்கிரம் வரச்செய்
கடவுளே,
பிரசவம் கஷ்டம் இல்லாமல் நடக்க வேண்டும்.
கடவுளே,
எனது கணவன் இன்றாவது குடிக்கக் கூடாது.
கடவுளே,
பட்டுகூட்டுக்குச் சந்தையில் நல்ல விலை கிடைக்க வேண்டும். இல்லையென்றால் கடன்காரங்களுக்கு கடனை திருப்பித் தர முடியாது





## சொர்க்கம் எப்படிப்பட்ட இடமாக இருக்க வேண்டும் என விரும்புகிறீர்கள்?







நாம் அப்படி ஒன்றும் அதிகப்படியாகக் கேட்டு விடவில்லை. வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது என்பது மனித சமூகத்தின் அடிப்படை நோக்கம். இதை மறுப்பது மனித வாழ்வின் கண்ணியத்தையே மறுக்கும் செயலாகும். மனிதன் விலங்கு போல் வாழ நேரிடும்.


### வாழ்க்கையின் தரம்

நல்வாழ்வு நிலை (Health Status) என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கான ஒரு அளவுகோல். எங்கெல்லாம் அனைத்து அடிப்படைத் தேவைகளும் நிறைவேற்றப்பட்டிருக்கிறதோ. அங்கு வாழ்க்கைத் தரம் நன்றாக இருக்கிறது. மக்கள் ஆரோக்கியமாய் வாழ்கிறார்கள். எங்கெல்லாம் இந்த அடிப்படைத் தேவைகள் கிடைக்கவில்லையோ. அங்கெல்லாம் நல்வாழ்வு சீர்கெட்டு. வாழ்க்கையே போராட்டமாகிறது.

## அனைவருக்கும் நல்வாழ்வு என்ற கோஷத்தை மறுபடியும் நாம் பார்ப்போம்!

- நல்வாழ்வு என்பது உடல், மனம் மற்றும் சமூக ரீதியான ஒட்டுமொத்த ஆரோக்கியம்
- அனைவருக்கும் என்பதற்கு பொருள், அனைவருக்கும் என்பதுதானே ஒழிய ஏதோ ஒரு சிலஅதிர்ஷ்டசாலிகளுக்கு மட்டும்தான் என்பதல்ல.

எல்லோருக்கும் உடல்நலம், எல்லோருக்கும் கல்வி, அல்லது எல்லோருக்கும் உணவு போன்ற அனைவருக்குமாக முழங்கப்படும் எந்த கோஷமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ''அனைவருக்கும்'' என்பது வெறும் பேச்சளவில்தான் இருக்கின்றது. நடைமுறையில் அது அனைத்தும் ஒரு சிலருக்குதான் போய் சேருகிறது. ஆகவே தற்போதையை செயல்திட்டம் அனைத்தையும் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதுதான்.







வாழ்க்கையை எதிர்கொள்ளும் பொருத்தமான மனப்பாங்கு' என்பதன் மூலம் "உணவு உடை இருப்பிடம் போன்ற அடிப்படை தேவைகளையும், பாசம், பாதுகாப்பு போன்ற உணர்வுப்பூர்வமான தேவைகளையும், சமூக அங்கீகாரம் போன்ற சமூக தேவைகளையும் உள்ளடக்கிய மனித தேவைகளையும் அவற்றிற்கு இடையேயான உறவுகளையும்" சரியான முறையில் புரிந்து கொள்வதே ஆகும். இந்த புரிதல் மனப்பாங்கு இல்லாமல், ஒருவர் மனநலன் அடையவே முடியாது






ஆகவே "அனைவருக்கும் நல்வாழ்வு வேண்டுமென்றால் குடிமக்களின் பொருளாதார, அரசியல் பங்கேற்பு அதிகரிக்க வேண்டும். பேராசைக்கெதிரான பேரறிவுக்கான ஒரு மாற்றுக் கல்வியும் உருவாக வேண்டும்

ஆனால் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இவைகள் அனைத்தையும் தற்போதைய சமூகத்தின் ஆட்சியாளர்களாலோ, அல்லது தலைவர்களாலோ தர முடியாது! அவர்களது வாழ்க்கைத் தத்துவமே பேராசையையும் போட்டியையும் அடிப்படையாக கொண்டுள்ளது.



ஆகவேதான் நாம் மாற்றுகளைத் தேடிப் போக வேண்டிய கட்டாயம் உண்டாகிறது. மக்கள் நல்வாழ்வு சபை பிரச்சாரம் இந்த தேடுதலை முன்னெடுத்து செல்லும் மிக முக்கியமான முயற்சிகளில் ஒன்று.



# மக்கள் நல்வாழ்வு சபையின் நோக்கம்

டாக்காவில் மக்கள் நல்வாழ்வு சபை கூடுவதற்கு முன் நடைபெறும் ஓராண்டு காலப் பிரச்சாரத்தை பயன்படுத்தி . . .

1. உண்மையான மேம்பாட்டிற்கான பிரச்சினைகளை வலியுறுத்த வேண்டும்.
2. உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், நுகர்வுக் கலாச்சாரம் போன்றவற்றை கேள்விக்குள்ளாக்க வேண்டும்.
3. 20%க்கும் குறைவாக உள்ள ஒரு சிறுபான்மையானவர்கள் மொத்த மக்களின் நலத்திற்கு, அறிந்தும் அறியாமலும் துரோகம் செய்வதை தோலுரித்துக் காட்டுதல்.

பெரும்பான்மையோரின் நலனை பாதுகாக்கும் வகையில் நாடு தன் வளர்ச்சி பாதையை மாற்றிக் கொள்ள வேண்டும். மக்கள் நல்வாழ்வு சபை வளர்ச்சிக்கான மாற்று வழியைக் கண்டுபிடித்து, அதைப் பற்றிப் பிரச்சாரம் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட பிரச்சார முயற்சிகள் வெற்றியடைய வேண்டுமானால், விமர்சனங்களுடன், ஆலோசனைகளும், செயல்பாடுகளும் இணைய வேண்டும். அதன் மூலம்தான் மக்களின் படைப்பாற்றல் திறன் பெருக்கெடுத்து வரும்.

பஞ்சாயத்துக்கள், தன்னார்வ குழுக்களில், மக்கள் இயக்கங்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள், தொழில் வல்லுனர்கள் மற்றும் கலைஞர்கள் உள்ளடக்கிய பரந்துபட்ட இயக்கங்கள் போன்றவற்றிற்கு இந்தப் பிரச்சாரம் ஊக்க சக்தியாக செயல்பட்டு அவைகளை செயலாற்றத் தூண்ட வேண்டும்.

அரசின் கொள்கைகளை அகில உலக, தேசிய மற்றும் மாநில அளவில் விமர்சனத்திற்கு உட்படுத்தினாலும், அந்தப் பகுதிகளில் உள்ள பஞ்சாயத்து, கிராமம் மற்றும் ஒன்றிய அளவில் மக்களின் செயல்பாடுகள் திட்டமிடப்பட வேண்டும். மக்களுடன் திட்டமிட்ட உரையாடல்களும் விசாரணைகளும் நடத்தி முடித்த பிறகு, அனைத்து நிலைகளிலும் சாத்தியமான படைப்பாக்க செயல்களை உருவாக்க கருத்தரங்குகளையும் பயிலரங்குகளையும் நடத்த வேண்டும்.



சுகாதாரம், பாதுகாப்பான குடிநீர், சத்துணவு, அடிப்படைத் தேவைகளான வீடு, சாலைகள், கல்வி, தொழில் போன்றவைகளுக்கான பிரச்சாரங்களும், நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் மருத்துவ சேவைகள் முறையாக திட்டமிடப்பட்டு அந்தந்தப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டால்தான் பயனுள்ளதாய் இருக்கும்.




'அனைவருக்கும் உடனடி நல்வாழ்வு' என்று கோஷம் கட்டி காட்டுவது என்னவென்றால்.

★ அனைவருக்கும் நல்வாழ்வை யாரோ ஒருவர் எதிர்காலத்தில், கி.பி. 2000 ஆண்டில் கொண்டு வரப்போகிறார் என நாம் இவ்வளவு காலமாக காத்துக் கொண்டிருந்திருக்கிறோம்.

★ நாம் நம்பிக்கை இழந்து விட்டோம்.

★ நாம் நமது நல்வாழ்விற்காக இப்போதே நடவடிக்கையில் இறங்கப்போகிறோம்.

## நல்வாழ்வு நடவடிக்கை என்பதன் பொருள் என்ன?





மேற்சொன்ன ஐந்தும் ஒன்றை ஒன்று சார்ந்து உள்ளவை இந்த ஐந்தின் இணைப்புதான் நல்வாழ்வு எனலாம்.

கண்ணியமான வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெறுவதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை இந்தப் புத்தகம் ஆராய்கிறது. குடிநீர் பிரச்சினைகள் போன்றவை அரசியல் கோரிக்கைகளாக இருந்த போதிலும் கூட, அரசினால் அதைக் கூட ஏன் நிறைவேற்ற முடியவில்லை என்பதை இந்தப் புத்தகம் ஆராய்கிறது. இன்றைய பொருளாதார சீரமைப்பு கொள்கை (Structural Adjustment Policies) அடிப்படை வசதிகளை எவ்வாறு பாதிக்கிறது என்பதை இப்புத்தகம் ஆராய்கிறது. இப்புத்தகம் மாற்று திட்டத்திற்கான சில நிகழ்வாய்வுகளை (Case - Study) முன்வைப்பதுடன், நடைமுறையில் அனைவருக்கும் அடிப்படை வசதிகளை தரவல்ல மக்கள் முன்முயற்சியையும், கொள்கைமாற்றங்களையும் அலசுகிறது. அதற்கு பிறகுதான் அனைவருக்கும் நல்வாழ்வு என்பது சாத்தியம். நாம் கவனம் செலுத்த வேண்டிய தளங்கள் மிகவும் பரந்தவை ஆகையால், நாம் தற்போது நடைமுறையில் இருக்கும் நிலைமைகளைக் குறித்த ஒரு விவரமான விமர்சனம் இங்கு செய்யவில்லை. நமது நோக்கம் பொதுமக்களிடம் ஒரு விவாதத்தைத் தூண்டிவிடவும் மாற்றுதிட்டத்தை திட்டமிடவும் தேவையான ஒரு குறைந்தபட்ச புரிதலை உருவாக்குவதாகும்.

# அத்தியாயம் 2

# அடிப்படை சுகாதார வசதிகளைப் பெறுதல்





எல்லோருக்கும் வேலை கொடுப்பது என்பது பிரச்சினையாகவேதான் இருந்து வருகிறது. சொத்துகள் மற்றும் திறமைகள் சமனற்ற முறையில் விரவிக்கிடப்பதும், சமூகக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பொருளாதாரக் காரணிகளும் அதற்கான காரணம் போல் தோன்றலாம். கல்வி மற்றும் மருத்துவ பராமரிப்புகளை கொடுப்பதற்கான முயற்சி களுக்காவது சில ஏற்பாடுகள் இருக்கின்றன. அதன் தரம் கேள்விக்குரியது என்றாலும் - குறைந்தபட்சம் கல்வி மற்றும் மருத்துவத் துறை ஏற்பாடுகளாவது உள்ளன.

ஆனால் மிக சாதாரணமான குடிமக்களின் வசதிகளான குடிநீர், தெருவிளக்கு போன்றவைகள் கூட - அனைத்து கிராம மக்களும் கோரும், அல்லது கோர வேண்டுமென்று தெரிந்திருக்கும் அடிப்படை வசதிகள் கூட - இன்னும் செய்து தரப்படவில்லை என்பது முற்றிலும் புரியாத ஒன்று. ஒரு ஜனநாயக அமைப்புக்குள், இந்த மாதிரியான அடிப்படை வசதிகளுக்கான கோரிக்கைகள் அரசை நிர்பந்தப்படுத்தியாவது பெற்றிருக்க வேண்டும். ஆனால் இது இன்னும் நடக்கவில்லை. மூன்று உதாரணங்கள் மூலம் - குடிநீர், சுகாதாரம், குடியிருப்பு - ஏன் இந்த அவல நிலை என்பதை இந்தப் பகுதியில் பார்க்கப் போகிறோம்.



## குடிநீர்

1980களில் ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் மிஷன் அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் ஒரு திட்டத்தை நிருவியது.





பரவலாய் பயன்படுத்தப்பட்ட மற்றொரு முறை : ஆழ் கிணறு (bore-well) தோண்டி தண்ணீரை மேல்மட்ட தொட்டியில் ஏற்றி, தொட்டியிலிருந்து ஒவ்வொரு தெருவிலும் உள்ள குழாய்கள் மூலம் குடிநீரை விநியோகிப்பது. மேற்சொன்ன ஏதாவது ஒரு ஏற்பாடு இருந்தாலும்கூட குடிநீர் பெற்ற கிராமமாக அது கருதப்படும். இத்திட்டத்திற்கு பின்னர் 'பிரச்சினைக்குரிய கிராமங்கள்' என பதிவு செய்யபட்டிருந்த கிராமங்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து விரைவில் குடிநீர் இல்லாத கிராமமே இல்லை என்று சொல்லப்பட்டது.

இருந்தாலும் பிரச்சினைகள் போன பாடில்லை. கிராமங்களுக்குள்ளேயே இருக்கும் பல குக்கிராமங்கள் இத்திட்டங்களால் பயனடையவில்லை.




குக்கிராமங்களில் மூன்றில் ஒரு பகுதி இத்திட்டங்களால் பயனடையவில்லை. ஆகவே இந்த பிரச்சனையின் பால் கவனம் செலுத்தப்பட்டது. இப்போது 81% குடியிருப்புகள் இதன் மூலம் பயனடைந்திருப்பதாக கூறப்படுகிறது. கிராமப்புறங்களில் 79%ம், நகர்ப்புறங்களில் 84%ம் ஆகும்.


ஆழ்கிணறு முறையில் இரண்டாவது பிரச்சனை பம்புகள் அடிக்கடி பழுதாகி விடுவதும் அதன் இயந்திரப் பகுதிகளும் தொடர்ந்து பழுது பார்ப்பதற்கான உடனடி ஏற்பாடுகள் தேவைப்படுவதும். மார்க் III பம்புகளில் மேற்படி குறைகள் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டன. அது அமைக்கப்படும் போதே அப்பகுதி மக்களுக்கு அதைப் பழுது பார்க்கும் பயிற்சியும் அளிக்கப்பட்டு, பழுது பார்ப்பதற்கான கருவிகளும் (Tools Kits) வழங்கப்பட்டன. உத்திர பிரதேசத்தில் உள்ள பாண்டா போன்ற இடங்களில், பெண்களுக்கே




இதை பழுதுப் பார்க்கும் பயிற்சி அளிக்கப் பட்டது. இது உள்ளூர் பிரச்சினைகளுக்கு எப்படி தீர்வு காணலாம் என்பதற்கான ஒரு சிறந்த உதாரணம் என்றாலும், இப்படிப் பெண்களுக்குப் பயிற்சியளிப்பது என்பது அபூர்வமாகத்தான் நடந்தது. நடைமுறையில் இந்தப் பழுது பார்க்கும் பணி என்பது ஒரு பிரச்சினையாகவேதான் இருந்து வருகிறது.




உண்மைதான் - குடிநீர் தேவை இத்தனை பாதகத்தை உருவாக்க முடியாதுதான். ஆனால் அதிகப்படி நீர் பயன்படுத்தப்பட்டது நீர் பாசனத்திற்காகவே! குறிப்பாக கடந்த சில வருடங்களில் மூன்று போக அரிசி சாகுபடி, கரும்பு சாகுபடி என்று அதிகம் தண்ணீரை உட்கொள்ளும் சாகுபடி முறைக்கு மாறியதினால், நிலத்தடி நீர் மட்டம் திடீரென்று பெருமளவு கீழே போய்விட்டது. பணக்காரர்கள் தங்களது ஆழ் கிணறுகளை இன்னும் ஆழப்படுத்தி, ஏழைகளுக்குக் குடிக்கும் தண்ணீர் இல்லாமல் போன பிறகும் கூட இழுத்துக் கொண்டே இருக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் தேவை ஒருங்கிணைந்த, சமத்துவமான திட்டமிடுதல். ஆனால் இப்படிப்பட்ட விசயங்களை யாருமே எப்போதுமே கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை.








இது ஏனெனில், பல சமயங்களில் நீரில் இருக்கும் இரும்பு, மோசமான துர்நாற்றத்தையும், கசப்பையும் கொடுக்கின்றது. சில நேரங்களில் கலந்து இருப்பது



புளூரினாகவோ, ஆர்சினிக்காகவோ இருந்து விட்டால், இரண்டுமே ரொம்ப ஆபத்தானது. இரண்டுமே தொடர்ந்து விரிவடைந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளைத் தரக்கூடியது. அடிமட்ட நீர் குறைந்து போய்க் கொண்டிருந்தால், பாறை மட்டங்களில் இருந்து கசிந்து வரும் இராசாயனப் பொருட்கள் தண்ணீரை மாசுப்படுத்த விடுகின்றன. இந்த மாதிரியான பிரச்சினைகள் மேல்மட்ட நீருக்கு ஏற்படுவதில்லை. நிலத்தடி நீர் மட்டம் கீழேப் போக போக, நிறைய பிரச்சினைகள் இப்படி வரத்தான் செய்யும்.




ஆழ் கிணறு வழியாக நிலத்தடி நீர் எடுக்கும் போதே அது பெரும்பாலும் (அதற்காக எப்போதும் அப்படிதான் என்று அர்த்தமில்லை) பாதுகாப்பான தண்ணீராய் இருக்கும். திறந்த கிணற்று நீர் எளிதாக மாசுபட்டுவிடும். அதுபோலவே குளம், ஏரி, ஓடை போன்ற மேல்மட்ட நீரெல்லாம் ஏறத்தாழ எப்போதுமே மாசுப்பட்டதாகதான் இருக்கும். ஆனால், பல இடங்களில் சில குளங்கள் குடிநீருக்கென ஒதுக்கப்பட்டு அவைகளில் துணி துவைத்தல், குளித்தல், கால்நடைகளைக் குளிப்பாட்டுதல் போன்றவை தவிர்க்கப்பட்டு மாசுபடாமல் பாதுகாக்கப் படுகின்றனதான். இருந்தாலும் அவைகளில் ஓடிவந்து சேரும் மாசுகள் படிவதை தவிர்க்கவே முடியாது. பல கிராமங்களில் குழாய் கிணறு போட்டு கிடைக்கும் நிலத்தடி நீர் ஓரளவு நன்றாக இருந்த போதிலும், அதை தவிர்த்து திறந்தவெளி நீர் விரும்பப்படுவதற்கு சில பண்பாட்டுக் காரணங்களும் இருக்கின்றன. நீர்வழி நோய்கள் பற்றியும், அவைகளினால் ஏற்படும் சாவுகளைப் பற்றியும் போதுமான விபரங்கள் தெரியாத வரைக்கும், பாதுகாப்பான முறை வழியாக குடிநீரைப் பெறுவது பற்றி மக்கள் உணர மாட்டார்கள்.




நாம் சொல்லிக் கொள்ளும் 80%க்கு ரொம்ப ரொம்ப குறைவாகத்தான்!

NCAER தேசம் முழுவதும் செய்த ஒரு மாதிரி ஆய்வின்படி, 52% மக்கள் பாதுகாப்பற்ற குடிநீரை உபயோகிக்கின்றனர். பாதுகாப்பான குடிநீர் மூலங்களில் 16.6% குழாய் தண்ணீராகவும் (பெரும்பாலும் போர் கிணறுகள் மூலமாய்) 18.4% கைப்பம்பு தண்ணீராகவும், 13% திறந்தவெளி கிணறு போன்றவற்றின் மூலம் கிடைக்கிறது






என். சி. சேக்சேனா, செயலர், கிராம மேம்பாடு-
இந்தியன் எக்ஸ்பிரஸ், 26.04.2000

எப்போதுமே முன்னுரிமை கொடுக்கப்பட்ட குடிநீர் பிரச்சினைக்கே, அரசியல் உறுதியுடன் அணுகப்படும் குடிநீர் பிரச்சினைக்கே, இதுதான் நிலைமை என்றால், நமது நாட்டில் எத்தகைய மோசமான ஆட்சி நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

## பொருளாதார மறுசீரமைப்பும், குடிநீரும்

பொருளாதார மறுசீரமைப்பிற்கு குடிநீர் போன்ற பிரச்சினைகள் ஒரு பொருட்டே இல்லாமல் இருக்கலாம். சொல்லப்போனால் குடிநீர் எப்போழுதுமே ஒரு முக்கியமான பிரச்சினையாக இந்தப் பொருளாதார நிபுணர்களுக்குத் தோன்றியதில்லை. இருப்பினும் அரசு செலவினங்கள் இந்தப் பொருளாதார மறு சீரமைப்பினால் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆகவே குடிநீர் போன்ற சேவைகளும் குறைக்கப்படுகின்றன. மேலும் பொருளாதார சீரமைப்பு திட்டத்தின் ஆதரவாளர்கள் குடிநீர் விநியோகத்தைத் தனியார்மயப்படுத்தல் குறித்து யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.





இது ஒரு வினோதமான விவாதம், ஏனென்றால் . . .

1. குடிநீர் விநியோகம் தனியார்மயப்படுத்தப்பட்ட நாடுகளிலும், அதிகவிலை, மோசமான சேவை, தரக்குறைவு என பல புகார்கள் எழுந்து கொண்டுதான் இருக்கின்றன.

1. நம்மைப் போன்ற ஏழை நாடுகளில் பெருவாரியான மக்கள் குடிக்கும் தண்ணீரையே விலை கொடுத்துதான் வாங்க வேண்டும் என்ற கருத்தே ஏற்றுக் கொள்ளக் கூடியதல்லை.












தனியார் துறையையும், பொதுத் துறையையும் இரு முரண்பட்ட துருவங்களாக பார்க்க வேண்டாம். தனியார் துறையை கார்பரேட் துறையாக மட்டும் பார்ப்பதும், பொதுத் துறையை மையமாக்கப்பட்ட அதிகார அமைப்பாக மட்டும் பார்ப்பதும் சரியல்ல.



# சுகாதாரம்


சுகாதாரம் குறித்த நமது சாதனைகள் பரிதாபமானது. அது எப்போதுமே அப்படிதான் இருந்து வருகிறது. 29% மக்களுக்குத்தான் இப்போது கழிவறை வசதி இருக்கிறது.




இது போல கணக்கெடுத்தால்தான் 70% நகர மக்கள் கழிவறை வசதிகளுடன் இருப்பதாகச் சொல்லலாம். கட்டப்பட்ட ஒவ்வொரு கழிவறையும் உபயோகிக்கப் படுவதாக கணக்கெடுக்கப்படுகிறது. ஆனால் இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இப்படி அற்புதமான முறையில் அதிகப்படியாக வரும்படி கணக்கெடுத்தாலும் கூட, கிராமபுறக் கழிவறை வசதி 14% என்ற பரிதாபமான நிலையில்தான் உள்ளது.

இப்படி மிகைப்படுத்திக் காட்டினாலும் உலக சுகாதார அரங்கில் நமது சாதனை மிகவும் மோசமாய்தான் இருக்கிறது. வறுமை நாடுகளான உப-சகாரா ஆப்ரிக்க நாடான கென்யாவில் 81% டான்சேனியாவில் 86%, நைஜீரியாவில் 41%, உகாண்டாவில் 57% மக்கள் கழிவறை வசதிகளுடன் இருக்கின்றனர்.

சாக்கடை, கழிவுநீர், திட கழிவு பொருட்கள் நீக்கல் போன்றவைகள் கிராமம் நகர புறங்கள் இரண்டிலுமே ஒரே மாதிரி மோசமாகத்தான் இருக்கிறது.




நமது திட்டமிடும் அதிகாரிகள் சுகாதாரத்திற்காக கொடுத்துவரும் முக்கியத்துவத்தை கணக்கில் எடுக்கும் போது ஆச்சரியமாகத்தான் உள்ளது. சுகாதாரத்திற்காக அரசு செய்யும் செலவு மிகவும் குறைவு என்பது உண்மைதான். இருப்பதைக்கூடி உபயோகிப்பதில்லை என்று அரசு சொல்கின்றது. கட்டப்பட்ட கழிவறைகள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதில்லை அல்லது விறகு சேமிப்பது போன்ற வேறு உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

மற்றொரு ஆச்சரியமான புள்ளிவிபரம் நாம் சேர்த்து பார்க்க வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் நடந்த ஆய்வில், சுகாதார வசதி குறித்து விழிப்புணர்வும், கோரிக்கையும் மக்களிடையே வளர்ந்துள்ளது தெரிகிறது. பெண்களிடம் மிகவும்



அதிகமாக காணப்படுகிறது. ஏனெனில் இது பெண்களின் கண்ணியத்துடன் இணைந்த பிரச்சினையாகும். செடிகளும், புதர்களும் குறைந்து வரும் இந்நாளில் கழிவறைக்கான இடமே அவர்களுக்குப் பெரும் பிரச்சினையாகி உள்ளது.





**சரியான பதிலைத் தேர்ந்தெடுங்கள்**

கீழ்கண்டவைகளில் எது சுகாதார கோரிக்கைக்கு நெருங்கிய தொடர்புடையது?

| | |
|---|---|
| (அ) தலா வருமானம் | (இ) சுகாதார நிலை |
| (ஆ) வறுமை | (ஈ) கல்வி |

கல்வி தான் என்று நீங்கள் முடிவு செய்திருந்தால் - உங்கள் பதில் சரியானது! பெண் கல்வியும் அதன் விளைவாக பெண்களிடம் ஏற்பட்டுள்ள புதிய உணர்வுகளும் சுகாதாரத்திற்கு முன்னுரிமை அளித்துள்ளன. குறிப்பாக நகர்ப்புறங்களிலும், பெரிய கிராமங்களிலும், பெண் கல்வி வளர்ந்து வருகின்ற இடங்களிலும் இந்தத் தேவைகள் அதிகரித்துள்ளன. மாநிலங்களை ஒப்பிடும் போது சுகாதார நிலையில் முன்னேற்றம் என்பது கல்வியையும் மற்றும் பிரச்சனைக்குத் தீர்வு காண எடுக்கப்பட்ட தலையீடுகளையும் பொறுத்து உள்ளதாக தெரிகின்றது.


மற்ற முக்கியமான பிரச்சனைகளான கழிவுநீர் மற்றும் திட கழிவு அகற்றல் போன்ற பணிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் (தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், அதிகாரிகளும்) பங்கு தேவைப்படுகிறது. நகரப்பகுதிகளில் இவை வெளிப்படையான பிரச்சினைகள் கிராமப்புறங்களிலும் வாழ்க்கையின் தரத்தையும், ஆரோக்கியத்தையும் பாதிக்கும் பிரச்சினையாகவே இது இருக்கிறது.




குறைந்தபட்சம் நகர்புற பகுதிகளிலாவது, சுகாதாரம் யாரோ ஒருவரின் பணி. ஆனால் கிராமப்புறங்களில், இது யாருடைய பொறுப்பும் இல்லை!


## பொருளாதார சீர்திருத்தத் திட்டமும் சுகாதாரமும்

பொருளாதார சீர்திருத்த இலக்கியங்களில் மிகவும் குறைவாக விவாதிக்கப்பட்ட துறை சுகாதாரம்தான். இதெல்லாம் அவர்களுக்கு அக்கறை இல்லாத விசயங்களாகும். சொல்லப் போனால், பெரு நகர முனிசிபாலிடிகளைத் தவிர, மற்ற இடங்களில் சுகாதாரத்தை தனியார்மயமாக்குவதில்கூட அவர்களுக்கு அக்கறை இல்லை. இந்த சுகாதார குறைவு கூட பல கோடி ரூபாய் தொழிலுக்கு ஒரு வகையில் உதவுகிறது என்று சொல்லலாம் - கொசு மருந்து தயாரிப்பு தொழிலுக்குதான்!!




இதனால் தான் சுகாதாரத் துறையை மத்திய, மாநில அரசுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தாராளமாக ஒப்படைத்து உள்ளன. அதுவும் கொஞ்சம் கூட நிதி ஒதுக்காமல். அரசு நிதி ஒதுக்கீடு இன்னும் குறைக்கப்படுவதினால் உள்ளாட்சி அமைப்புகள் தாங்களாகவே நிதியை திரட்டிக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகின்றன.

### குடியிருப்பு




இது 1991 மக்கள் தொகை கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்ட தேசிய வீட்டுவசதி திட்டத்தின் 1998ம் வருட அறிக்கையின் மதிப்பீடு. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தப் பற்றாக்குறையைப் பூர்த்திச் செய்வதற்காகத் தேவைப்படும் குறைந்தபட்ச நிதி ரூபாய் 1,51,000 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது! இது தவிர நகர கட்டுமான வசதிகளுக்கு (Infrastructure) மேலும் 2,50,0000 கோடி ரூபாய் தேவைப்படும்.

இந்தியாவின் ஆரம்பகால திட்டங்களின் போது, வீட்டு வசதிகளைப் பொருத்தமட்டில் அரசின் செயல்பாடுகள் மிகவும் சிறப்பாக இருந்தன. ஆனால் இந்த கனவுகளுக்குத் தகுந்தார் போல் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்படவில்லை

**பட்ஜெட்டில் குறைந்து வரும் வீட்டுவசதிக்கான நிதி ஒதுக்கீடு**

| | **II திட்டம்** | **V திட்டம்** | **VIII திட்டம்** |
|---|---|---|---|
| மொத்த பட்ஜெட்டின்% | 2.5% | 1.5% | 1.47% |



வீட்டுமனை கட்டுவதில் தனியார் முதலீடுகளும் போதுமான அளவு அதிகரிக்கவில்லை. இருப்பினும் பொதுத் துறை முதலீட்டை ஒப்பிடும் போது, தனியார் முதலீட்டின் விகிதாசாரம் அதிகரித்து உள்ளது.

| திட்டம் | பொதுத்துறை முதலீடு | தனியார் முதலீடு | தனியா முதலீடு எவ்வளவு அதிகம்? | மொத்த முதலீட்டில் % |
|---|---|---|---|---|
| II | 300 | 900 | பொதுவைவிட 3 மடங்கு | 19% |
| VII | 25000 | 29000 | பொதுவை விட 10 மடங்கு | 9% மட்டுமே |

*Source : Economic Political Weekly : Social Impact of reforms Vol.35, No. 10, March 4-10 Pg 845*




பல மத்திய மாநில அரசு திட்டங்கள் மூலமாக, குறைந்த பொருளாதார வசதி கொண்டவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட மத்திய அரசின் பெரிய வீட்டுவசதித்திட்டம் இந்திரா அவாஸ் யோஜனவாகும். மாநில அரசின் வீட்டு வசதி திட்டங்கள் குறைந்தபட்ச தேவைகளுக்கான திட்டங்களின் (Minimum Needs Programme) கீழ் வருகின்றன. ஆனால் இந்த திட்டத்தின்கீழ் நமது தேவைகளுக்கு போதுமான வீடுகளைக் கட்டுவதில்லை.

### அப்படியென்றால் நமது அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும்?

**இப்படி!**

### கிராம வீட்டுவசதி அணுகுமுறை

1. கிராமப்புறங்களில் நிலம் எளிதாக கிடைப்பதால், கிடைக்கும் உள்ளூர் பொருட்களைக் கொண்டே மரபு முறையில் அந்தந்தக் குடும்பங் களுக்கு அவரவர்களே வீட்டைக் கட்டிக் கொள்ள முடியும். அனைத்து சீதோஷ்ண நிலைக்கும் ஏற்ற கட்டிடத்திற்கான தேவை எழுமானால், அதற்கான வருமானம் இருக்குமானால் தங்களது வீடுகளை அதற்குத் தகுந்தார் போல் சீரமைத்துக் கொள்ளலாம்.



2. இந்த அணுகுமுறையை இப்படித்தான் பார்க்க வேண்டும்
   (i) நிலம் ஒதுக்குதல்
   (ii) கிராம வீடுகளில் நடைமுறையில் இருக்கும் வாழும் வசதியை குறிப்பிட்ட கிராமபுறக் குடும்பங்களுக்குத் தங்கள் வீடுகளை அவ்வப்பொழுது சீரமைக்க உதவுதல் தேவையற்றது. கால இடைவெளிகளில் தரம் உயர்த்துவதற்கு உதவுதல்.
   (iii) கிராமமக்களுக்கு குறைந்தபட்ச கூலியையும். வேலைவாய்ப்பையும் உறுதி செய்தல்.
   (iv) நியாயமான வட்டிக்குக் கடன் கிடைக்க உதவுதல்
3. கான்கிரீட் வீடுகளைக் கட்டுதல் தேவையற்றது.

## நகர வீட்டுவசதி நிலைமை




1947ல், நமது மொத்த மக்கள் தொகை 33 கோடியாக இருந்தது. அவற்றில் 14% நகரத்தினர் ஆவார்கள், 2001ல் நகரவாசிகள் தொகை மொத்த மக்களில் 33% ஆகும். அதாவது 33 கோடி மக்கள் நகரத்தில் வாழ்பவர்கள். அதாவது. சுதந்திரன் போது இருந்த மொத்த இந்திய மக்கள் தொகைக்கு சமமாகும். 2025ல், நகர மக்கள் தொகை 50% த்தைத் தாண்டிவிடும்.


### எப்படி இந்த மக்கள் தொகை பரவிக்கிடக்கிறது?

மெகாநகரங்கள்ல் (மும்பை, கல்கத்தா, டெல்லி, சென்னை, பெங்களூர். ஹைதராபாத்(, ஒவ்வொன்றிலும் 40 இலட்சம் பேருக்கு மேல். 40 மாநகரங்களும், 300 பெரிய நகரங்களும் (மக்கள் தொகை 11 இலட்சத்திற்கு மேல்), 3396 சிறு நகரங்களும் மீதி மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. 2001இல் மொத்த தேசிய உற்பத்தியில் 60% நகரங்கள் மூலமாகத்தான் கிடைக்கும்.


*மூலம் சுரேஷ் முருகப்பா, டைரக்டர் ஹட்கோ. புதிய மிலினியத்தில் நகர மற்றும் கிராம மேம்பாட்டுக்கான திசைவழி*

### நகரப்புற மக்கள்

ஓரளவு குடிநீர்வசதி உடையவர் - 84%
சாக்கடை. சுகாதார வசதி உடையவர் - 46%
கழிவற்ற வசதி உடையவர் - 31%
கழிவாற்றும் வசதியற்றவர் - 38%
மின்வசதி அற்றவர் - 25%
ஆரோக்கியமற்ற மாசுபட்டசூழலினால்
பெரும்பாலான நகரபுறத்தார்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.









குடிசைப் பகுதிகளில் எந்த சுகாதார வசதியும் இல்லை. மிகக் குறைவான வீட்டு வசதியே உள்ளது. மக்களுக்கு வீட்டுமனைக்கான உரிமையோ அல்லது அரசின் மருத்துவ வசதிகளைப் பெறும் வாய்ப்போ இல்லை.

### குடிசை பகுதிகளின் மூன்று அம்சங்ளைப் புரிந்து கொள்ளுங்கள்

1. பெரும்பான்மையான குடிசைப் பகுதிகள் சட்டத்திற்கு புறம்பானவை அல்ல. பல பகுதிகள் சட்ட அங்கீகாரமும். அனுமதியும் பெற்றுள்ளன. பல அனுமதி பெற்ற குடியிருப்புப் பகுதிகள்தான் முற்றிலும் புறக்கணிக்கப்படுகின்றன. இவை தவிர. அவைகள் அரசியல் ரீதியாய் செல்வாக்கு செலுத்த முடியாத பட்சத்தில், நமது அனைத்து திட்டவியலாளர்களாலும் புறக்கணிக்கப் படுகின்றன.
2. இன்று பல சட்டப்பூர்வமான குடிசைப் பகுதிகள் சட்டபூர்வமற்றுதான் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் அவைகள் பாதுகாப்பாயும் கௌரவமாயும் வாழும் உரிமையைப் பல நீண்ட போராட்டங்களுக்கு பின்னர் பெற்றுள்ளனர். பெரும்பாலும் இந்த உரிமைகள் அரசியல்வாதி களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெறப்பட்டவையாகும்.




3. இந்த மாதிரியான மோசமான குடியிருப்புகள் நடைபாதை குடியிருப்புகள். இவற்றில்கூட சமூகக் கூட்டமைப்புகளும். மக்களிடையே பிணைப்புகளும் உருவாகின்றன. இந்த சமூகங்கள் தங்கள் வீடுகளை தாங்களே கட்டிக் கொள்கிறார்கள். இவர்கள் அனைவரும் நகரபுற பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறார்கள். அவர்கள் வகிக்கும் இடம் அவர்களது பொருளாதா வாழ்வுக்கு ஆதாரம். அவர்கள் புலம் பெயரச் செய்யப்பட்டாலும். நகரத்திற்கு அவர்களது உழைப்பு தேவைப்படுவதாலும். அவர்களுக்கும் வேலைவாய்ப்பு தேவைப் படுவதாலும். அவர்கள் திரும்பவும் பழைய இடத்திற்கே வந்து சேருகிறார்கள்..




இந்த மாதிரியான மனப்போக்கினால்தான், குடிசைப் பகுதிகள் மாற்றப்படுவதும், அழிக்கப்படுவதும் நடக்கிறது. அழகியல் காரணங்கள் (அழகுப்படுத்தும் பிரச்சாரம்), வீட்டுத் தரம், அதன் சட்டப்பூர்வமான தன்மை போன்றவற்றை வைத்து இவற்றை அகற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லப்படுகிறது. இதுதான் 60 களில் இருந்து 80 வரை இருந்த போக்கு. 1982-84 களில் பல மாநில அரசுகள் ஆக்கிரமிப்புக்கு எதிரான சட்டங்களை இயற்றின.

இவை வியாபார நோக்கில், அனுமதியற்ற கட்டிடங்களுக்கு தடை விதிக்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இன்றைய அதிகார அமைப்பில் இவை ஏழைகளுக்கு எதிராகத்தான் பயன் படுத்தப்படுகின்றன. ஏழைகளின் ஆக்கிரமிப்புகளை சிவில் குற்றம் என்பதில் இருந்து கிரிமினல் குற்றமாக மாற்றியதின் விளைவாய், இச்சட்டம் ஆயிரக்கணக்கான மக்களை கிரிமினல்களாக்கியது. இது அவர்களை இன்னும் அதிகமான சுரண்டுதலுக்கும், துன்புறுத்தலுக்கும் ஆளாக்கியது.

### பேராசை - அழகியல் காரணம் காட்டி அப்புறப்படுத்தலின் அசிங்கமான மறுபக்கம்

அடிப்படை சீரமைப்புகளை வேண்டுமென்ற சில பகுதிகளில் மட்டும் மேம்படுத்துவதின் மூலமும், குறிப்பிட்ட இடங்களில் அரசு மற்றும் வணிக வளாகங்களை ஏற்படுத்துவதின் மூலமும், நிலமனையின் விலை எக்கச்சக்கமாய் ஏறிவிடுகிறது.

நிலவிற்பனையாளர்கள், மற்றும் சூதாடிகள் ரியல் எஸ்டேட் உரிமையாளர்கள் இத்தகைய அப்புறப்படுத்தலினால் பெரும் பலன்களை அடைகிறார்கள். ஆகவே தங்களுக்கு இருக்கும் அரசியல் செல்வாக்கை பயன்படுத்திக் கொண்டு அதற்கான காரியத்தை தூண்டி விடுகிறார்கள். பல சமயங்களில் மத்திய தர வர்க்கத்தினர்கள் கூட நகரின் மையங்களை விட்டுப் புலம் பெயர்ந்து, தூரத்தில் உள்ள போதுமான கட்டுமான வசதிகள் இல்லாத புறநகர்களில் வாழ நேரிடுகிறது.






## பொருளாதார மறு சீரமைப்பினால் வீட்டு வசதிகள் பாதிக்கப்படுதல்

வீட்டுவசதி உரிமைக்கான தேசிய பிரச்சாரம் கூறுவது என்னவென்றால் : பொருளாதார மறுசீரமைப்பினால் விளையும் வேலையில்லா திண்டாட்டம், ★ கடுமையான விலைவாசி உயர்வு, ★ சுகாதாரம் போன்ற சமுதாயத் துறைகளுக்கான மானியங்களின் குறைப்பு ★ தனியார்மயமாதலின் தாக்கம் ★ திட்டமிடும் பொறுப்பை அரசு கைவிடுதல், இவை அனைத்தும் சேர்ந்து நிலம், வீடு இவற்றின் மதிப்பை உயர்த்துகின்றன. ஏழைகள் கிரிமினல்களாக்கப்படுகின்றனர்; லாபம் ஈட்டுவதற்காக நிலப்பிரபுக்கள் குடிசைப் பகுதிகளை அகற்றிவிட்டும், அழித்து விட்டும், நிலத்தைக் கைப்பற்றுவது அதிகரிக்கிறது.

பொருளாதார மறுசீரமைப்பினால் மேற்கண்ட போக்குகள் அனைத்தும் தீவிரமடையப் போகின்றன.

நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1976 ஒன்றுதான் நகரக் குடியிருப்பு தொடர்பாக அரசு இயற்றிய ஒரே முற்போக்கான சட்டம் ஆகும். இப்போது அது கூட சந்தை சக்திகள் ஆதிக்கம் செலுத்துவதற்காக ரத்து செய்யப்பட்டு விட்டது. உண்மை என்னவென்றால், கிராமப்புற நில உச்சவரம்புச் சட்டம் போல் நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டமும் நடைமுறைப்படுத்தப் படவில்லை. நகர உச்சவரம்பு சட்டத்தின் கீழ் ஒரு நிலமும் கையகப்படுத்தப்படவில்லை; அரசிடம் ஒப்படைக்கப்பட்டு விற்பனை செய்யப்படவில்லை.

மேற்சொன்னவைகள் பொருளாதா மறுசீரமைப்பின் கீழான நிபந்தனைகள் என்று சொல்ல முடியாது. ஆயினும், இவைகள் 70களின் ஆதரவு தேடும் சோசலிசத்திலிருந்து 90களின் மூர்க்கத்தனமான சந்தையியத்திற்கு செய்த மாற்றத்தைக் குறிக்கின்றன. சமுதாய குடியிருப்பு என்ற குறிக்கோளை கைவிடப்பட்டுவிட்டது. குடியிருப்புகள்மூலம் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஓரளவு குறைக்க முடியுமென்ற கருத்து கைவிடப்பட்டுவிட்டது.

- ஜெய் சென், கன்வீனா NCHR

# அத்தியாயம் 3

# வெற்றிகளிலிருந்து பாடம் கற்றல்

## 1. கேரள நிகழாய்வுகள் பரவலாக்கப்படுதலில் இருந்து பெற்ற அனுபவங்கள்

1996 கேரள அரசு ஒரு மாபெரும் அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரப் பரவலைத் தொடங்கிற்று. சும்மா பெயருக்கு இல்லை, மொத்த கேரள பட்ஜெட்டின் 40% பஞ்சாயத்துக்களுக்கே கொடுக்கப்பட்டுவிட்டது.




இந்த மாபெரும் பரிசோதனையை மேற்கொள்ளுவதற்கு இரண்டு பெரும் காரணங்கள் உள்ளன.

ஒன்று ஆளும் கட்சிக்குள் இருந்தே வந்தது. மாநில அரசுகளுக்குக் குறைந்தபட்ச அதிகாரங்களே உள்ளன. சொத்து மற்றும் வருமான விநியோகத்திலும், செல்வந்தர் களிடமிருந்து நிதி திரட்டுவதிலும், ஒரு மாநில அரசு பெரிய மாற்றம் எதையும் செய்ய முடியாது. ஆயினும், அரசு மக்களது எதிர்பார்ப்பை நிறைவேற்ற ஒரு வழி கண்டுபிடித்தாக வேண்டும்.

இரண்டாவது காரணம் அதிகாரப் பரவல் ஒரு மகத்தான கொள்கை என்ற நம்பிக்கை ஜனநாயகப் பங்கேற்பிற்கும், மக்களை அதிகாரம் படைத்தவர்களாய் ஆக்குவதற்கும் அவசியம் தேவை. இதனை வலியுறுத்தி KSSP போன்ற அமைப்புகள் விடாது செய்த தொடர் பிரசாரமும் இந்த இலட்சியத்தை அடைவதற்காக மேற்கொண்ட முயற்சிகளும்

### அதிகாரப் பரவல் சிறப்பாக அமையத் தேவையானவை

சிறப்பான அதிகாரப்பரவல்

- நிதி ஆதாரங்களை கீழ் மட்டத்தினருக்கு அளித்தல்
- நலிவடைந்தோர்களுக்கான திட்டங்களை அவர்களுக்கு ஏற்றவண்ணம் மாற்றி அமைத்தல்
- ஸ்தாபனங்களை தேர்ந்து எடுக்கப்பட்ட உள்ளூர் அமைப்புகளிடம் ஒப்படைத்தல்.
- திறமைகளை வளர்த்தல்
- உள்ளூரில் திட்டமிடுதல்



பல மாநிலங்களில், இந்த மாதிரியான அடிப்படை வசதிகளை செய்து தருவது பஞ்சாயத்தின் தலையாய கடமை - இன்னும் சொல்லப் போனால் பஞ்சாயத்தின் ஒரே கடமை - என அரசாங்கம் நினைக்கிறது. ஆனால் இவற்றை செய்வதற்கு பஞ்சாயத்திற்கு நிதி ஆதாரமும் கிடையாது. சுதந்திரமும் கிடையாது. கேரளாவில் இந்த இரண்டு அடிப்படைகளும் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கேரள அதிகாரப் பரவல் முயற்சி இவற்றுடன் இல்லாமல் மருத்துவ மற்றும் கல்வித் துறை, கிராம மேம்பாடு, வறுமை ஒழிப்புத்திட்டங்கள், பெண்கள் நலன் விவசாயம், நீர்பாசனம், சிறுதொழில், குடிசைத் தொழில் இவற்றையும் மேற்கொண்டிருக்கிறது.

இந்த எல்லாத்துறைகளுக்கும், அதிகார பரவல் மூலம் நிதி ஆதாரங்கள் அளிக்கப்பட்டன. நிறுவனங்கள் மாற்றிக்கொடுக்கப்பட்டன. உள்ளூர் திறமைகள் வளர்க்கப்பட்டன. உள்ளூரில் திட்டமிடுவதற்கான வழிமுறைகள் நிறுவப்பட்டன. ஆகவே முதல் முறையாக நல்வாழ்விற்காகப் பல்துறை இணைந்த திட்டமிடுதல் சாத்தியமானது.





முதல் வருடம் பஞ்சாயத்துக்கள் முழு வீச்சுடன் செயல்படவில்லை. ஏனெனில் அவைகள் அப்போதுதான் இந்த அமைப்பைப் புரிந்து கொள்ளத் தொடங்கியிருந்தன. எல்லா மட்டத்தில் இவ்வளவு நாள் அனுபவித்தவர்களின் எதிர்ப்பை எதிர்கொளள் வேண்டியிருந்தது. ஆனால் வருடங்கள் செல்ல, செல்ல நிலைமை சீரடைந்தது. முதல் சில வருடங்களிலேயே, 50 வருடங்களாய் கோரிக்கைகளாய் இருந்த பல அடிப்படை வசதிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு விட்டன.



## நிதியாதரங்களை கீழ்மட்டங்களுக்கு பகிர்ந்தளித்தல்


பஞ்சாயத்துகளுக்கு மாநில பட்ஜெட்டில் 40% அளித்தல் என்ற அரசியல் முடிவு எடுக்கப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்பட்ட நிதி 1997-98ல் ரூபாய் 1025 கோடி, 1998-99ல் ரூபாய் 1178 கோடி, 1999-2000ல் 1250 கோடி.

சராசரியாக ஒரு கிராம பஞ்சாயத்து ரூபாய் 60 இலட்சமும், பிளாக் பஞ்சாயத்து ரூபாய் 90 இலட்சமும், மாவட்ட பஞ்சாயத்து ரூபாய் 10 கோடியும் ஒவ்வொரு வருடமும் திட்ட உதவி பெறுகின்றன. கிட்டத்தட்ட ஒவ்வொரு நகராட்சியும் ரூபாய் 1 கோடியும், ஒவ்வொரு கார்பரேஷனும் ரூபாய் 15 கோடியும் பெறுகின்றன. ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் தனக்கு அளிக்கப்பட்ட நிதியாதரங்களுக்கு உட்பட்டு, தனது தேவைகளைக் கண்டுபிடித்து, அதற்கான தீர்வை வரையறுத்து தீர்க்கும் அதிகாரம் பெற்றுள்ளது.




### நிதியாதாரம் பகிர்ந்தளிப்பதின் நடைமுறை விபரங்கள்

உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு நிரந்தர வரையறையின் படி நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது. கிராம-நகர பாகுபாடு மக்கள் தொகையின் அடிப்படையில் செய்யப்படுகிறது. SCP / TSPயின் கீழ் திட்ட உதவி விநியோகிக்கும் போது கிராமபுறத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதுதவிர விரிவான துறைவாரியான வரைமுறைகளும் உண்டு. குறைந்தபட்சம் 40% திட்ட உதவி நிதி அனுமதியை உற்பத்தி துறைக்கும், 30% திற்கு மேல் மிஞ்சி போகாதபடி அடிப்படை கட்டுமானத்திற்கும் பயன்படுத்தலாம். SCP / TSP பகுதிக்கு இந்த உச்ச வரம்பு கிடையாது. நிதியில் 10% நிச்சயமாய் பெண்களுக்காக செலவு செய்ய வேண்டும் என்பது கட்டாயமாக்கப் பட்டுள்ளது. பல மத்திய திட்டங்களில் இருந்து வரும் நிதியும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படுகிறது. பஞ்சாயத்துகள் அவற்றையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.






## நிறுவனங்கள் மாற்றுதல்

மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்பட்டனர். உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில், மாநில அரசு பணி நியமனம், பணி உயர்வு, பணிமாற்றம் மற்றும் சம்பளம் போன்றவற்றை கவனித்துக் கொள்கிறது. மருத்துவ நிறுவனங்கள் தொடர்பான நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்கள் உள்ளாட்சி அமைப்புகளிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பந்தபட்ட துறை வழியாக மாநில அரசு பெயர்ரீதியான அதிகாரம் மட்டும்தான் தன் கையில் வைத்திருக்கிறது.

அந்தந்த நிறுவன மருத்துவ அதிகாரிகள் தரும் விபரங்களின் அடிப்படையில் மருந்தும் மருத்துவக் கருவிகளும் மொத்தமாக வாங்கப்பட்டு, மாவட்ட மருத்துவ அதிகாரிகள் மூலம் அந்தந்த நிறுவனத்திற்கு அளிக்கப்படுகிறது.

திட்ட நிதி உதவி போக, அந்தந்தத் துறைகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அன்றாட நிர்வாகம், மற்ற செலவுகளுக்குத் தேவையான அவசியமான நிதியை அளிக்கின்றன. அவசரத் தேவையான மருந்துகளை வாங்கவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் உண்டு. மருத்துவர்கள் குறைவாக இருந்தால் உள்ளாட்சி அமைப்புகள் மருத்துவர்களை தற்காலிக நியமனம் செய்யவும் அனுமதி உண்டு. அதற்கான சம்பளம் மாநில அரசால் வழங்கப்படும்.






## திறமைகளை வளர்ப்பதும், உள்ளாட்சி நிலையில் திட்டமிடுதலும்

உள்ளாட்சி நிலையில் திட்டமிடுதலுக்கு அப்பகுதியின் முன்னிலைப் பிரச்சினைகளைக் கண்டறிதலும் அவற்றைத் தாக்கும் வழிமுறைகளைக் கண்டறிதலும் மிகவும் அவசியமாகும். சமூகத்தில் நலிவுற்றவர்களுக்கான திட்டங்களை மறுவடிவமைப்பு செய்து அவற்றிற்கு வலுவூட்டுவது அவசியம். நடைமுறையில் இருக்கும் அரசாங்கத் திட்டங்கள் வடிவமைப்பில் குறையுடையவை. அவைகள் அனைத்துப் பகுதிகளுக்கும் அதிகாரப் பரவலாக்கப்பட்ட அமைப்புக்கு உகந்தவை அல்ல. மையத்திலிருந்து இயக்கும் ஒரே வகையான தொழிற்நுட்பத்தை வைத்துக் கொண்டு நடத்தப்படும் அணுகுமுறைக்குத்தான் ஏற்றவை. தற்போதைய திட்டங்கள் பெரும்பாலும் பகட்டுக்காகத்தானே ஒழிய, வெற்றி அளிக்கக்கூடியவை அல்ல. இத்தகைய திட்டங்களை மறு வடிவமைப்பு செய்யாமல் அப்படியே ஏற்றுக்கொண்டால் அவற்றின் திறன் அதிகரித்து விடாது.


வளர்ச்சிப் பணிகளில் மக்களைப் பங்கெடுக்க வைப்பதின் அவசியத்தை ஒன்பதாம் திட்டத்திற்கான மக்கள் இயக்கம் உணர்த்தியுள்ளது. திட்டமிட தொடங்குவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட முறையான விரிவான பயிற்சிகள் இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான திறமைகளை உருவாக்கிற்று. KSSP போன்ற அமைப்புகள், அரசு அதிகாரிகள் போன்றோர்களின் உதவியுடன், பஞ்சாயத்துக்கள் செலவுத் திட்டங்களையும் உருவாக்கி அவற்றை செயல்படுத்த முயன்றன. சுகாதாரத் துறையில், இந்தத் திட்டத்தின் மூலம் பெருமளவு உள்ளூர் முயற்சிகள் தொடங்கின. உள்ளூர் அமைப்புகளில் இருந்து பல புதுமையான ஒருங்கிணைந்த திட்டங்கள் சிறிது சிறிதாக வந்து கொண்டிருக்கின்றன.

முதல் மூன்று வருடங்களில் மாற்றங்கள் மெதுவாகத்தான் ஏற்படுகின்றன என்றாலும் திறமைகள் வளர்ந்து கொண்டிருப்பதினால், வரும் வருடங்களில் நல்ல பயன்களைத் தரும் என எதிர்பார்க்கலாம். நிச்சயமாக அவை சரியான திசையில்தான் சென்று கொண்டிருக்கின்றன.!

## 2. மிட்னாபூர் சுகாதாரத் திட்டம்

**உங்களுக்குத் தெரியுமா?**

**மிட்னாபூர் மாவட்ட சுகாதாரத் திட்டம் மூலம் 1.5 இலட்சம் கழிவறைகளைக் கிட்டத்தட்ட எந்தவித மானியமும் இல்லாமல் வீடுகளில் கட்டப்பட்டிருக்கின்றன.**






**நாம் இதன் சில முக்கியமான அம்சங்க்ளைப் பார்ப்போம் . . .**

1 மாவட்ட நிர்வாகம், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து, ராமகிருஷ்ண மிஷன் என்ற NGO மூன்றுக்கும் ஒரு கூட்டு ஏற்பட்டது.

2. இத்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பாக அனைவருக்கும் எழுத்தறிவு என்ற பிரச்சாரத்திற்காக பெருமளவு மக்களைத் திரட்டுதல் நடைபெற்றிருந்தது. தொடர்ந்து நடந்த இந்த சுகாதாரத் திட்டமும் கூட ஒரு மாபெரும் மக்களைத் திரட்டும் கல்விப்பணிதான். உண்மையில் இந்த "IEC" என்பதுவே அரசு மிகவும் கவனம் செலுத்திய ஒரு முக்கிய திட்டமாகும்.

3. கழிவறையைத் தருவது என்பது 'சுகாதார சந்தை' என்ற கருத்தை பின்பற்றி செய்யப்பட்டது. இந்த 'சுகாதார சந்தை' கழிவறைக்கான அனைத்துப் பொருட்களையும், கட்டிட சாமான்களையும் மற்றும் சுகாதாரத்திற்குத் தேவையான மற்ற தளவாடங்களையும், சிறிது இலாபம் வைத்து விநியோகம் செய்தது. அனைத்துமே குறைந்த, கொடுக்க முடிந்த விலையிலேயே கிடைத்தது. தயாரிப்பு மையங்களில் சுகாதார தளவாடங்களைத் தயாரிப்பதும், சுகாதார சந்தையை நடத்துவதும் உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தியது. இந்த இளைஞர்களுக்குப் பயிற்சியும், கொஞ்சம் முதலீடும், உதவியும் முதல் வருடத்திற்கு கொடுக்கப்பட்டது. பயிற்சிப்பெற்ற உள்ளூர் கொத்தனார்களை வைத்து முதலில் கழிவறைகள் அமைக்கப்பட்டன. இந்த திட்டத்தினால் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு ஏராளம். சுகாதார தளவாட தயாரிப்பு மையம், சுகாதார சந்தை, கொத்தனார்கள் மூன்றுமே வெவ்வேறான அமைப்புகள் என்பதை நாம் பார்க்க வேண்டும். இவை மூன்றுமே இணைக்கப்பட்டதினால் மூன்றுபேருமே ஒவ்வொருவருக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி விடுகிறார்கள்.

4. இதற்கு எந்த மானியமும் வழங்கப்படவில்லை. அப்படி ஏதாவது பணம் கிடைத்தாலும், அது தட்டு அல்லது தடுப்பு போன்ற சுகாதார தளவாடங்களை சகாயமாக் கொடுப்பதன் மூலமோ அல்லது இது போன்ற வேறு வகைகளிலோ அது நுகர்வோர்களுக்கே போய் அடைந்து விடும் படி செய்து விடுகிறார்கள்.

5. கழிவறை வடிவமைப்பிலும், விலையிலும் ரொம்ப நெகிழ்வு இருந்தது. மொத்தம் எட்டு வித்தியாசமான வடிவமைப்புகள் இருந்தன. அதிலிருந்து நுகர்வோர் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மேலும் இதில் உள்ள வடிவமைப்புகளின் தரத்தை உயர்த்த முடியும். ஒருவர் 600 ரூபாயிலிருந்து ஆரம்பித்து மேல்தட்டுமானத்துடன் கூடிய இரண்டு தொட்டியுள்ள ரூபாய் 6000 கழிவறை வரை மேம்படுத்திக் கொள்ளலாம். தயாரிப்பில் உழைப்பைக் கொடுத்தோ அல்லது தயாரிப்புப் பொருட்களைக் கொடுத்தோ, நுகர்வோர் இன்னும் அதன் வாங்கும் விலையைக் குறைப்பதற்கான வாய்ப்பும் உண்டு.

6. இதில் பஞ்சாயத்துக்கள் அனைத்துக் கட்டங்களிலும் முறையாகப் பங்கெடுத்தது. சில பகுதிகளில் வெற்றிகரமாக வராவிட்டாலும், பஞ்சாயத்தே சுகாதார சந்தையை நடத்தியது.

7. இதே திட்டத்தை மற்ற பகுதிகளில் நடத்துவது அவ்வளவு எளிதாக இல்லை. நுகர்வாளர்களுக்குக் கடன் அளித்தாலோ, அல்லது பணத்தை தவணை முறையில் கட்டச் சொன்னாலோ, பெருமளவு முன்முதலீடு தேவைப்படுகிறது.

8. அந்தப் பகுதிகளில் இதைப் போன்ற எந்த திட்டமும் மானிய முறையில் நடத்தப்பட கூடாது.

9. IEC யின் கீழ், உள்ளூர் நிறுவனங்களுக்கு ஆதரவு அளித்து, அவர்களது பொருள்களை விற்க அரசின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். கூட்டு முயற்சி என்ற கருத்தைப் பல இடங்களில் கடைபிடிப்பது அரசுடனாவது அல்ல NGO அல்லது இரண்டாவது - கடைப்பிடிப்பது என்பது. ஏனெனில் அவைகள் தாங்கள் தனியாகவே அதை செய்ய முடியும் என நம்பும். ஆனால், அவர்களால் அதைச் செய்யவும் முடியாது.

**தலையாய சாதனைகள் . . .**

உள்ளூர் மக்களைப் பங்கெடுக்க வைக்கும் சுகாதாரம் சம்பந்தப்பட்ட மானியம் இல்லாத தொடர்ந்து இயங்கும் ஒரு திட்டத்தை நடத்திக்காட்டுவது சாத்தியம்தான் என்பதை மேற்சொன்ன உதாரணம் நிரூபிக்கிறது. இதற்கு முந்தைய திட்டங்கள் மானியம் நிறுத்தப்பட்டவுடன், அவையும் நின்று போகும். ஆனால் இத்திட்டம் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருந்தது. இது நூற்றுக்கணக்கான பேருக்கு (கொத்தனார்கள், உற்பத்தி மையங்கள், சந்தை மேலாளர்கள்) வேலைவாய்ப்பு அளித்தது. அதன்மூலம் உள்ளூர் பொருளாதாரம் உயர்ந்தது.

## 3. இடமும் சேவையும் என்ற வழி

**பிலாஸ்பூர் ஆஷா அபியான் மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டு / மறுகுடியிருப்புத் திட்டங்கள்**



குடிசைப்பகுதிகளில் வாழும் ஏழைகள் நகரத்தின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பு செய்கிறார்கள். பாதுகாப்பான, கண்ணியமான வாழ்க்கை நிலையைப் பெற அவர்களுக்கு நிச்சயம் உரிமை உண்டு.

இது நடப்பதை எப்படி உறுதி செய்வது?



**கீழ்கண்ட எட்டு வழிகளைக்கடைப்பிடித்தால் பூமியிலேயே சொர்க்கத்தைக் காணலாம்.**

1. முதலில் ஒரு நிறுவன அமைப்பை ஏற்படுத்துங்கள். அது பதிவு செய்யப்பட வேண்டும். அனைத்து குடும்பங்களும் அதில் சேர வேண்டும். ஆண் பெண் இருவரும் போதுமான அளவு கலந்து இருக்க வேண்டும்.




கவனமாக இருங்கள். உண்மையான குடியிருப்பாளர்களைக் கண்டுபிடியுங்கள். குடிசைப் பகுதிகளில் ஒரு சில "தாதாக்கள்" பெரும்பகுதி நிலங்களைக் கட்டுக்குள் வைத்திருப்பார்கள். அவர்கள் மூன்று குற்றம் புரிந்த குற்றவாளிகள். (1) அவர்கள் நிலத்தைச் சட்டத்துக்குப் புறம்பாக ஆக்ரமித்துள்ளார்கள். (2) அவர்கள் அதை சட்டத்துக்கு புறம்பாக வாடகைக்கு விட்டு, குடியிருப்பவர்களிடமிருந்து வாடகை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். (3) அவர்கள் தங்களுக்குச் சொந்தமில்லாத இடத்திலிருந்து வாடகையை வசூலிப்பதற்காகவோ அல்லது வேறு பயன்களுக்காகவோ தங்கள் விருப்பம் போல் அவர்களைக் காலி செய்ய வைக்கிறார்கள்.

2. எந்த மறுகுடியிருப்புகளிலும், உரிமைகளை உண்மையிலேயே குடியிருப்போர்களுக்குக் கொடுங்கள். பினாமி ஆட்களுக்குக் கொடுக்காதீர்கள். இல்லையென்றால் தாதாக்களிடம்தான் அதிகாரம் இருக்கும். இது மிகவும் அவசியம். ஏனெனில் தாதாக்கள் அரசியல் செல்வாக்கும், கிரிமினல் தொடர்பும் கொண்டுள்ளவர்கள்.
3. குடியிருக்கும் அனைவருக்கும் குறைந்தபட்ச இருப்பிடத்தை ஒதுக்கி, அதற்கான சொத்து உரிமையை சட்டபூர்வமாகப் பெற்றுத் தருவதாகச் சொல்லுங்கள். அதற்கு பதிலாக அவர்கள் தங்களுக்குள்ளேயே அனைவருடைய வீடுகளையும் அதே இடத்தில் இருக்குமாறு பார்த்து, திட்டமிட்டு, அனைவருக்கும் குறைந்தபட்ச இடமும், பொருத்தமான கழிவுநீர் வசதிகளும், குடிநீர் இணைப்புகளும், தெருக்களும், விளையாட்டு மைதானமும் ஏற்படுத்தி தருவார்கள்.
4. வீட்டைக் கட்டுவதற்கான செலவு அவரவர்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். அரசு அதே சொசைட்டி மூலம் கடன் வசதி கிடைக்க முயற்சி மேற்கொள்ளும்.
5. குடிசைப்பகுதி மற்றும் தனிப்பட்ட வீடுகளுக்கான வடிவமைப்பு வெளியில் இருந்து கொடுப்படுவதில்லை. கட்டடக்கலைஞர்கள் மக்கள் நல்ல அதலனை தேர்ந்தெடுக்க உதவலாம். (மஹிளா மிலான் போன்ற திட்டத்தில், 600 நடைபாதையில் வாழும் பெண்கள் தாங்களே தாங்கள் வாழும் வீடுகளை வடிவமைப்பு செய்தார்கள்)
6. கட்டிட வேலைகள் ஆரம்பித்ததும் அங்குள்ள குடும்பங்கள், தேவையான வகையில் குடியிருப்புகளை கட்டும்வரை, வேறு இடங்களுக்குச் சென்று விடுவார்கள்.
7. இந்தக் கட்டத்தில் நகராட்சிகள் கழிவுநீர் வசதி, குடிநீர், மற்றும் மின்சாரம் போன்றவைகளை அமைத்துக் கொடுக்க வரும்.

8. அதற்கு பின்பு உடன் தேவையான மற்ற காரியங்களையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். வேலைவாய்ப்பு தரும் தொழிற்கல்வி, உடல்நலப் பராமரிப்பு, குழந்தைகளுக்கான பகல் பராமரிப்பு மையம் போன்றவற்றை தொடங்கலாம். இவ்வாறு மக்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் தங்கள் விருப்பப்படியே அடிப்படைத் தேவைகளை அடைய முடியும்

மேற்படி திட்டத்தில் இரண்டு முக்கியமான அம்சங்கள் எவையென்றால் உள்ளூர் நிலையில் ஒரு நிறுவன ஏற்பாட்டைக் கட்டியமைத்து அதைத் தொடர்ந்து காப்பதுவும். சேரியில் குடியிருப்போர்களுக்கு, அங்கு குடியிருக்காத சேரிதாதாவைத் தவிர்த்து, நிலை உரிமையைப் பெறுவதும்தான் ஆகும். சேரிதாதாக்களைச் சேர்க்காதனால்தான் இதை முன்னெடுத்து செய்யும் அதிகாரிகள் பெரும்பாலும் பணிமாற்றம் செய்யப்படுகிறார்கள். அதன் முலம் இந்த முழுதிட்டமே கெடுகிறது.




## 4. உங்கரா (UNGRA) மாதிரி





ஒருகாலத்தில், தெற்குக் கர்நாடகத்தில் உள்ள உங்ரா என்ற கிராமம் கடுமையான குடிநீர் பற்றாக்குறை பிரச்சினையால் தத்தளித்தது. பிறகு அவர்கள் ஒரு அருமையான திட்டத்தை உருவாக்கினார்கள். அதன்படி அவர்களது குடிநீர் பிரச்சினையும் தீரும். கூடவே வேலை வாய்ப்புகளையும் அது ஏற்படுத்தித் தரும். இந்த ஒருங்கிணைந்த முறை பொருத்தமான தொழிற்நுட்பத்தை பயன்படுத்தி, கிராமம் முழுதும் பங்கெடுக்கும் ஒரு இயக்கத்தை உருவாக்கியது.






நாங்கள் சொல்லுவது வெறும் வார்த்தை ஜம்பம் இல்லை. அதில் அர்த்தம் இருக்கிறது. இது பலனை உருவாக்கியுள்ளது. . .

இதெல்லாம் ஒரு பயோகாஸ் தொழிற்சாலையுடன் தொடங்கிற்று.




விவசாயிகள் தொழிற்சாலைக்குத் தேவையான மாட்டுச் சாணத்தைத் தந்தார்கள். அவ்வொருவரும் தரும் சாணம் குறித்துக் கொள்ளப்பட்டது. வயலுக்கு உரம் போடும் சமயத்தில், அவர்கள் தந்த அளவிற்கு சமமான பயோ - வாயு கழிவு சாணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. இந்தக் கழிவு சாணம் அவர்களது மாட்டு சாணத்தை விட உரச்சத்து வாய்ந்தது. அங்கு உருவாகும் பயோ - வாயு ஒரு ஜெனரேட்டரை ஓட்ட உதவி, அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. அந்த மின்சாரத்தின் உதவிக்கொண்டு தண்ணீரை பம்ப் செய்து மேல்நிலைத் தொட்டியில் சேமித்துக் கொள்கிறார்கள். அங்கிருந்து அனைவருடைய வீட்டிற்கும் குழாய் வழியாகக் குடிநீர் விநியோகிக்கப்பட்டது (தினமும் காலை ஒரு மணி நேரம்). இது தவிர தினமும் இரவு மூன்று மணி நேரம் விளக்குகள் எரிப்பதற்காக ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சாரம் கொடுக்கப்பட்டது. அதிகப்படியான நீர் இருந்ததென்றால் கால்நடைத் தீவனம் பயிரிடுவதற்கும், இரண்டாவது போகம் பயிர் செய்வதற்கு, முக்கியமான கட்டதில் ஒன்றிரண்டு நீர்பாய்ச்சலுக்கும் நீர் பயன்படுத்தப்பட்டது.

### இந்தத் திட்டத்தை யார் நிர்வகித்தார்கள்?

வேறு யார்? கிராமக் குழுவினர்தான்! வெளி நிர்வாகம் சரிபட்டு வந்திருக்காது. கிராமக் குழு ஒருவரை நியமித்து, அமைப்பு முழுவதையும் பராமரிக்கச் செய்தது. இதற்குப் பின் மற்ற கிராமங்களிலும் இதை அமைக்கும் போது தேவையான நிலம் தொழிற்சாலை கொடுப்பதுடன் மட்டும் அல்லாது, அமைப்பதற்கான செலவையும் ஏற்று, தேவைப்படும் உடல் உழைப்பையும் தருவதாக கிராமம் ஒப்புக் கொண்டது.



## இது உடல் ஆரோக்கியத்தை எப்படி பாதிக்கிறது?


நீர், தீவனம், விறகு சேகரிப்பது போன்ற கடுமையான வேலைப்பளுவில் இருந்து பெண்கள் விடுவிக்கப்பட்டால், அது பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆரோக்கியத்தில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும். தாயின் நேரம் குழந்தை பராமரிப்புக்கு கிடைப்பதைக் காட்டிலும், ஏழைகளின் வீடுகளில் குழந்தைகள் பராமரிப்பிற்கு எதுவும் பெரிதாக அமைந்து விடப்போவதில்லை. மேலும் கடுமையான தினசரி வேலைப்பளு தொல்லைகளில் இருந்து பெண்களும் விடுவிக்கப்படுகிறார்கள்.

மேற்சொனன் மாதிரியில் நாம் முந்தைய பகுதிகளில் கோடிட்டு காட்டிய பலவிதமான மாற்றுப் பாதைக்கான அம்சங்களை நாம் காண முடியும்.

### அடிப்படைத் தேவைகளுக்கான மக்களின் முயற்சிகள்

மேற்சொன்ன அனுபவங்களின் மையக் கருத்து இதுதான் . . .

அரசுதான் அடிப்படை வசதிகளை செய்து தரவேண்டும் என்ற கோரிக்கைகள் இனி போதாது. உள்ளாட்சி அமைப்புகளும், மக்கள் அமைப்புகளும் அதற்கு மேலும் சென்று, என்ன வேண்டும், அதை எப்படிப் பெறமுடியும், அதற்குத் தேவையான நிதி எப்படி பெற வேண்டும் என்று திட்டமிட வேண்டும். இதற்கான உதவியை உணர்வு கொண்ட களப்பணியாளர்கள் மூலம் பெறலாம். அவர்கள் இந்த மாதிரியான திட்டமிடுதலுக்கும், தொழில் நுட்பத் திறனும் கொண்ட தொழிற்நுட்ப தேர்வுகளுக்கும் உதவுவார்கள். இந்த மாதிரியான திட்டமிடுதலும், அதனை நிறைவேற்றுவதற்காக மக்களைத் திரட்டுவதும் களபணிகளின் முக்கியமான அம்சமாக ஆனால், மக்களின் அடிப்படைத் தேவைகள் அரசியலின் மைய பிரச்சினையாக மாறிட வாய்ப்புகளும் உண்டாகி விடும். இந்தப் போக்கே சமூக மாற்றத்தின் ஒரு முக்கியமான பகுதியாகிறது.





# அத்தியாயம் 4

## அடிப்படைக் கல்வி

அனைவருக்கும் கல்வி கிட்டும் ஒரு சமுதாயத்தில்,
எழுத்தறிவற்ற சமுதாயங்களைவிட ஆரோக்கிய நிலை
நிச்சயம் சிறப்பாக இருக்கும்




கல்வி கற்றவர்களிடம், குழந்தை இறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்திருப்பதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெண்களிடம் கல்வியின் தாக்கம் அதிகம். ஏனெனில் படித்தப் பெண்கள் கல்யாண வயதை தள்ளிப் போடுவதாலும், தங்கள் உடல் சம்பந்தப்பட்ட முடிவுகளை எடுக்கும் திறமை பெற்றிருப்பதாலும் இருக்கலாம்.

கல்வியினால் ஆரோக்கியம் அதிகரிப்பது தகவல்களை நன்கு பெற முடிவதனால் மட்டுமல்ல. கல்வி கற்றவர்களுக்கு நோய்கள் உண்டாவதற்கான காரணம், அதை தடுப்பதற்கும், சமாளிப்பதற்குமான பல தகவல்கள் தெரிந்துள்ளன. ஆனால் இது உண்மையின் ஒரு பகுதி தான். கல்வி நம்மைப்பற்றியும், நமது சமுதாய இயற்கைச் சூழலைப்பற்றியுமான நமது கண்ணோட்டத்தையே மாற்றுகிறது. ஆரோக்கிய பிரச்சினைகளை இயற்கை என்றோ அல்லது விதி என்றோ ஏற்றுக் கொள்ளாமல்

அவற்றை மாற்றும் முயற்சிகளை மேற்கொள்வதில் கல்விக்கு ஒரு முக்கியப் பங்குண்டு.


கல்வி எவ்வகையில் ஆரோக்யத்தை அதிகரிக்கிறது என்பதில் இன்னும் சர்ச்சைகள் இருந்தாலும் கல்வி அதை செய்கிறது என்பது மறுக்கவியலாத உண்மை. மேலும் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி என்பது நவீன சமுதாயத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

## கல்வியில் இன்றைய நெருக்கடி

கடந்த ஐம்பது ஆண்டுகளில், பள்ளிக்கு செல்லுதல் என்பது குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியிருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. பள்ளிகள் இல்லாத கிராமம் என்பது இன்று சிலதான். ஆனால், இதனால் மட்டும் அனைவருக்கும் ஆரம்ப கல்வி என்ற குறிக்கோளை நாம் அடைந்து விட்டோம் என்று அர்த்தமாகாது. அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்ற குறைந்தபட்ச குறிக்கோளைக்கூட எட்டும் நிலையை நாம் இன்றும் அடையவில்லை. பள்ளிக் கல்வியின் மையப்பிரச்சினை பள்ளியில் இருந்து குழந்தைகள் நின்று விடுதலும், குழந்தைகளின் ஆற்றலை வளர்ப்பதில் உள்ள குறைபாடுகளுமே ஆகும்.

இந்தியாவில் கல்வி பற்றி எந்த விவாதம் நடந்தாலும், முதல் சில வருடங்களிலேயே அதிக அளவிலான குழந்தைகள் பள்ளியை விட்டு நின்று விடும் போக்கு எனும் கவலை அளிக்கும் அம்சத்தை எதிர்கொண்டே ஆக வேண்டும். குழந்தைகளைத் தக்க வைக்க இயலாத பிரச்சனை. அனைவருக்கும் கல்வி கொடுப்பதற்கு ஒரு பெரும் தடைக்கல்லாய் இருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளில் பதிவு செய்து கொண்ட அனைத்து குழந்தைகளும், எட்டு வருட ஆரம்பக் கல்வியை (நமது அரசியல் அமைப்பை உருவாக்கியவர்களின் விருப்பப்படி) முடித்தார்கள் என்றால் நடுநிலைப்பள்ளிகளில் அவர்களுக்கு இடம் கொடுப்பதில் இன்று பல கடுமையான சிக்கல் இருக்கும். நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலை பள்ளிக்கும் உள்ள விகிதாச்சாரம் ஓரளவு சரியாகவே இருக்கிறது. இதன் பொருள் என்னவென்றால், எட்டு வகுப்புவரை எப்படியாவது படித்துவரும் குழந்தைகள், தொடர்ந்து படிப்பதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன.

**பெரும்பாலான குழந்தைகள் ஆரம்ப வகுப்புகளிலேயே பள்ளியை விட்டு நின்று விடுகின்றன.**






**இந்தியாவில் உள்ள 100 குழந்தைகளில்**


50-60 குழந்தைகள் ஆரம்பப் பள்ளியில சேருகிறார்கள். அவர்களில் 30-40 பேர்கள் சீக்கிரமே பள்ளியை விட்டு நின்று விடுகிறார்கள்.

20-25 குழந்தைகள்தான் நடுநிலைப்பள்ளியை எட்டுகிறார்கள். அவர்களில் 10-15 பேர்கள் பள்ளியை விட்டு நின்று விடுகிறார்கள்.

5-10 குழந்தைகள்தான் உயர்நிலைப்பள்ளியை எட்டுகிறார்கள். அவர்களில் 4-6 பேர்கள் பள்ளியை விட்டு நின்று விடுகிறார்கள்.







40-50 பேர்கள் பள்ளியில் சேருவதில்லை



1-2 பேர்கள் மட்டுமே கடைசியாக கல்லூரியை அடைகிறார்கள்.


Iம் வகுப்பில் சேர்ந்த குழந்தைகளில் 44% V வகுப்பை அடைவதற்குள் பள்ளியை விட்டு நின்று விடுகிறார்கள். உண்மையில் பதிவு செய்தவர்களில் 63% VIII வகுப்பை அடைவதே இல்லை. இந்தமாதிரி அதிகப்படியாகப் பள்ளியை விட்டு நின்று விடுவது கடந்த முப்பது ஆண்டுகளாய் மாறாமல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.


**ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பள்ளியை விட்டு நின்று விடுதல்**

**வேகம் (சதவீதத்தில்)**

| | வகுப்பு I-V | வகுப்பு V-VIII |
|---|---|---|
| 1960-61 | 64.9 | 78.3 |
| 1970-71 | 67.0 | 77.9 |
| 1980-81 | 58.7 | 72.7 |
| 1990-91 | 44.3 | 63.4 |

Selected Educational Statistics, GOI, 1995-96







பலர் அப்படித்தான் சொல்லுகிறார்கள். ஆனால் அது உண்மையாக இருக்க முடியாது. பெரும்பாலான குழந்தைகள் 6-8 வயதாக இருக்கும் போதே பள்ளியை விட்டு நின்று விடுகிறார்கள். ஆனால் பெரும்பாலான (சம்பளம் பெறும்/சம்பளம் பெறாத) குழந்தைத் தொழிலாளிகள் 10-14 வயதுடையவர்கள் தான்.



பெண் குழந்தைகளை (பெரும்பாலும் சம்பளம் இல்லாத வீட்டு வேலைகளில்) பணியில் ஈடுபடுத்துவது அதிகம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டு கிராமப்புறங்களில் செய்யப்பட்ட ஒரு ஆய்வின்படி, ஆண் குழந்தைகளைவிட இரு மடங்கு அதிகமாகப் பெண் குழந்தைகள் வேலை செய்கின்றனர். பாலியா (உத்திர பிரதேசத்தில்) என்ற இடத்தில் நடந்த ஆய்வின்படி, 10-14 வயது குழந்தைகளில் 15.8% ஆண்குழந்தைகளும், 34.7% பெண் குழந்தைகளும் ஊதியமில்லாத வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். 1.5% ஆண்குழந்தைகளும், 1.6% பெண்குழந்தைகளும் ஊதியம் கிடைக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். குழந்தைகள் பள்ளியை விட்டு நீங்குவதென்பது குழந்தைகளை உழைப்பில் ஈடுபடுத்துவதால் மட்டும் அல்ல.


பள்ளியை விட்டு நின்றுவிடும் குழந்தைகள் சும்மா சுற்றிக் கொண்டு திரிவதை தடுப்பதற்காக வேலைக்கு அனுப்பப்படுவதாகவும் இருக்கலாமே!



இருக்கலாம்! கல்விமுறை திருப்திகரமாக இல்லாத காரணத்தினாலேயே (பொருளாதார தேவையினால் அல்ல) பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு பதில் வேலைக்கு அனுப்புகிறார்கள் என்பது பல ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது. பள்ளிப்படிப்பை முடித்தால், வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை மக்களிடமில்லை.



இரண்டு முக்கிய காரணங்கள் பள்ளியை விட்டு குழந்தைகள் நிற்பதற்கு வழி வகுக்கின்றன.



அரசு சொல்வதற்கு மாறாக, ஏழைக் குடும்பங்கள் கூட ஆரம்ப வகுப்புகளிலிருந்தே குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப செலவழிக்க வேண்டியுள்ளது. 14.4% கிராமப்புறத்துக் குழந்தைகளும், 49% நகர்ப்புறத்துக் குழந்தைகளும் கல்வி கட்டணத்துடன் மற்ற கட்டணங்களையும், கட்டணங்கள் அற்ற பிற செலவுகளையும் ஏற்க வேண்டி யுள்ளது. கல்விக்கான வருட குடும்ப செலவு மகாராஷ்டிராவில் ஒரு குழந்தைக்கு ரூபாய் 385உம் கர்நாடகத்தில் ரூபாய் 1200உம் ஆகிறது என ஒரு ஆய்வு காட்டுகிறது.

நிலைமை இப்படி இருக்கும் போது, 14 வயது வரைக்கும் இலவசக் கல்வி என்ற அரசியல் சாசன நெறி முறைக்கு அர்த்தம் தான் என்ன?

பள்ளியை விட்டு நிற்பதற்கு மற்ற காரணங்கள் கல்வியின் தரம், ஆசிரியர்களின் பணிநிலை, சம்பளமற்ற மற்ற பள்ளிச் செலவுகளுக்கான மிகக் குறைந்த நிதி ஒதுக்கீடு பள்ளிகளின் வசதிகளற்ற நிலை போன்றவைகளும் ஆகும். ஐந்தாம் அனைத்திந்தியக் கல்வி அறிக்கையின்படி:

- ★ பாதி ஆரம்ப பள்ளிகள்தான் ஒழுங்கான கட்டடங்களைக் கொண்டுள்ளன.
- ★ 42% பள்ளிகளில் ஒரு பள்ளியறை மட்டும்தான் இருக்கிறது. பாதிக்குச் சற்று அதிகமான பள்ளிகளில்தான் உபயோகிக்கத் தக்க கரும் பலகை யாவது உள்ளது. பாதிப் பள்ளிகளும் குறைவாகத்தான் குடிநீர் வசதி இருக்கிறது.

கல்வியில் பாலினப் பாகுபாடு இருக்கிறது. பெண்களின் எழுத்தறிவு விகிதம் குறைந்தது. பெண்களின் எழுத்தறிவு 39.3% ஆனால் ஆண்களினது 64.1% (1981 மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி). ஆரம்பக் பள்ளியில் தொடங்கி அனைத்து நிலைகளிலும் பெண்கள் குறைவாகவே பள்ளியில் சேருகின்றனர். அதுவே தொடர்கிறது (கீழே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்)

ஆரம்பப் பள்ளியில் மாணவர்பதிவு


(மில்லியன்களில்)

| | பெண் குழந்தைகள் | ஆண் குழந்தைகள் |
|---|---|---|
| 1990-91 | 40.4 | 57.0 |
| 1991-92 | 42.3 | 59.0 |
| 1992-93 | 44.9 | 60.5 |
| 1993-94 | 46.4 | 61.8 |
| 1994-95 | 46.8 | 62.3 |



## மூளை ஆற்றல் வீணடிப்பின் (Brain Drain) மோசமான வடிவம்

5 வருட கல்வி படிப்பை முடித்தும் எழுதவோ படிக்கவோ சிறு கணக்குகளை போடவோ தெரியாத குழந்தைகளை பற்றி விளக்க 'ஆற்றல் போதாமை' என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. 8 முதல் பத்து வருடப் பள்ளி படிப்பு குழந்தைக்கு அடிப்படைத் திறமையையும், அறிவையும் வளர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அந்தப் குறைந்த பட்ச எதிர்பார்ப்பு கூட நிறைவேற்றப்பட வில்லையானால், நோக்கமே அழிந்து விடுகிறது. பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளால் படிக்க முடிய வில்லை என்பதைக் கண்டு கொண்ட பின்னர்தான் பள்ளியில் இருந்து நிறுத்தி விடுகிறார்கள். சமூக அளவில் இந்தப் போக்கு சமூக ஏற்றத்தாழ்வுகளை நியாயப் படுத்துகிறது.



கல்வித்தரம் கொடுக்கப்பட்டுள்ள வசதிகளின் தரத்தை மட்டுமே பொருத்தது அல்ல. அது பயன்படுத்தப்படும் கற்பிக்கும் முறையின் விளைவும் ஆகும். பாடத்திட்டமும், புத்தகங்களும் நகர, உயர் வர்க்க, உயர் சாதியினருக்கு ஏற்ற வண்ணம் தயாரிக்கப்படுகின்றன. இந்தக் கல்விமுறை கிராம ஏழைக் குழந்தைகளை முழுதும் நிராகரிக்கிறது. இந்த கல்வி அமைப்பில் தொடராத குழந்தைகள் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் குடும்பத்தையும் ஏழை விவசாயிகள் குடும்பத்தையும் சார்ந்தவர்களாய் இருக்கிறார்கள்.

> என் பெற்றோர்கள் நான் முட்டாளாக இருப்பதினால்தான் தொடர்ந்து பெயிலாகிறேன் என நினைக்கிறார்கள். தயவுசெய்து அவர்களிடம் சொல்லுங்கள். இது எனது தவறல்ல. மாறாக நமது கல்வி அமைப்பின் தவறு நமது கற்பிக்கும் முறை பொருத்தமான தாகவும், போதுமான தாகவும் இருந்திருந்தால், நான் அடிப்படைக் கல்வியின் அனைத்து நிலைகளிலும் திறமையை வளர்த்திருந் திருக்க முடியும்.





பெண் குழந்தைகளைப் பொறுத்தமட்டில், பள்ளியில் சேராததற்கும் சீக்கிரமே பள்ளியை விட்டு நின்று விடுவதற்கும் முக்கிய காரணம் சிறிய சகோதரர் சகோதரிகளைப் பராமரிக்க அவர்கள் பயன்படுத்தப்படுவதுதான். இதை அவசியம் குறிப்பிட வேண்டியது. ஏனெனில், குழந்தைக் காப்பகங்கள் இந்தப் பிரச்சனையை சுலபமாகத் தீர்க்கலாம்

இந்தப் பின்புலத்தில், அரசின் தாராளமயமாக்குதல் கொள்கைப்படி பல புதிய திட்டங்கள் புகுத்தப்படுவதைப் பற்றி பார்ப்போம்.

## தாராளமயமாக்குதலின் தாக்கம்




இந்திய அரசு கையாளும் தாராளமயமாக்கல் மூலம் சமூகநலத்துறை அனைத்து குறிப்பாக கல்வித்துறை மோசமாகப் பாதிபாதிக்கப்பட்டுள்ளது. பல திட்டங் களுக்கு உரிய நிதி (உண்மையான நிதி) குறைக்கப்படுவதிலிருந்து இது தெளிவாகத் தெரிகிறது.

ஆனால், அரசும் மற்றும் அதற்கு ஆதர வான அறிவு ஜீவிகளும் பொருளாதார தாராளமயமாக்கல் போக்குக்கும் - ஆரம்பக் கல்விக்கும் - ஏதோ பயனுள்ள இணைப்பு இருப்பதாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்



> அரசு அதிகாரம் குறைவாகவும் சந்தையின் தலையீடு அதிகமாகவும் இருக்க வேண்டும். உயர்கல்வி மட்டும் இல்லாமல் ஆரம்பக் கல்வி யையும் தனியார்மயமாக்க வேண்டும். நாங்கள் அதற்குச் சில கடனுதவிகளை செய்கிறோம்.

நமக்கு அறிவுறுத்தப்படும் இந்த நவீன தாராளவாதப் பாதை 'வல்லவர்கள் வாழ்வது' (Survival of fittest) என்ற போக்கையே நோக்கிச் செல்லும். இது போட்டியிடும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் இருந்து தேவையானதை பெற்றோர்கள் தேர்ந்தெடுப்பது என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆரம்ப பள்ளிகளுக்கான நிதி பெருமளவு அரசிடம் இருந்துதான் வர வேண்டியுள்ளதால், அதை தவிர்க்க இந்தத் திட்டம் பள்ளிகள் போட்டியிடுவதற்கு என ஒரு குறிப்பிட்ட அளவிற்கான சந்தையை உருவாக்குகிறது. இந்தியா போன்ற ஏழை நாடுகள் கல்விக்கான அரசின் நிதி ஒதுக்கீட்டைக் கணிசமான அளவு குறைக்கும் இந்த போக்கு, பள்ளிக்கல்வி என்பது ஒரு குறைந்த அளவு மட்டுமே கொடுப்பது என்ற நிலையில் சென்று முடியும்.



இந்த எண்ணமே தவறானது. எல்லா சமூதாயப் பிரிவுகளும் கல்விச்சந்தைக்கு சமமான பலத்துடன் வருகிறார்கள் என இந்த வாதம் சொல்கிறது. சாதி, வர்க்க, பாலினப் பாகுபாடுகள் தீவிரமாக உள்ள இடத்தில் தேர்வு மற்றும் போட்டி போன்றவற்றைப் பயன்படுத்தி பயன்பெறுவது நடுத்தர வர்க்கம்தான். இது மேலும் பாகுபாட்டை ஆழப்படுத்த தான் செய்யும்.

இதன் விளைவு

கல்வி அமைப்பு வசதிகள் நடுத்தர மற்றும் வர்க்கத்தின் அடிப்படையில் இரு துருவங்களாக்கப்படும்


★ அடிப்படைக் கல்வியில் வெளி நாட்டுக் கடன் உதவி நுழைகிறது.

★ 1998ல் இந்தியா தனது மொத்த தேசிய உற்பத்தியில் 3%க்கு சற்று அதிகமாகதான் கல்விக்காக செலவு செய்கிறது. 1968ம் ஆண்டு கோத்தாரி கமிஷனின் அறிக்கை காலத்திலிருந்தே இந்திய அரசு உறுதியளித்த குறைந்தபட்சம் கல்விக்காக 6.%வது நிதி ஒதுக்கிடுவது என்று இந்திய அரசு உறுதியளித்தது நிறைவேறவேயில்லை

1992, தாராளமயமாக்கல் ஆரம்பிக்கப்பட்ட கட்டத்தில் கூட, புது டில்லியில் கல்விக்கான 9 நாடுகளின் உச்சிமாநாட்டின் போது, 2000ம் வருடத்திற்குள் கல்விக்கான நிதி 6%க்கு உயர்ந்து விடும் என உறுதியாக சொல்லப்பட்டது.

ஆனால் அது இன்னும் 3%ஆக தான் இருக்கிறது.

IMF கடன்கள், மூலமாக இந்தியா மீது சுமத்தப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம், சமூக துறை செலவுளைக் குறைக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் எங்களது அருமையான 'சமூகப் பாதுகாப்பு திட்டம்' ஒன்றை உங்களுக்குத் தர முடியும். இதன் மூலம் கிடைக்கும் கடன்களை 'மாவட்ட ஆரம்பக் கல்வி திட்டத்திற்குப்' (DPEP) பயன்படுத்திக் கொள்ளலாம்.






மத்திய அரசு 1992ல் சர்ச்சைக்குரிய மாவட்ட ஆரம்பக் கல்வித் திட்டத்திற்காகப் பணத்தைப் பெற்றது. இது மொத்த தொடக்கக் கல்வி செலவில் 4-5% மட்டுமே ஆனாலும் அடிப்படை கல்விக்கான செயல்திட்டங்களைப் பல்வேறு வகையில் இது நிர்ணயித்துக் கொண்டிருக்கிறது.

தாராளமய போக்கு ஆரம்பித்ததிலிருந்தே ஐஎம்எப் / உலக வங்கி ஆகியவற்றின் பரிந்துரைகளினால் இந்திய அரசின் கொள்கைகள் பின் தள்ளப்பட்டு விட்டன. அரசியல் அமைப்பின் படியும், மற்றபடியும் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி அளிக்கும் உறுதி முற்றிலும் மறைந்து விட்டது. வெறும் வாய்வீச்சுதான் நடக்கிறது.




இது அனைவருக்கும் ஆரம்ப கல்வியை அளிப்பதற்கான அரசியல் உறுதி இல்லாததைக் காட்டுகிறது!

இந்த சட்ட மசோதா, சர்ச்சைக்குரிய முறையில் இயற்றப்பட்டிருந்தாலும், ஆரம்ப கல்விக்கான அடிப்படை உரிமையை இந்தியக் குடிமக்களுக்குத் தருகிறது. அப்படி செய்யத் தவறினால் அரசு அதற்குச் சட்டப்படி பொறுப்பேற்க வேண்டும்!

இதற்கு முன் அரசியல் சாசன வழிகாட்டும் நெறிமுறைகள் மட்டும்தான் இருந்தன. இவை சொன்னதெல்லாம் அரசு "14 வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவச, கட்டாயக் கல்விக்கான முயற்சி செய்ய வேண்டும்." என்பதுதான். மேற்சொன்ன சட்ட மசோதா இதைவிட வலிமையான நிர்பந்தத்தை அரசுக்கு விதிக்கிறது.




அரசு இதனை 1960றகுள் அடைய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஆனால் 40 ஆண்டுகள் கழித்தும், 6-14 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் கிட்டத்தட்ட 50% குழந்தைகள் (10 கோடி) பள்ளிக்கே போகாமல் இருக்கிறார்கள்.

இந்த மசோதா ஐக்கிய முன்னணி அரசின் (1997) போது இயற்றப்பட்டு அந்த அரசு கவிழ்வதற்கு முன் அறிமுகப்படுத்த முடியாமல் போயிற்று. இந்த மசோதா ஒன்பதாவது திட்டத்தில் கல்விக்காக ரூபாய் 40000 கோடி நிதி ஒதுக்க உறுதியளித்திருந்தது. ஆனால் எட்டாவது திட்டமோ 20000 கோடி ரூபாய்தான் ஒதுக்கீடு செய்திருந்தது. இந்த மசோதா நிறைவேற்றப்பட்டிருந்தால், ஆரம்பக் கல்விக்கான அரசின் உறுதியில் ஒரு மைல்கல்லாய் இருந்திருக்கும். அதற்குபின் வந்த அரசுகள், இதற்கு தேவையான நிதியை தங்களால் தர இயலாது எனச் சொல்லி இந்த சட்ட வரைவை அமைதியாக மூட்டைக்கட்டி வைத்து விட்டன.

## கொள்கைக்கான பரிந்துரைகள்

அடிப்படைக்கல்வியை அடிப்படை உரிமையாக்க வேண்டும். இதை அடைவதற்கான சட்ட, நிர்வாக நிதி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

### இதன் பொருள் என்ன?



ஆரம்பக் கல்வியை கட்டாயமாக்க வேண்டும்

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க வேண்டும்

இது மேலும் கீழ்கண்டவாறு பொருளாகிறது.

1. அனைவருக்கும் சிறந்த தரம் வாய்ந்த கல்வியை அளிக்க வேண்டும்.
2. ஏழைகள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப உதவும் வகையில் மதிய உணவுத் திட்டம், இலவசப் புத்தகத் திட்டம் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.
3. பள்ளிப் பவருவத்திற்கு முற்பட்ட குழந்தைகளுக்கான கல்வியை அளித்தும், சீர்படுத்தியும், அதைக் கல்வியின் ஒருங்கிணைந்த பிரிவாக ஏற்றுக் கொள்ள செய்ய வேண்டும். இந்தக் கட்டத்தில் குழந்தைகளுக்கு கற்றல் எப்படி என்பதைக் கற்மபபது, பள்ளிக்குச் செல்லத் தயார்படுத்துவது, அவர்களைப் பள்ளியில் தக்க வைப்பது இவற்றை மேற்கொள்ள வேண்டும்.




**இந்த புரிதலின் அரசியல் விளைவு**

⇩

**இந்த மாதிரியான கல்வியைத் தருவதற்குத் தேவையான நிதியைத் திரட்டும் முக்கிய நோக்குடன் பொருளாதாரத்தைத் திட்டமிட வேண்டும்.**

வேறு நோக்கங்களுக்காகத் திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தில், கிடைக்கும் நிதியை வைத்துக் கொண்டு கல்வியைத் திட்டமிடுவது இயலாது.



## அடிப்படை கல்விக்கான மக்களின் முன் முயற்சிகள்

ஜனநாயக இயக்கங்கள் பல ஆண்டுகளாக பரிந்துரைகள் பலவற்றை செயல்திட்டத்தில் ஏற்க வைத்திருக்கின்றன. பள்ளிக்கல்வியின் வளர்ச்சி என்பது பெரும்பாலும் மேற்படி முயற்சியின் விளைவுதான். இந்த முயற்சியைத் தொடரவும் வலுப்படுத்தவும் வேண்டும்.

அத்துடனில்லாமல், கல்வித்தரம், குழந்தைகள் பள்ளியிலிருந்து நின்று விடுதல் போன்ற கல்வியின் முக்கிய பிரச்னைகளைத் தீர்க்க மக்களின் முயற்சிகள் தொடங்குவது இன்றைய அவசரத் தேவையாகும். நாம் தீர்க்கமாக ஆய்வு செய்ய வேண்டிய பல உதாரணங்கள் இருக்கின்றன. இரண்டு முக்கியமான உதாரணங்களாக ஆந்திர பிரதேசத்தில் ரங்கா ரெட்டி மாவட்டத்தில் எம்.வி. பௌண்டேஷனின் பணிகளையும், மத்தியபிரதேசத்தில் உள்ள ஏகலைவா என்ற இயக்கத்தின் பணிகளையும் குறிப்பிடலாம். அடுத்தது அரசின் புதுமையான திட்டமான லோக் ஜம்பிஸை சொல்லலாம். பாரத் கியான் விக்கியான சமிதி (BGVS)ன் ஜீவன்சாலா திட்டம் ஆரம்பக் கட்டத்தில் உள்ளது. கேரள ஸாஸ்த்திர சாஹித்திய பரிஷத் (KSSPயும்), தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இந்த வகையான பணிகளைச் செய்திருக்கின்றன.

இத்தகைய மக்கள் முயற்சிகளின் முக்கிய அம்சங்கள் :

1. பயிற்றுவிக்கும் முறையை மாற்றுதலுக்கு முன்னுரிமை அளிப்பது. இதில் ஆசிரியர்களை பயிற்றுவிப்பது என்பது மையத் திட்டமாகும். பொருத்தமான, பண்பாட்டு ரீதியாய் சரியான, மாற்றங்களை பாடத்திட்டத்தில் அமுல் செய்ய வேண்டும். இந்த மாதிரியான தலையீடு செய்வதின் மற்றொரு விளைவு, இன்றைய கற்பிக்கும் முறைகளில் அடங்கியிருக்கும் அரசியலை உணர்ந்த ஆசிரியர்களை ஒருங்கிணைப்பது இத்தகைய ஆசிரியர்கள் மாற்றுக் கற்பித்தல் முறைகளை உருவாக்கி, அவற்றைப் பயன்படுத்துவார்கள்.
2. இன்றைய பள்ளிக் கல்வியின் நெருக்கடிப் பிரச்சனையைப் புரிந்து கொள்வதில் மக்களை ஈடுபடுத்தல். அவர்கள் உள்ளூர் பள்ளிக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டு, தங்கள் உதவியை நல்க வைப்பது, பள்ளியில் மாணவர்களை பதிவு செய்வதற்கும், பள்ளிக்கு தொடர்ந்து வரச் செய்தலுக்கும், ஆற்றலை வளர்த்துக் கொள்ளுவதற்கும் இது பெருமளவு உதவும்.

இந்த இரண்டிலும் கவனிக்க வேண்டிய முக்கியமான அம்சம் என்னவென்றால்

அரசியல் மற்றும் நிர்வாக அமைப்புகள் மேல் ஜனநாயக அழுத்தம் கொடுப்பதன் வாயிலாக இந்த மாற்றங்களைப் பரந்த அளவில் ஏற்படுத்துவதற்கும், நல்ல முன்னுதாரணங்களை உருவாக்குவதற்கும், ஒரு மாற்றுப் பாதையைக் காணவும் இந்த முயற்சிகள் பயன்படும் என்று நினைக்கிறோமா?

அல்லது

இத்தகைய முன்னுதாரணங்களை மக்கள் இயக்கங்கள் நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கில் செயல்படுத்துவதின் மூலம் கல்வியில் மாற்றங்களைக்

கொண்டு வரமுடியும் என நினைக்கிறோமா? இந்த வழியில் இத்தகைய மாற்றத்திற்கு ஆதரவாக மக்கள் கருத்து வளர்வதின் காரணமாய், மக்கள் இயக்கங்களுடன் ஒத்துழைக்கத்தான் வேண்டுமென்ற எண்ணம் அரசிடம் வலுப்பெற வாய்ப்புண்டு.




## ரங்கா ரெட்டி மாவட்டத்தில் குழந்தைத் தொழில்முறை ஒழிப்பும், அனைவருக்குமான ஆரம்பப் பள்ளித் திட்டமும், ஒரு நிகழ்வாய்வு

எம்.வி. பௌண்டேஷன் முயற்சியால் 100000 க்கும் மேற்பட்ட குழந்தைகள் தொழில்களிலிருந்து விலகி, பள்ளிகளில் சேர்ந்தார்கள்

> ரங்காரெட்டி மாவட்டம் நமது நாட்டிலேயே மிகவும் பின்தங்கிய ஒரு மாவட்டம். இது ஹைதராபாத்தில் இருந்து சற்று தொலைவில், தெலுங்கானா பகுதியில் உள்ளது. இந்த மாதிரியான மாவட்டங்களில் காணப்படுவது போல, இங்கும் பெரும்பாலான குழந்தைகள் பள்ளிகளில் இல்லை. இப்படி பள்ளிக்கு போகாத 90% குழந்தைகள் கால்நடை மேய்ப்பவர்களாகவோ, பண்ணை வேலைகளை செய்யும் எடுபிடிகளாகவோ அல்லது வீட்டு வேலைகளை செய்பவர்களாகவோ இருந்தார்கள். பல சிறுவர்கள் கொத்தடிமைகளாகப் பணி புரிந்தார்கள். 10% குழந்தைகள் பிஸ்கெட் தொழிற்சாலை, பிளாஸ்டிக் மற்றும் சாயத்தொழிற்சாலை போன்ற நகர்ப்புறத் தொழில்களில் பணிபுரிந்தார்கள்.

மக்களின் முயற்சிகள் மூலம் எம்.வி.பௌண்டேஷன் குழந்தைகளையும் அவர்கள் பெற்றோர்களையும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு முறையான பள்ளியை உபயோகித்துக் கொள்வதற்கு ஊக்குவித்தது. பள்ளியைவிட்டு நின்று போன ஒவ்வொரு குழந்தையும் குழந்தை தொழிலாளிதான் என்ற கொள்கையின் அடிப்படையை ஒட்டி இந்தத் திட்டம் செயல்பட்டது. இத்திட்டம் ஒரு வகையான குழந்தைத் தொழிலாளியை மற்றொரு வகையான தொழிலாளியிடம் இருந்து வித்தியாசப்படுத்திப் பார்க்கவில்லை. இதன் ஒரே குறிக்கோள் எந்தக் குழந்தையும் வேலைக்கு போகக் கூடாது. அனைத்துக் குழந்தைகளும் பள்ளிக்குப் போக வேண்டும்.




### கடைபிடிக்கப்பட்ட வழிமுறை

வயது மற்றும் ஆண்-பெண் அடிப்படையில் அமைந்தது.

9-14 வரையிலான குழந்தைகளுக்கு ஒரு பாலம் அமைக்கும் கல்வியாக பாடம் நடத்தப்படும். குழந்தைகளுக்கு என்ன ஏற்கனவே தெரியுமோ, அதை வைத்துக் கொண்டு அவர்கள் வயதான பள்ளிக் குழந்தைகளுக்கு இணையாக அவர்களைத் தயாரிக்கும்


6-8 வயது குழந்தைகள் பள்ளியில் நேரடியாகவே சேர்க்கப்படுகிறார்கள். தொடர்ந்து கண்காணிப்பும் பின்தொடரும் திட்டமும் உள்ளது. இது பள்ளியை விட்டு நின்று விடுதலைப் பெரும்பாலும் தடுத்து விடுகிறது. பெண் குழந்தைகளுக்கான திட்டமும் பையன்களுக்கு மாதிரியே ஆனதுதான் என்றாலும், அதை விட தீர்க்கமாக/ வலிமையானதாக ஆக்கப்பட்டுள்ளது.

வருடங்கள் செல்ல செல்ல, அது பல மட்டங்களில் இருந்தும் உள்ளூர் மக்களை ஈடுபடவைத்தது. இன்று பெற்றோர் குழந்தைகளை மட்டும் அல்லாது தோர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், முதலாளிகள், அரசுபள்ளி ஆசிரியர்கள் என பலரை உள்ளடக்கி உள்ளது.




### எதையெல்லாம் சாதித்திருக்கிறது!

- ★ இத்திட்டம் இந்த மாவட்டத்தில் 2000 கிராமங்களில் நடத்தப்படுகிறது.
- ★ 160 கிராமங்களில் குழந்தை தொழிலாளிகளே இல்லை
  400 கிராமங்களில் 11 வயதுக்கு குறைவான குழந்தைகள் முறைசார்ந்த பள்ளிகளில் சேர்ந்துள்ளனர்.
- ★ 4000 கொத்தடிமைகளுக்கு மேல் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.
- ★ 10000 பேருக்கு மேலான இளைஞர்கள் இத்திட்டத்தில் தன்னார்வத் தொண்டர்களாய் பணியாற்றுகிறார்கள்.



## இணைக்கும் வகுப்புகள்

இது எம்.வி. பௌண்டேஷனின் முக்கிய இயக்க முறை. கொத்தடிமைகளாக உள்ள குழந்தைகளும், மற்ற குழந்தைத் தொழிலாளிகளும் விடுவிக்கப்பட்டபின் இதற்கென்று பயிற்சி பெற்ற இளைஞர்களைக் கொண்டு 2 அல்லது 3 மாதத்திற்கு ஒரு முகாமில் தங்கி புதுமையான இணைப்புப் பாடத்திட்டப்படி குழந்தைகள் பயிற்சி பெறுகின்றனர். இதன் முடிவில் பெரும்பான்மையான குழந்தைகள் முறைசார் பள்ளிகளில் 4 அ 5 வகுப்பில் சேருகின்றனர். இந்த குழந்தைகள் 9-12 வயது உடையவர்களாக இருப்பார்கள். 6-8 வயது குழந்தைகள் குறைந்த வயது வித்தியாசமே இருப்பதால், எந்தவித இணைப்பு வகுப்புகளும் இல்லாமலேயே நேரடியாகவே பள்ளியில் சேர்க்கப்படுகிறார்கள்.

ஏன் பெரிய குழந்தைகளையும் இணைப்பு வகுப்புகளுக்கு அனுப்புவதற்கு பதில் சிறிய வகுப்பில் சேர்க்கக்கூடாது? ⇒ ஏனெனில் நாங்கள் ஆறு வயது குழந்தைகளுடன் உட்காருவதற்கு விரும்பவில்லை.

ஆசிரியர்களுக்கு அத்தகைய வகுப்புகளை நடத்துவதிலும் பிரச்சினைகள் உள்ளன. அதே சமயம், நாள் முழுவதும் பாடுபட்டு உழைத்த குழந்தைகளுக்கு மாலையில் முறைசாரா வகுப்புகளில் கற்றுத்தருவதும் நல்லதல்ல. ஆகவேதான், இணைப்பு வகுப்புகள் மூலம் குழந்தைக்குக் கற்றுக் கொடுத்து, மீண்டும் முறைசார் பள்ளியிலேயே சேர்க்கும் முறை கையாளப்படுகிறது

> மூன்று மாத இணைப்பு வகுப்புகளுக்கு பிறகு, 12-14 வயது குழந்தைகள் ஐந்தாம் வகுப்பில் சேரலாம். ஆனால் முகாம்களில் 12-15 மாதங்கள் கற்று, நேரடியாக ஏழாவது வகுப்பு பொதுத் தேர்வையும் எழுதுவதை தேர்வு செய்கிறார்கள்.

இவையெல்லாம் ஏதோ சுலபமாக நடந்து விட்டது என்று நினைக்காதீர்கள்! குழந்தைகளை இணைப்பு வகுப்புகளில் சேர வைக்க சமுதாயத்திலும் குடும்பத்திலும் ஏராளமாக பணியாற்ற வேண்டியிருந்தது.



சில மாதங்களுக்கு, முறை சாராத மையங்களில் நடத்தப்படும் போதனைமுறை பின்னர் பெரிதும் உதவுகிறது. இந்த வகையான முறைசாராக் கல்வி மையங்களில் முக்கிய கவனம் பாடல்கள்,



விளையாட்டுகள் ஊக்கப்படுத்துதல் ஆகியவற்றிற்கு செலுத்தப்படுகிறது. சில மாதங்களுக்குள், அவர்கள் இணைப்பு வகுப்புகளுக்குப் போவதற்குத் தயாராகிறார்கள். பின்னர் தொடர்ந்து பள்ளிகளுக்கும் செல்லுகிறார்கள்.


## அரசு பள்ளி ஆசிரியர்கள்

பல்லாயிரக்கணக்கான அத்தகைய மாணவர்கள் அரசு பள்ளியில் சேர்வதினால், அரசு பள்ளி ஆசிரியர்கள் இந்த மாதிரியான அரங்குகளின் மூலம் கற்பிப்பதிலும், கற்றுக் கொள்வதிலும் கொஞ்சம் கொஞ்சமாக ஆர்வம் காட்ட ஆரம்பித்தார்கள். இதன் விளைவாய் இணைப்பு வகுப்புகள் மூலம் பெரிய குழந்தைகளுக்கும் முறையாக பள்ளிகளிலேயே கற்றுத்தரப்பட்டது. அதே சமயம் பள்ளியில் சேராத குழந்தைகளையும், தங்கள் எல்லைக்குள் கொண்டு வர அரசு ஆசிரியர்களுக்கு முடியும். குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க, 1300 பள்ளி ஆசிரியர்களை கொண்ட கொத்தடிமை குழந்தைகளை விடுவிக்கும் மன்றம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குழந்தை தொழிலாளர்களைத் தொடர்ந்து தக்க வைக்க எடுக்கப்பட்ட புதுமையான முயற்சிகளும் ஆசிரியர்களை பெரும் ஈடுபாட்டுடன் இதில் இணைய வைத்ததுடன், அவர்களது சுயமதிப்பையும் உயர்த்தி, அவர்களுக்கு உண்மையிலேயே ஆசிரியர்களுக்கான அதிகாரத்தை வழங்கியது. நன்கு திரட்டப்பட்ட, ஆதரவான சமுதாயமும், உள்ளூரிலேயே பகுதிநேர அடிப்படையில் நியமிக்கப்பட்ட அதிகப்படியான ஆசிரியர்களும் (விடுபட்ட மாணவர்களைச் சேர்க்க எடுக்கப்பட்ட முயற்சியானால் தற்காலிகமான மாணவர்கள் எண்ணிக்கை ரொம்பவும் அதிகமானதால்), அரச பள்ளிகளும் தரமான கல்வியை தரமுடியும் என்பதை உறுதி செய்தது.

## பெற்றோர்கள்

இத்திட்டம் மிகவும் ஏழ்மையில் வாடும் பெற்றோர்கள் கூட தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டுமென்ற தீவிர விருப்பம் கொண்டுள்ளார்கள் என்பதை இத்திட்டம் நிரூபித்திருக்கிறது.

எங்கள் குழந்தைகள் பள்ளியில் நன்கு கவனித்துக் கொள்ளப் படுவார்கள், என்பது எங்களுக்குத் தெரிகிறது. இதற்காக எந்தவிதத் தியாகங்களையும் செய்வதற்கு நாங்கள் தயார். எங்கள் குழந்தைக்கு எங்களை விட நல்ல வாழ்க்கை கிடைக்கணும்னு தானே நாங்கள் விரும்புகிறோம்.



பல குடும்பங்களில், குழந்தை தொழிலாளர் மூலம் கிடைக்கும் வருமானத்தை இழப்பதுப் பெரும் பொருளாதார இழப்பல்ல. அப்படி இருந்தாலும், பெற்றோர்கள் இன்னும் அதிகப்படியான தியாகங்களைத் தங்கள் குழந்தைகளின் நல்வாழ்விற்காகச் செய்யத் தயாராகவே இருக்கிறார்கள். குழந்தைகளை பள்ளியில் சேர்ந்ததும் தங்களது கால்நடைகளைக் கூட விற்று விட்ட பல உதாரணங்களை நாம் சொல்ல முடியும்.

## ஏன் பெற்றோர்கள் முன்னமே இதைச் செய்யவில்லை?

இத்திட்டம் பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகளும் கற்க முடியும் என்பதைக் காட்டியது. தங்கள் குழந்தைகளால் முடியும் என்ற நம்பிக்கை அதிகரித்ததுதான் இத்திட்டத்தின் வெற்றிக்கு மிக முக்கிய காரணமாகும். தங்கள் குழந்தைகள் மாணவர்கள் ஆவதன் மூலம்தான், பெற்றோர்கள் தாங்கள் பெற்றோர்கள் என்பதை உணர்ந்து, அனுபவித்து மகிழ்ந்தார்கள்.

## இளம் களப்பணியாளர்கள்

அனைத்துக் குழந்தைகளையும் பள்ளிக்கு அனுப்பும் இடைவிடாத முயற்சியில் இளம் களப்பணியாளர்கள் தங்களை ஒரு சமூகப் பணியாளராகவும், ஒரு சமுதாய இயக்கத்தின் உறுப்பினராகவும் உணர்ந்து கொண்டு இப்பணியில் ஈடுபட்டார்கள். இளம் களப்பணியாளரின் பங்கு 1,00,000 குழந்தைகளை உழைப்பிலிருந்து விடுவித்தலும், அவர்களைப் பள்ளியில் சேர்த்ததிலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இதுதான் அடிப்படை வித்தியாசத்தை உருவாக்கியது. அவர்களே முதல் தலைமுறை படிப்பாளிகள் என்ற வகையில், குழந்தைத் தொழிலாளிகளின் நிலையை அவர்கள் புரிந்து கொண்டார்கள். குழந்தை தொழிலாளி முறைக்கும் பள்ளிக் கல்விக்கும் இடையேயுள்ள அத்தனை மாயைகளையும், பொய்களையும் அவர்கள் தோலுரித்துக் காட்டினார்கள். குழந்தை தொழிலாளரை சுரண்டும் முதலாளிகளையும், நிர்வாகத்தையும் கேள்வி கேட்டு குழந்தைத் தொழிலுக்குச் சமூக அங்கீகரிப்பு குறையக் குறைய, அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வது முதலாளிகளுக்கு மேலும் மேலும் கடினமாயிற்று. தாக்கம் ஏற்படுத்த முடிந்த அவர்களது திறமை, இத்திட்டத்திற்கே போராட்ட குணத்தைத் தந்தது.

### சமூகம்

பள்ளியில் சேர்க்கும் இந்த இயக்கத்திற்கு, முன்பு எப்போதும் கண்டிராத அளவிற்கு மக்களின் பங்கேற்பு பெருமளவில் இருந்தது. தனிப்பட்ட பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் ஆர்வத்தை உருவாக்கியதுடன் மட்டும் அல்லாமல், சமுதாயம் குறிப்பிட்ட அளவிற்கு இத்திட்டத்திற்கு நிதி உதவியும் செய்தது. பல பள்ளிகளில் அடிப்படைக் கட்டுமானத்தை மேம்படுத்துவதற்கு, அரசின் நிதி உதவிக்காக காத்திருப்பதைக் காட்டிலும், சமூகமே முன்வந்து அதிகப்படியாகத் தேவைப்படும் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுத்து உதவவும், பள்ளிக் கட்டிடத்திற்கான நிதியை அளிக்கவும் செய்தது. இத்திட்டத்தை நிர்வகிப்பதற்காக சமூகம் ஆற்றிய தீவிர பங்கே இத்திட்டத்தின் மாபெரும் வெற்றிக்கு முக்கியமான காரணமாகும்.

சமுதாயம் அளித்த நிர்பந்தம் குழந்தைத் தொழிலாளிகளின் முதலாளிகளின் மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வைத்தது. குழந்தைகள் தொழிலாளர்களாக இருப்பதை சமுதாயம் அங்கீகரிப்பது குறையக் குறைய, அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வது முதலாளிகளுக்கு மேலும் மேலும் கடினமாயிற்று. சமுதாயம் அளித்த நிர்பந்தம் காரணமாக தங்களிடம் வேலை செய்யும் முதலாளிகளே தன்னார்வத்துடன் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கவும், இணைப்பு வகுப்புகளில்



சேர்ப்பதையும் ஆதரிக்க ஆரம்பித்தார்கள். விவசாயத்தில் பணியாற்றும் குழந்தைத் தொழிலாளிகள் குறைந்ததனால், பெரும் நிலசுவான்தார்கள் தங்கள் பயிர்முறையை மாற்றிக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

### மற்ற அமைப்புகள்


இத்திட்டம் அரசுக்குள்ளும், அரசு சார்பற்ற நிறுவனங்களுக்குள்ளும் பெரும் சிந்தனை மாற்றத்தைக் கொண்டு வந்தது. முதலாவதாக இது ஆந்திரப்பிரதேசத்தில் பெற்றோர்களின் எதிர்பார்ப்புகளுக்கும், கிடைக்கும் கல்வி சம்பந்தமான அடிப்படைக் கட்டுமானத்திற்கும் (குறிப்பிட்டு சொன்னால் ஆசிரியர்கள்) இடையே பெரிய இடைவெளி இருப்பதை புரிந்து கொள்ள வைத்தது. கிராமப்புறத்தில் இருக்கும் குழந்தை தொழிலாளிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதில் எதுவும் முடியாதது என்று இல்லை என்பதையும், இது பெரும் அளவில் மோசமான நிர்வாகத்தினாலும் ஊக்கக்குறைவினாலும் ஏற்பட்ட பிரச்சினை என்பதைத் தெளிவுபடுத்தியது. இந்த எம்.வி.பௌண்டேஷனின் மாடலும், இணைப்புப் பாடத் திட்டமும் ஆந்திரப் பிரதேசத்தின் 'பள்ளிக்கு திரும்புவோம்' என்ற மிகப்பெரிய திட்டத்திற்கான அடிப்படை உந்துதலுக்கான கருவியாக செயல்பட்டது.

கடந்த காலங்களில், அரசு திட்டங்களின் அடிப்படையாக இருந்த முறைசாராக் கல்வியின் பெரும் குறைபாடுகளை இத்திட்டம் தெளிவாகக் காட்டியது. வேலையில் இருந்து குழந்தைகளை விலக்கி, பள்ளியில் சேர்ப்பதற்கு ஆதரவு பெற சிறந்த வழி அவர்களை முறையான பள்ளிகளில் சேர்ப்பதுதான் என்பதை இத்திட்டம் திறம்பட நிரூபித்தது. கல்வியை முக்கிய அம்சமாக கொண்ட, குழந்தைத் தொழிலாளர்களுக்கென NCLP திட்டத்தில் இது மிகவும் தெளிவாத் தெரிகிறது.

தமிழ்நாடு, கர்நாடகம், ஒரிசா, மத்தியபிரதேசம், ராஜஸ்தான், கல்கத்தா போன்ற இடங்களிலும் இந்த மாதிரியான முயற்சிகளை எடுக்க எம்.வி.பௌண்டேஷன் மாடல் பெரும் ஊக்கம் அளித்தது.

### ஜீவன்சாலா திட்டம் - ஒரு நிகழாய்வு


எழுத்தறிவுப் பிரச்சாரத்தின் போது . . .




கல்வியறிவு வகுப்புகளில் சிறந்த கல்விக்காக எழுந்த இந்த கோரிக்கையை செவி சாய்க்கும் வண்ணம், BGVS (பாரத் கியான்வி க்யான் சமிதி) பள்ளிக்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காகவும், பள்ளியை விட்டு நின்று விட்ட மற்றும் உழைக்கும் குழந்தைகளுக்காகவும் பல முயற்சிகளை எடுத்தது.


### பள்ளிக்கல்வியின் தரத்தை உயர்த்துதல்

1994ல் BGVS 'கற்பது கற்கண்டே' என்ற நாடு தழுவிய பிரச்சாரத்தையும், தொடர்ச்சியான ஆசிரியர் பயிற்சி பட்டறைகளையும் நடத்தியது. இந்த திட்டத்தின் வடிவமைப்பு, போது இருந்தும் மக்கள் அறிவியல் இயக்கத்தில் பல ஆண்டுகள் (ஆசிரியர் பயிற்சி) புதுமையான பயிற்றுவிக்கும் முறைகளின் சிறந்த அனுபவத்திலிருந்ததை வைத்துத் தயாரிக்கப் பட்டது.








இதற்கு முன் நடந்த புது வழியைத் தொடங்கிய ஹோசங்காபாத் அறிவியல் கற்பிக்கும் திட்டம் ஏகலைவாவிற்கு ஒரு முன் உதாரணத்தைத் தந்தது. மத்திய பிரதேசத்து அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் மூலமையமாக ஏகலைவா அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் 1 மாவட்டத்திற்கும், பின்னர் 15 மாவட்டத்திலும் தொடங்கி அது விரிவு படுத்தப்பட்டது.




ஆசிரியர் பயிற்சி முகாம்களும், ஆசிரியர்களுக்கான வழிகாட்டுதல் புத்தகங்களும், பாடத்திட்டங்களும் வெறுமனே கல்வித்தரத்தை மட்டும் உயர்த்தவில்லை. பின்னால் தோன்றிய திட்டங்களுக்கான கல்வியின் உள்ளடக்கம், புதுமையான பயிற்றுவிக்கும் முறை, ஆசிரியர் பயிற்சி இவற்றிற்கான இது ஒரு அடிப்படை மாதிரியாக திகழ்ந்தது.






இது தவிர மேலும் பல பயிற்றுவிக்கும் புதுமைக்கும், உள்ளடக்க மேம்பாட்டுக்கும் ஆன மூலாதாரங்களும் உள்ளன. சித்தூர் மாவட்டத்தில் உள்ள நரசிம்மன்களும், ஜெய்பூரின் திகான்தர் பள்ளிகளும் குறிப்பிடத்தக்க உதாரணங்கள்.

BGVS இந்த அனுபவங்களையும் உள்வாங்கி கொண்டது. இன்று நாடு முழுவதும் அறிவியல் இயக்கம், ஆசிரியர் பயிற்சி, படைப்பாக்கல் மிக்க உதவி பயிற்சி பொருட்களை உருவாக்குதல், துணைகரமான கல்விப்பணிகளை (குழந்தை திருவிழாக்கள் போன்றவைகளை) நடத்துவது மூலம் பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு பங்களித்துள்ளது. கல்வி, குழந்தைகளின் படைப்பாக்க திறனுக்கு அதிகாரம் அளிக்கவும், மேம்படுத்தவும் உதவுவதாக இருக்கிறதா அல்லது சமனற்ற நியாயமற்ற சமூகத்தில் கேள்வி கேட்காத குடிமக்களை உருவாக்க பயன்படுத்தப்படுகிறதா போன்ற சர்ச்சைக்குரிய கல்வித்துறை நோக்கங்களைக் கேள்விக்குள்ளாக்குவதே இந்த முயற்சிகளின் அடிப்படை நோக்கமாகும்.


### முறைசாரா கல்விக்கு ஜீவன்சாலா அணுகுமுறை

பள்ளியை விட்டு நின்றுவிட்ட குழந்தைகளுக்கான 'மாற்று வகையான முறைசாரா கல்வி' என்பது துவங்கப்பட்டது. ஆனால் ஜீவன்சாலா இரண்டு நோக்கங்களை மட்டுமே கொண்டிருந்தது. அவைகள் பள்ளியை விட்டு நின்ற குழந்தைகளுக்கு வாழ்க்கைக்கு அடிப்படையான கல்வியை கொடுப்பதுடன், அவர்களை மறுபடியும் முறையான பள்ளிக்கு திரும்ப அனுப்புவதை உறுதி செய்வதுமே ஆகும். இதற்கான பரிசோதனை திட்டங்கள் வைரா பிளாக் (ஆந்திரபிரதேசம்) சமால்கா (ஹரியானா), நவடா (பீகார்), அக்காலு (மஹாராஷ்டிரம்) போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்டன. கிராம கணக்கெடுப்புகள் பள்ளியை விட்டு நின்ற குழந்தைகளையும், அவர்களது தற்போதைய கல்வி நிலையையும் அறிந்து கொள்ள உதவின. பின்னர் பஞ்சாயத்துக்களுடன் பேச்சு வார்த்தைகளும், கலைப்பயணம், கிராம திருவிழாக்கள் மற்றும் குழந்தைகள் திருவிழாக்கள் மூலமும் மக்களைத் திரட்டுதல் தொடங்கியது. இது சமூகத்திற்கு ஊக்கமளித்து, இந்த முன்முயற்சியினால், பங்கெடுக்கும் நம்பிக்கை மக்களிடையே ஏற்பட்டது. கிராமங்களில் பங்கெடுக்கும் அமைப்புமுறை கட்டுமானங்கள் தொடங்கப்பட்டன. முறை சாரா கல்வி மையங்கள் (NFE) தொடங்கப்பட்டன. சில கிராமங்களில், ஜீவன்சாலா முழுக்க, முழுக்க பஞ்சாயத்துகளால் பொறுப்பு எடுத்து நடத்தப்பட்டன. இந்த 4 ஒன்றியங்களில் 1000 முதல் 2000 குழந்தைகள் NFE மையங்களில் கலந்து கொண்டார்கள். இந்த பிரச்சாரம் ஆரம்பித்த சில கால இடைவெளிக்கு பின்னர், முறையான பள்ளிகளில் யாரால் பயில முடியுமோ, அவர்கள் அனைவரும் முறையான பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டார்கள். யார் எல்லாம் இந்த மையங்களிலேயே தொடர வேண்டியது அவசியமோ, அவர்கள் மட்டும் தொடர்ந்தார்கள்.

# அத்தியாயம் 5

# மக்களின் வாழ்க்கையை பாதுகாப்பது

## மக்களின் வாழ்வில் பொருளாதார சீரமைப்பின் தாக்கம்




சரியான சத்து உணவு, குடிநீர், சுகாதாரம், மருத்துவ வசதி இதுபோன்று ஆரோக்கிய வாழ்க்கைக்கு தேவையான பலவற்றிற்கு, நிலையான வேலையும் வருமானமும் தேவையான அம்சங்களாகும். இந்த வருமானம் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை உயர்வுக்கு ஈடு செய்வது போல இருக்க வேண்டும்.

பணம் என்பது ஒரு பகுதிதான் . . மக்கள் செய்யும் பணியின் தன்மை, நிலை போன்றவைகளும் மக்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.






நிலையான வேலைவாய்ப்பு, வேலைநிலை வேலை வாய்ப்பின் தன்மை போன்றவை சூழல் மற்றும் பொருளாதார காரணங்களை பொருத்து அமைகிறது. பொருளாதார சீர்திருத்தத்திற்கு, பிறகு உருவாக்கப்பட்ட நிரந்தரமற்ற பணிநிலை, திரட்டப்படாத துறையின் விரிவாக்கம் போன்றவைகள் மக்கள் தொகையில் கணிசமான பகுதியினருக்கு நிரந்தரமற்ற பணிநிலையையும், சமூக பாதுகாப்பற்ற நிலையையுமேதான் பரிசாக தந்துள்ளது. இது வாழ்க்கை தரத்தை நேரடியாக பாதிக்கிறது. இந்த நேரத்தில், பொருளாதார சீரமைப்பு திட்டம் உணவு பொருட்களின் விலைவாசி உயர்வுக்கும், அனைத்து சேவைகளையும் தனியாருக்கு தாரை வார்த்துக் கொடுப்பதற்கும்தான் தள்ளியுள்ளது. கூடி குறைந்து வரும் வருமானங்களை உடைய இந்த காலகட்டத்தில் இந்த மாதிரியான போக்குகள் வாழ்க்கை நிலையை மிகவும் மோசமானதாக்கி விட்டன.

இயற்கை வளங்களை அழித்ததின் மூலம் நிலத்தின் உற்பத்தி திறனும், நீர் மூலாதாரங்களும் நமது உணவு பாதுகாப்பும், குடிநீரும் பாதிக்கப்பட்டுள்ளது. காடுகளை அழித்தல், காற்று மண்டல வெப்பத்தையும் அதிகரித்ததுடன், மாசு அளவையையும் கூட்டியுள்ளது.

இந்த பகுதி வாழ்க்கை பிரச்சினைகளை - குறிப்பாக அவை எப்படி ஆரோக்கியத்தை பாதிக்கின்றன - என்று அலசுகிறது.

### பணிபாதுகாப்பின்மை

1991ல் 1.44% இருந்த வேலைவாய்ப்பு விகிதம் 1997ல் 0.67% ஆக குறைந்து விட்டது. பின் சீர்திருத்த யுகம், திரட்டப்படாத துறை பெருகி விட்டதையும் அதன் பயனாய் பணிபாதுகாப்பின்மை அதிகமாகி உள்ளதையும் காட்டுகிறது. மேலும் பணிநிலைமை மோசமாகும் போது மக்கள் தேடி வரும் வேலைவாய்ப்புகளும் மாறி வருகின்றன.

> **வெற்றிகரமான பொருளாதாரம் என்றால் என்ன?**
>
> பல பொருளாதார வல்லுனர்களுக்கு வெற்றியின் அளவீடு என்பது பொருளாதார வளர்ச்சிதான். இது அதிகப்படியான பொருள் உற்பத்தியையும், அதிகப்படியான வருமானத்தையும் குறிக்கின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product) என்று அழைக்கப்படும். இந்த அளவீடு நமது நாட்டின் அனைவருடைய கூட்டு வருமானத் தொகையாகும்.
>
> ஆனால் பெருவாரியான சாதாரண மக்களுக்கு, வெற்றிகரமான பொருளாதாரம் என்பது, அவர்களது வாழ்க்கை பாதுகாப்பாகவும், வேலைவாய்ப்புக்கான வாய்ப்புகள் பெருகுவதுமே ஆகும்.
>
> ஒரு நவீன எண்ணெய் ஆலை வேலை செய்ய ஆரம்பிக்கிறதென்றால், உணவு எண்ணெய் உற்பத்தியை பத்து மடங்காய் பெருகி மொத்த உள்நாட்டு உற்பத்தி பெருகதான் செய்யும். ஆனால் அது ஆயிரக்கணக்கான கிராம மக்களின் வேலைவாய்ப்பை பறிக்கும், அவர்கள் வாழ்க்கையை அழிக்கும், அவர்கள் அப்படியொரு வளர்ச்சியை வெறுக்கத்தான் செய்வார்கள்.


ஆடம்பர கார்களை உற்பத்தி செய்வது இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தியை அதிகப்படுத்தியது என வைத்துக் கொள்வோம். ஒரு நவீன கார் தொழிற்சாலை 600 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றது. அது இந்த தொழற்சாலை இடம்பெயரச் செய்த விவசாய குடும்பங்களை காட்டிலும், மிகவும் குறைவுதான். ஆனால் மொத்த தேசிய வருமானம் தொழிற்சாலைகளால் அதிக அளவில் உயரத்தான் செய்யும். அரசும் இந்த மாதிரியான தொழிற்சாலைக்கு நிலத்தை வலுக்கட்டாயமாய் ஆக்கிரமித்து கொடுக்கும் என்பதையும் விவசாயிகள் விற்பதற்கு மறுக்க முடியாது என்பதையும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். சிலருக்கு அத்தொழிற்சாலையில் வாகன ஓட்டுனராகவோ, மெக்கானிக்காகவோ, அல்லது கார்களில் கட்டித் தொங்க விடும் பொம்மைகளை விற்பதாகவோ வேலை கொடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் வழங்கப்பட்ட பணியின் தரம், இழந்த வேலைத்தரத்தை காட்டிலும் முற்றிலும் மாறுபட்டது. மிக முக்கியமாக, பலரின் வேலை வாய்ப்பு தற்போது ஒரு சிலரின் ஆடம்பர நுகர்வுகளை சுற்றி கட்டப்படுகிறது!!




பணி பாதுகாப்பின்மையின் முக்கியமான அம்சங்கள்

## திரட்டப்பட்ட துறை சுருங்கி கொண்டு வருவது

கடந்த இருபது ஆண்டுகளில், திரட்டப்பட்ட துறையில் வளர்ச்சி தேய்ந்து வருகிறது. 1970ல் திரட்டப்பட்ட துறையில் வளர்ச்சி 2.5% ஆக இருந்தது. 1980ல் அது 1.5% ஆக குறைந்தது. பின் சீர்திருத்த கட்டத்தில் அது கிட்டத்தட்ட 1% ஆக ஆனது. 1990ல் இருந்து 1998க்குள், திரட்டப்பட்ட துறையில் உள்ள வேலை-வாய்ப்பு 9.4% இதில் இருந்து 8.5% ஆக குறைந்தது. மொத்தத்தில் 10% க்கும் குறைவான மக்கள்தான், வைப்புநிதி, மருத்துவ விடுமுறை மற்றும் சம்பள விடுப்புகள், பிரசவ கால சலுகைகள், மருத்துவ செலவை ஈட்டும் வசதி போன்ற சமூக வசதிகளை பெறும் வாய்ப்புகளை உள்ளவர்களாய் இருக்கிறார்கள்.









வாடகையும் மின்விளக்கும் அவளுடைய செலவுதான்.

## தொழிலாளர்கள் உத்திரவாதமில்லாத வேலைகளுக்குத் தள்ளப்படுதல் (Casualisation of Labour)

நாம் மேலே குறிப்பிட்ட விவரப்படி, இந்தியாவில் உள்ள 90% மக்கள் திரட்டப்படாத துறையில் வேலை செய்கிறார்கள். திரட்டப்படாத துறை தொழிலாளிகளை வேலை நேரம், பணிபாதுகாப்பு போன்றவற்றின் அடிப்படையில் நாம் வேறுபடுத்தி பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது. பின் சீர்திருத்த காலகட்டத்தில் எந்த உத்திரவாதமும் இல்லாத வேலைவாய்ப்பு பெருகுவதை காண முடிகிறது. 1972-94க்குள் முறையான பணியில் இருப்பவர்கள் 61.4% தில் இருந்து, 54.8% ஆக குறைக்கப்பட்டார்கள். அதே காலகட்டத்தில், அன்றாடங்காய்ச்சி வேலைகள் (Casual Employment) 23.2% இருந்து 32% ஆக கூடியது. இதற்கு பொருள் பலருக்கு பணியின் முறையான வசதிகளை கேட்க முடியவில்லை. ஏனெனில் முதலாளிக்கும், தொழிலாளிக்கும் உள்ள உறவு ஒப்பந்தத்திற்கு உட்படாததும் முறை சாராததும் ஆகும்.





## தொழிலாளர் படையை பெண்மயமாக்குதல்

ஆனால் சந்தை இவ்வளவு தொழிலாளிகளை அன்றாடங் காய்ச்சியாக மாற்றியதால் (Casualisation) பெண் தொழிலாளிகளே அதிகமாக பாதிக்கப்பட்டதாக தெரிகிறது. பெண்களில் 60% பேர் அன்றாடங்காய்ச்சி தொழிலாளர்களாக இருக்கின்றனர். ஆண் தொழிலாளிகளில் 50%த்திற்கும் குறைவானவர்கள் தான் இவர்கள். 1991-97ல் பெண்கள் வேலைகளில் பங்கெடுப்பது 22%ல் இருந்து 28% ஆக அதிகரித்துள்ளது. இந்தியா, மலேசியா, ஸ்ரீலங்கா மற்றும் வேறு பல நாடுகளில் இருந்து கிடைக்கும் சாட்சியங்கள், குறைந்த கூலி வேலைகளுக்கு மேலும் மேலும் பல பெண்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்று வெளிப்படுத்துகிறது. வீட்டை அடிப்படையாக கொண்ட கைவேலைகள், கட்டிட பணிகள் போன்றவைகள் இதில் அடககம். பொருளாதார சீர்திருத்தத்திற்குப் பிறகு, நியாயமற்ற சம்பளத்தில் நிரந்தரமற்ற காண்டிராக்ட் பணிகளில் பெண்கள் அமர்த்தப்படுகிறார்கள். பிரசவ வசதியும், குழந்தை பராமரிப்பு வசதியும் அறவே அற்ற பொருத்தமற்ற சீர்கெட்ட பணிநிலைகளில் பணியாற்ற அவர்கள் நிர்பந்திக்கப்படுகிறார்கள் . . .





ஆண்களுக்கு மட்டும் வேலைக் கொடுங்கள். பிரசவ வசதிகள் கொடுக்க வேண்டியதில்லை!



பெண்களுக்கு மட்டும் வேலை. ஆண்கள் இவ்வளவு குறைவான சம்பளத்திற்கு வேலைக்கு வரமாட்டார்கள்.

1991ம் வருடத்திய மக்கள் கணக்கெடுப்பு, வீட்டை அடிப்படையாக கொண்டு பணிபுரியும் பெண்கள் 10 லட்சம் மட்டும்தான் என்கிறது. ஆனால் பீடித் தொழிலில் மட்டும் 25 லட்சம் பெண்கள் வீட்டிலிருந்தவாறே பணியாற்றுகிறார்கள். கைநெசவுத் தொழிலில் இன்னொரு 40 லட்சம் பெண்கள் உள்ளார்கள். இது தவிர்த்து லட்சக்கணக்கான பெண் தொழிலாளிகள் ரெடிமேட் ஆடைகள், மின்னணு பொருட்கள், அப்பளம், அகர்பத்தி, வத்தல், ஊறுகாய் மற்றும் இது போக பொருட்கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். ஆனால், அவர்கள் என்றும் எண்ணப்பட்டதோ, பதிவு செய்யப் பட்டதோ கிடையாது. அவர்களது உழைப்பிற்கு எந்த வித அங்கீகாரமும் இல்லை.

திரட்டப்பட்ட துறையில் அரசுதான் பெண்களை பணிக்கு எடுத்துக் கொண்ட வகையில் மிகப்பெரிய முக்கிய முதலாளியாகும். ஆனால் தற்போது அரசு பணிக்கு ஆள் எடுக்காமல் ஒத்தி வைத்துள்ளது. அது பெண்களை பெரிதும் பாதித்துள்ளது. கோல் இந்தியா (Coal India) போன்ற அரசு நிறுவனங்கள், பெண்களை வேலையை விட்டு நீக்கியும் வருகின்றன.

தனியார்மயமாக்குதல் தொழிலாளர் சக்தியை எந்த உத்திரவாதமும் இல்லாத வேலைகளில் தள்ளுகிறது. மிக முக்கியமான சேவையான துப்புறவு துறையில் 30-40% பெண்கள் இருக்கிறார்கள். 10 லட்ச பெண்கள் துப்புறவு தொழிலாளியாக பணியாற்றுகிறார்கள். இந்த தொழிலாளிகளை முறையான தொழிலாளர்களாக நடத்துவதற்கு பதிலாக, இந்த சேவைகளையே தனியார் நிறுவனங்களின் தனியார் நிர்வாகத்திற்கு விட்டு விட திட்டம் நடக்கிறது. பெரும்பாலும் பெண்கள் செய்யக் கூடிய வேலைகளான ஆஸ்பத்திரி நர்ஸ், பள்ளி டீச்சர் போன்றவைகளில் நிலைமை படு மோசமாக உள்ளது. 5 நோயாளிக்கு ஒரு நர்ஸ் வேண்டும் என்பது பரிந்துரைக்கப்பட்ட விகிதம். ஆனால் நடைமுறையிலோ 1:40 அல்லது இன்னும் அதிகமாக உள்ளது.

மூலம் : Alternative Economic Survey 1998-99

## வேலைவாய்ப்பில் பின்னடைவு

பணிபாதுக்காப்பின்மை நிலையில்லாத வாழ்முறைக்கும் உடல்நல குறைவுக்குமான முக்கியமான காரணங்களில் ஒன்றாகும். தொழில் மற்றும் விவசாய துறைகளில் இருக்கும் வேலைவாய்ப்புகள் குறைந்து கொண்டு வரும் போது, பணி பாதுகாப்பின்மை அதிகமாகி கொண்டு போகிறது. நாம் வேலை வாய்ப்பை இழக்க செய்யும் சில முக்கிய காரணங்களை பார்ப்போம்.

### 1. விவசாயிகளுக்கு இனி விவசாயம் செய்ய முடியாது

ஏனெனில் அவர்கள் தங்கள் நிலத்தை இழந்து விட்டதால், அல்லது விவசாயம் செய்வதை நிறுத்தி விட்டதால்.




- ★ தாராளமயமாக்குதலினால் 800 பொருட்களை திறந்த பொது லைசன்ஸ் முறைக்கு வந்துள்ளன. 714 பொருட்களுக்கு அளவுரீதியான தடை நீக்கியுள்ளது. இது விவசாயிகளை பெரிதும் பாதித்துள்ளது.
- ★ ரப்பர் இறக்குமதி லட்சக்கணக்கான சிறிய ரப்பர் தோட்டக்காரர்களையும், ரப்பர் வடிப்பவர்களையும் ஏழைகளாக்கி விட்டது. ரப்பர் இறக்குமதியானதால் ரப்பருக்கான விலை 50% ஆக இந்தியாவில் குறைந்து விட்டது. பெரிய ரப்பர் தோட்டக்காரர்கள் ரப்பர் வடிப்பதையே நிறுத்தி விட்டதால். பல ஏழைகள் வேலையை இழந்தார்கள்.
- ☆ சீனாவின் பெரிய பூண்டு கிராமம் வரை வெள்ளமாக பெருக்கெடுத்து வர அனுமதிக்கப்பட்டு விட்டது. இதனால் தமிழ்நாட்டு மலைவாழ் விவசாயிகளும். ராஜஸ்தான் சமவெளி விவசாயிகளும் வறுமைப்பிடிக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.



- ★ தமிழ்நாட்டில் நாமக்கல் மற்றும் நாட்டின் பல பகுதியை சார்ந்த கோழிப் பண்ணை உரிமையாளர்களால், கோவாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் குறைந்த விலை சிக்கன் கால்களுடன் போட்டி இட இயலவில்லை. (அதன் விலை ரூபாய் 28 மட்டுமே. ஆனால் இந்தியாவில் அதன் தயாரிப்பு செலவே ரூபாய் 32 ஆகும்). பல கோழிப்பண்ணைகள் மூடப்பட்டன.
- ★ ஆஸ்திரேலியா, நியுசிலாந்து மற்றும் பல நாடுகளில் இருந்து இறக்குமதி தொடரப் போவதால், நமது நாட்டு ஆப்பிள் ஆரஞ்சு உற்பத்தியாளருக்கும் இதே நிலைதான் ஏற்படப் போகிறது.
- ★ தேயிலை இறக்குமதி தற்போதுதான் ஆரம்பித்து உள்ளதால், அசாமின் தேயிலை தோட்ட தொழிலாளிகள் நமது அண்டை நாட்டவர்களிடம் இருந்து வரும் கடும் போட்டியினால் பாதிக்கப்பட போகிறார்கள். ஏப்ரல் 2000ல் நீலகிரியில் ஒரு லட்சம் பேர்கள் இறக்குமதியை தடை செய்யக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.
- ★ மீன், மீன் பொருட்கள், தேயிலை, காப்பி, பால், வாசனைத் திரவியங்கள், காய்கறிகள், ரப்பர் பொருட்கள் போன்றவற்றிற்கான அளவுரீதியான தடை நீக்கப்பட்டது. பால் தொழிலில் மட்டும், பால் பண்ணையில் பணிபுரியும் லட்சக்கணக்கான பெண் தொழிலாளிகள் இதனால் பாதிக்கப்படுவார்கள்.

### 2. விவசாயம் சாராத கிராமத் தொழில்கள் அழிக்கப்பட்டு விட்டன!


முன்னர் எண்ணிக்கையில் அடங்காத வியாபாரங்களும், கைத்தொழில்களும், மேலும் கைவினைஞர்களும் கிராமத்தில் வாழ்ந்தார்கள். தற்போது அவையனைத்தும் மூடப்பட்டு விட்டன. எண்ணெய் செக்குகளும், கோதுமை அரவை நிலையங்களும் போய்விட்டன. பெரிய நிறுவனகங்கள் விவசாயக் கருவிகளை செய்வதால், கருமான்கள் மறைந்து விட்டார்கள். சிறிய பேக்கரிகளும், பால்பொருள் தயாரிப்பாளர்களும் கிராமத்தில் இருந்த நாட்கள் எல்லாம் மலையேறி விட்டது. தற்போது நாம் ஆஸ்திரேலிய கோதுமையையும், பழச்சாற்றையும், ஐரோப்பிய பால் பொருட்களையும் வாங்க முடியும். ஆனால் இவை அனைத்தும் கிராமப்புற குடும்பங்களின் வயிற்றில் அடித்துதான்!

### 3. நகரங்களிலும் தொழிற்சாலைகள் வரவில்லை

1991ல் பொருளாதார சீர்திருத்தம் ஆரம்பித்த போது, 5 வருடங்களுக்குப் பிறகு நிலைமை முன்னேறும் என நாட்டிற்கு உறுதியளிக்கப்பட்டது. பொருளாதாரம் பூத்து குலுங்குமாம். ஆனால் பத்து வருடங்களுக்கு பின்பு, பன்னாட்டு நிறுவனத்தினரும் இந்திய பணக்காரர்களுக்கும்தான் பூத்து குலுங்கினார்கள். அதாவது சமூகத்தின் உயர் தட்டில் இருக்கும் முதல் 10% மக்கள்தான் இதனால் பயனடைந்தார்கள். பெப்சியும், கோக்கும் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டது. தம்ப்ஸ் அப், லிம்கா, கோல்ட் ஸ்பாட் போன்ற உள்ளூர் மென்குடிபான தயாரிப்பாளர்கள் சந்தையை

விட்டே அப்புறப்படுத்தப்பட்டு விட்டார்கள். கில்லட் உள்ளே வந்ததும், மல்ஹோத்ரா சென்று விட்டார்கள் இந்துஸ்தான் லீவர் வந்து, டாம்கோ, பாண்ட்ஸ், நிஸான், புருக் பாண்ட் & லிப்டன் என அனைத்தையும் எடுத்துக் கொண்டது. தற்போது அவர்கள் அழகு சாதனப்பொருட்கள், உணவு மற்றும் பான வகைகள் சந்தையை தங்கள் கட்டுக்குள் கொண்டு வந்து விட்டார்கள். (வேகமாக பட்டுவாடா ஆகும் இந்த நுகரும் பொருட்களின் விற்பனை ரூபாய் 15000 கோடியாகும்). பொது நிறுவனமான மாடர்ன பூட்ஸ் விழுங்கப்பட்டுவிட்டது. சிமித்லைன் பீசெம் விவா, மால்டோவா போன்றவற்றை சந்தையிலிருந்து துரத்திவிட்டு இந்த மாதிரியான பொருளுக்கான சந்தையில் 80%த்தை தனது கட்டுக்குள் வைத்துள்ளது.

## நகர்மையமாதலும் இடம் பெயர்தலும்




உத்திரவாதமில்லாத வேலைகள் வளரும் போதும், கிராமப்புற வேலை வாய்ப்புகள் குறைந்ததும், நகரமயமாதல் அதிகமாக நடக்கிறது. இந்த நகரமயமாதல் நகரங்களில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியினால் ஏற்பட்டதல்ல. சேவை துறைகளிலும், கட்டிட பணிகளிலும் கூலி வேலையோ வேறு வகையான தினகூலி வேலையையோ தேடி, கிராமத்து ஏழைகள் நகரத்துக்கு சோகமாக குடி பெயர்கிறார்கள். நகர ஏழைகளின் பெருக்கம்தான் இந்த நகரமயமாதல்.

நகர பிரச்சினை குறித்த தேசிய நிறுவனத்தின் 1998ம் வருடத்திய அறிக்கை மூலம் கடந்த இருபது வருடங்களில் நகரமயமாதல் பயப்பட வைக்கும் வகையில் தாருமாறாக வளர்ந்துள்ளது என்று தெரியவருகிறது. 1971ல் புலம் பெயர்ந்த அளவு 15.2 ஆக இருந்ததில் இருந்து 1991ல் 17.4 ஆக ஆகியுள்ளது. நகர மக்கள் தொகை இரண்டு மடங்காக பெருகியுள்ளது. 1951ல் 8 கோடியாக இருந்த நகரமக்கள் தொகை, தற்போது 16 கோடி ஆகியுள்ளது. பின் சீர்திருத்த கால கட்டத்தைப் பற்றிய சரியான மதிப்பீடு கிடைக்கவில்லையாயினும், அனைத்து அறிக்கைகளும் இந்த நகரமயமாதல் போக்கு சீர்திருத்தம் தொடர்வதால் அதிகம் ஆகும் எனதான் தெரிகிறது. நகர மக்கள் தொகையின் அதிகரிப்பும், 1990ல் நமது பொருளாதாரம் அடைந்த பின்னடைவும், வேலைக்கும் சம்பளத்திற்கும் பாதுகாப்பின்மையை கொண்டு வந்து, ஏழைகளை வறுமை கோட்டிற்கு கீழேத் தள்ளி அதிக நேர வேலையையும் பார்க்க வைத்தது.



## இயற்கை வளங்களும், வேலை பாதுகாப்பும்

சூழலியல் கேடுகளினாலும், குறைந்து வரும் இயற்கை மூலதாரங்களை அணுகுவதில் ஏற்பட்ட மாற்றங்களாலும் அவர்களை உபயோகிப்பதில் ஏற்பட்ட மாற்றங்களினாலும் வேலைவாய்ப்பு பாதிக்கப்படுகிறது. சீர்திருத்தத்திற்குப் பிறகு தானிய வகை விவசாய உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது. 1980-81 முதல் 1990-91 வரையிலான காலக்கட்டத்தில் சராசரி மொத்த தானிய உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 3.4. 1990-91 முதல் 1997-98 வரையிலான காலகட்டத்தில் இந்த வளர்ச்சி விகிதம் 1.4 ஆக குறைந்தது. பருப்பு மற்றும் நவதானியங்களின் (ஏழையின் உணவு) வளர்ச்சி விகிதம் முறையாக -1.3 ஆகவும், -0.7 ஆகவும் பின் சீர்திருத்த காலகட்டத்தில் ஆனது உண்மையில் இந்த தானிய பயிர்வகைகளுக்கு பதிலாக பருத்த மூலதனம் தேவைப்படும் பணப்பயிர்களுக்கு விவசாயம் மாற்றப்பட்டதுதான் மேற்படி தானிய விளைச்சல் குறைவுக்கு காரணம். இந்த பணப்பயிர் விவசாயத்தை சிறிய துண்டு நிலத்தை வைத்துக்கொண்டு செய்வது சாத்தியம் இல்லாததால் சிறிய மற்றும் விளிம்பு நிலை விவசாயிகள் நிலத்தை இழப்பதற்கு இது கொண்டு வந்து சேர்த்தது.





கிராமபுறத்துறையில் சீர்திருத்தத்திற்குப் பிறகு அன்றாடங்காய்ச்சித் தொழிலாளிகள் வளர்ந்து வருவதும் இந்த பின்னணியில்தான். அதிகப்படியான சிறிய விவசாயிகள் புதிய தொழிற்நுட்பங்களை கொண்டு பரிசோதனை முயற்சி செய்வதற்கு இயலாதவராய் இருப்பதால், நிலம் வேகமாக சீர்கெட்டுக் கொண்டிருக்கிறது. இந்த சீர்கேட்டிற்கு நீர்மட்டம் இறங்கிக் கொண்டு வருவதும், நீர்பாசன பிரச்சினைகளும் சேர்ந்து வழிவகுத்தன. இதனால் 40% விளிம்பு நிலை விவசாய நிலங்கள் சீர்கெட்டன. பெரும்பான்மையான விளிம்பு நிலை விவசாய நிலத்திற்கு, சிறிய மற்றும் விளிம்பு நிலை விவசாயிகளே சொந்தக்காரர்களாய் இருக்கிறார்கள். ஆகவே இவர்களில் பல விவிசாயிகள் பிழைப்பதற்கே கால நிலைக்கேற்ப வேலை வாய்ப்புகளை நம்பி இருக்க கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.


## காடுகளும் நீர்பிடிப்பும்

கால நிலைக்கேற்ற வேலைவாய்ப்புகள், எரிபொருள் மற்றும் கால்நடை தீவனம் போன்றவற்றை கிராமத்து ஏழைகளுக்கு அளிப்பதுடன், காடுகள் நாட்டின்

சூழலியலின் பாதுகாவலராயும் பணியாற்றுகின்றன. காடுகள் மலைகளில் இருந்து சமவெளிக்கு வரும் நீரின் ஓட்டத்தை கட்டுப்படுத்தி நிலங்களை மணி அரிப்பில் இருந்தும், சீர்கேட்டில் இருந்தும் பாதுகாக்கின்றன. இதனால்தான் சமவெளியில் 33% நிலப் பரப்பும், மலைகளில் 66% நிலப்பரப்பும் காடுகளாகவே இருக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், இந்த பரிந்துரைப்பு எதுவும் நமது நாட்டில் நடைமுறை படுத்தப்படவில்லை. 1987ல் நமது மொத்த தேசிய நிலப்பரப்பில் 23.8% காடுகள் என பதிவு செய்யப் பட்டது. அது 1990ல் 19.7% ஆக



குறைந்தது. இந்தியா தனது எல்லைப்புற காடுவளத்தில் 90%யை இழந்து விட்டது. காடுகளில் மிஞ்சி இருப்பதில் 57% அளவு, கூட்டு காட்டு நிர்வாக திட்டம் மற்றும் வேறுபல திட்டங்களையும் அறிமுகப்படுத்திய பின்பும் கூட, இன்னும் தொடர்ந்து ஆபத்தில்தான் இருக்கிறது. காட்டை அழிக்கும் முயற்சியை தடுத்து நிறுத்தும் திட்டங்களின் தோல்வி நீர் ஆதாரங்கள் மற்றும் விவசாய நிலங்களின் ஆரோக்கியத்தையும் மிகவும் பாதிக்கும். காடுகளில் இருந்து கிடைக்கும் விறகு மற்றும் கால்நடை தீவனம் போன்றவைகள் மூலம் கிராமத்து ஏழைகளுக்கு கிடைக்கும் உதவி வருமானம் பெரிதும் பாதிக்கப்படும்.




உண்மை ஊதியத்தின் வீழ்ச்சியும், வறுமை அதிகரிப்பும்

தொழிலாளர்களின் உண்மை ஊதியம் (விலைவாசி உயர்வு, பணவீக்கம் போன்றவற்றுடன் சரி செய்த பிறகு) பொதுவாக சீர்திருத்தத்திற்குப் பிறகு வீழ்ச்சி அடைந்துள்ளது. இதற்கு அர்த்தம் வறுமை அதிகரித்துள்ளது என்பதுதான்.



நாம் சில புள்ளிவிபரங்களைப் பார்ப்போம்.

1975 : 50%க்கு சற்று கூடுதலாக வறுமை கோட்டுக்கு கீழே மக்கள் வாழ்ந்தாக்ள்.

1997 : 37% பேர்கள் வறுமை கோட்டுக்கு கீழே வாழ்ந்தார்கள்.

இதன் பொருள் வறுமை வருடத்திற்கு 0.9% மட்டுமே குறைந்து வருகிறது.

ஏனெனில் பொருளாதார சீர்திருத்தத்திற்குப் பிறகு, வறுமை கோட்டுக்கு கீழே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் எண்ணிக்கை மிகவும் லேசாகவே குறைந்துக் கொண்டி ருக்கிறது. உண்மையில் 1995-97ல், குறைவதற்கு பதிலாக, வறுமை கோட்டிற்கு கீழ் இருப்பவர்கள் எண்ணிக்கை கூடியது.

இது எப்படி உண்மை ஊதியத்துடன் சம்பந்தப்படுகிறது என பார்ப்போம்.

விவசாய கூலிகளின் (தொழிலாளர் தொகையில் கணிசமானவர்கள்) உண்மை ஊதியம் 2.1% குறைந்திருப்பதாக தற்போதையை பொருளாதார கணக்கெடுப்பு சொல்லுகிறது. தொழிற்துறையிலும் 1989=93 உடன் ஒப்பிடும் போது தொழிலாளர்களின் உண்மை ஊதியம் 2.45% குறைந்துள்ளது.

**கொடுமையான புள்ளி விவரங்கள்**

★ 440 மில்லியன் மக்கள் வறுமையில் வாடுகிறார்கள்.

★ 6 கோடி மக்கள் (மக்கள் தொகையில் 16% பேர்கள்) தினசரி கூலியாக ரூபாய் மூன்று மட்டும் பெறுகிறார்கள்!.

-இந்தியாவால் தயார் செய்யப்பட்டமுதல் மனித வளர்ச்சி அறிக்கை

பட்டினி சாவு அதிகரித்து கொண்டிருக்கிறது.

★ 1994ல், அமராவதியில் (மஹாராஷ்டிரா) 613 பட்டினி சாவுகள்

★ 1996ல், இந்த எண் 829 ஆக உயர்ந்தது.


★ மஹாராஷ்டிரா மற்றும் பஞ்சாப்பில் பருத்தி பயிர் செய்யும் விவசாயிகளின் தற்கொலைச் சம்பவங்கள் வறுமை அதிகரிப்பதற்கான மற்றொரு உதாரணம்.




அரசு இதை ஒப்புக்கொள்ள மறுக்கிறது. 'வேறு வழியே இல்லை. பொருளாதாரம் வளர, வளர, எப்படியோ இதெல்லாம் சரியாகிவிடும்' என்கிறது அரசு.

## அவசியமான பொருட்களின் விலை உயர்வு


உண்மை ஊதியம் வீழ்ச்சி அடைந்து கொண்டிருக்க பின்-சீர்திருத்த காலத்தில் கீழ்நிலையில் உள்ள நுகர்வாளர்கள்தான் விலைஉயர்வை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நுகர்வோர் விலைப்புள்ளிகள் (அதாவது நுகர்வோரின் வாங்கும் சக்தியுடன் சரி செய்யப்பட்ட உண்மையான விலை) ஆலைத் தொழிலாளிகளுக்கும், விவசாயத் தொழிலாளிகளுக்கும், சேவைத் துறையில் பணிபுரியும் நகர ஊழியர் களுக்கும் இரண்டு மடங்காக கூடியுள்ளது. முறையே அவர்களது விலைவாசி அதிகரிப்பு 1998-99ல் 13.2%, 11.0%, 11.3% என பதிவு செய்யப்பட்டுள்ளது. விலைவாசியின் சதவீத உயர்வு 1991ல் இருந்து, தொழிற்துறை தொழிலாளிக்கு 1.6% ஆகவும், விவசாய தொழிலாளிகளுக்கு 3.9% ஆகவும், சேவைத்துறையின் ஊழியர்களுக்கு 0.3% ஆகவும் இருந்துள்ளது. ஆலைத் தொழிலாளிகளும் சேவைத்துறையின் ஊழியர்களும் பொது விநியோக முறையை, அணுகமுடிவதால் ஓரளவு விலைவாசியிலி ருந்து நிவாரணம் கிடைக்கிறது. ஆனால் இதுவும் தற்போது ஆபத்தில் உள்ளது.







## பொது விநியோக முறையை (ரேஷன் கடைகளை) ஒழிப்பது

தனது சிறந்த காலக்கட்டத்தில் கூட, பொது விநியோக முறை பரந்த அளவில் மக்களை சேரவில்லை. குறிப்பாக கிராமபுறத்தை பொருத்தவரை, அது சரியாக சென்று சேரவே இல்லை. இதன் தொடுபரப்பு 1951ல் 15.9% ஆக இருந்தது. 1995ல் அது 9.1% ஆக குறைக்கப்பட்டது. தற்போது பொது விநியோக முறையில் அதிக அளவு விலை ஏற்றம் செய்ததனால், இந்த பிரச்சினை மேலும் சிக்கலாக்கியது. பொது விநியோக முறை உண்மையிலேயே ஏழை களாக உள்ளவர்களை அடையவில்லை என்பது உண்மைதான் என்றாலும், அதற்காக அதனை விரிவாக்கம் செய்வதற்கு பதிலாக, தற்போதைய அணுகுமுறையின் மூலம் அதை மேலும் பலவீனப்படுத்தி உள்ளார்கள். தற்போது நமது ஏழை மக்கள் ஒருபுறம் பட்டினி கிடக்க, மறுபுறம் நமது உணவு பொருள் நிறுவனத்தின் கிடங்களில் தானியங்கள் நிறைந்து வழிகிறது. இது தவிர்த்து மண்ணெண்ணை, (LPG) போன்றவைகளின் விலை உயர்வும், உணவின் விலையை மேலும் உயர்த்தியுள்ளது. கிராம குடும்ப செலவுகளில் 64%மும், நகர குடும்ப செலவுகளில் 54%மும் உணவு பொருட்களுக்கு மட்டுமே செலவழிக்கப்படுகிறது.



வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கு குறைந்த விலை உணவு தானியங்கள் வழங்க 'இலக்கிடப்பட்ட பொது விநியோக முறை' அறிவிக்கப்பட்ட போது மாநில அரசுகளுக்கு வறுமை கோட்டின் எல்லையை மேலும் குறைக்க முழு சுதந்திரம் வழங்கப்பட்டது. டில்லியின் முதலமைச்சர் சாஹிப் சிங் வர்மாவின் கூற்றுப்படி, டில்லியில் உள்ள எந்த ஒரு குடும்பமும் இலக்கிடப்பட்ட பொது விநியோக முறையை பயன்படுத்த தகுதி பெறவில்லை. ஆசியாவின் மிகப் பெரிய குடிசைப்பகுதியான தாராவியில் (மும்பை) கூட, ஒரு சில குடும்பங்கள் மட்டுமே இலக்கிடப்பட்ட பொது விநியோக முறையின் குடும்ப அட்டைகளை பெற்றன. விலைவாசி அதிகரித்து வரும் இக்கால கட்டத்தில், குறைந்த விலையில் உணவு தானியங்களை மேலும் மேலும் பல மக்களுக்கு கொடுக்க வேண்டிய பட்சத்தில், மக்களுக்கு ஏற்கனவே கிடைத்து வரும் பயனையும் மறுத்து விடுகிறார்கள். ஆண் ஆதிக்க குடும்ப அமைப்பில், பெண்கள்தான் கடைசியாக சாப்பிடுவார்கள். ஆதலால் உணவு பற்றாக்குறைவினால் ஏற்படும் குறை உணவினால் பாதிக்கப்படுபவர்கள் முதலில் பெண்கள்தான்.

(Alternative Economic Survey - 1998-99


## எதிர்பாராத சூழ்நிலையை சமாளிப்பதற்கான தகுதியும், சேமிப்பும்

விலைவாசி உயர்வு, மக்களின் வாங்கும் சக்தியின் குறைவு, வறுமை ஒழிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி போன்றவை எல்லாம் சேர்ந்து, சாதாரண மக்களிடம் சேமிக்கும் தகுதியை கணிசமாக அழித்து விட்டது. திரட்டப்பட்ட துறையில் உள்ள நிரந்தர பணியாளர்கள் வைப்பு நிதி என்ற பெயரில் சேமிக்கக் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். ஆனால் திரட்டப்படாத துறையில் உள்ளவர்களுக்கு, இந்த வாய்ப்பும் கிடையாது. அவர்கள் சேமிப்பை குறித்து எந்தவித கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்படவில்லை ஆனால் (விலைவாசி உயர்வையும், வருமானக் குறைவையும் கணக்கில் எடுத்துக் கொள்ளும் போது) அவர்களுக்கு சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம் இல்லை என கருதலாம்.






நகரப்புற ஏழைமக்கள், மற்ற தேவைகளைக் காட்டிலும், உடல்நலக் குறைவுக்கு செலவழிக்கதான் கடன் வாங்குகிறார்கள். திரட்டப்பட்ட துறைகளில் கூட, பென்சன் மற்றும் வைப்பு நிதி திட்டங்கள் கூட சீர்திருத்த பாதை வழியாக வலுவிழக்க செய்யப்படுகிறது.






சேமிப்பு இல்லா பட்சத்திலும், சமூகத்துறை சீரழிந்து விட்டபோதிலும், உடல்நலக் கோளாறு இயற்கையின் சீற்றம் அல்லது நிலை குலைந்த வாழ்நிலை போன்ற துயரங்களுக்கு ஏழைகளால் இனியும் ஈடு கொடுக்க முடியாது. அது பஞ்சமாகட்டும், புயலாகட்டும், அல்லது தொற்றுநோயாகட்டும், ஏழைகள்தான் அதற்கான கடும்விலையை கொடுக்க வேண்டியுள்ளது.

## மக்கள் ஆரோக்கியத்தின் மீது தற்போதைய போக்கின் தாக்கம்

பொருளாதார-சீர்திருத்த காலகட்டத்தில், தனது குடும்பத்திற்கு பாதுகாப்பான வாழ்க்கையை உறுதிபடுத்த முடியாமல் மக்கள் படும் பிரச்சனைகளைப் பார்த்தோம்.

தற்போது சமூகம் மற்றும் அதனகுடிமக்கள் நல்வாழ்வுக்கும், இது எந்த விளைவுகளை உருவாக்குகிறது?

⇩

இதன் தாக்கம் அனைத்து மக்களுக்கும் மிகவும் மோசமானது என்றாலும், இதன் மிக மோசமான தாக்கம் பெண்களிடம்தான் அதிகமாக காணப்படுகிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.. பெண்கள்தான் தாராளமயமாதலினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.

### சத்துணவு குறைவு பிரச்சனை

நாட்டின் சத்துணவு நிலைமையை வேலைவாய்ப்பின்மையும், சம்பள பாதுகாப்பின்மையும் மோசமாகப் பாதித்துள்ளது.

ஏன்? நாட்டில் பாதிபேர் அவர்கள் எவ்வளவு உணவு எடுத்துக் கொள்ள வேண்டுமோ, அதில் பாதியை மட்டும்தான் எடுத்துக் கொள்கிறார்கள். இதனால் பெண்களும் குழந்தைகளும்தான் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். பல ஏழை குடும்பங்களில், கர்ப்பிணிப் பெண்கள் தனக்கு தேவையானதை விட 500 கிலோ காலரி குறைவான சத்துள்ள உணவைதான் உட்கொள் கிறார்கள்.



இதனால் குறைந்த எடையுள்ள குழந்தை பிறப்பு அதிகமாகியுள்ளது.

⇩

52% தீவிர சத்துக் குறைவான பெண்களுக்கும், 42.2% ஓரளவு சத்துக்குறைவான பெண்களுக்கும சிறியதளவு சத்துக்குறைவான 37.1% பெண்களுக்கும், எடை குறைந்த குழந்தைகள் பிறக்கின்றன.

மதுரா சுவாமிநாதனின் ஆய்வு சொல்கிறது. 1991-92; 44.2% பேர்கள் ஒரு வேளை சாப்பாட்டிற்கு கூட செலவு செய்ய முடிவதில்லை. 1993-94; 47.7% பேர்கள் ஒரு வேளை சாப்பாட்டிற்கு கூட செலவு செய்ய முடிவதில்லை.

உங்களுக்கு எப்படின்னு எனக்கு தெரியாது, ஆனால் எனக்கு இந்த சீர்திருத்தம் ரொம்ப மோசமாகத் தான் இருந்திருக்கு!

குழந்தைகளை பொருத்தவரை, நகரபுறத்தில் உள்ள மழலை பள்ளிக்கு செல்லும் குழந்தைகளின் சத்துணவை பற்றிய NNMB புள்ளி விவரப்படி, அங்குள்ள குழந்தைகளில் 10% பேர்தான் சரியான சத்துணவு அளவை பெற்றுள்ளார்கள். மீதம் உள்ளவர்கள் அனைவரும், சிறிதளவுநடுத்தர அல்லது தீவிர சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தீவிர சத்துக்குறைவின் வீழ்ச்சியின் வேகம், சீர்திருத்ததிற்கு பின்பு வெகுவாக குறைந் துள்ளது. நாம் பின்-சீர்திருத்த காலகட்டத்தை கணக்கில் எடுத்துப் பாத்தால், 1979 முதல் 1900 வரை இருந்த 4% தீவிர குறை உணவு வீழ்ச்சி, அதற்கு பின்பு 1.5% ஆக குறைந்துள்ளது.





## வேலை சூழ்நிலைகள்


பொருளாதார தாராளமயமாக்குதலின் மிகப்பெரிய பாதிப்பான தாக்கம் அரசு சமூக துறையில் இருந்து கழண்டு கொண்டதுதான்.

### இதற்கு என்ன பொருளென்றால் . .

1. முறைசாரா துறையில் உள்ள தொழிலாளிகளுக்கு சமூக சேவைகளை செய்து கொடுக்க அரசு இனி முயற்சிக்காது.
2. அணிதிரட்டப்படாத துறையில் உள்ள மிகக்குறைந்த பேருக்கு மட்டுமே சமூக பாதுகாப்பு திட்டம் வழங்கப்படும்.
3. பதிவு செய்யப்படாத தொழிலாளிகளுக்கு வேலை நேர சம்பளம், வேலையின் மற்ற நிலைகள் எதுவும் முறைப்படுத்தப்பட மாட்டாது.

ஆபத்தான தொழிற்சாலைகளில் பணிபுரிவது குறித்து அரசு சட்டம் இருக்கிறது என்றாலும், அங்கு பணிபுரியும் குழந்தை தொழிலாளிகளின் நிலை, பயங்கரமாகவே உள்ளது. இரசாயின தொழிற்சாலையில் பணிபுரிந்த குழந்தைகளின் சாவு, நெருக்கமான இடங்க்ளில் ஏற்பட்ட தீவிபத்து. மற்றும் இதுபோன்ற சம்பவங்கள் பல நடந்து கொண்டிருக்கின்றன. நமக்கு இது போன்ற விசயங்கள் அரசின் தலையீடு அதிகமாக - ஒப்புக்கு குறைந்தபட்ச தலையீடு அல்ல - தேவை என்பதையே காட்டுகிறது.

அதிகபடியான அரசின் கட்டுப்பாடு நல்லது. குறைந்தபட்ச அரசின்தலையீடுதான் நாங்கள் இப்படி நடத்தப்படுவதற்கு காரணமாகிறது.



முறைப்படுத்தப்படாத துறை வளரும் போது பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். நகர விசயங்களுக்கான தேசிய கழகம் நடத்திய ஒரு ஆய்வின்படி, ஒரு சராசரி பெண்மணி 7 மணி நேரம் வீட்டிற்கு வெளியிலும், 4 மணி நேரம் வீட்டிற்குள்ளும் மொத்தம் 11-12 மணி நேரம் பணிபுரிகிறாள் என தெரிகின்றது. இது வீட்டிற்குள் பணி செய்வது, வீட்டிற்கு வெளியே பணி செய்வது, குழந்தைகளை பராமரிப்பது என மூன்று சுமைகள் பெண்கள்மீது திணிக்கப்படுகிறது. பல பெண்களுக்கு இத்துறைகளில் பிரசவ வசதிகள் கூட கிடைப்பதில்லை. குழந்தை பெற்ற ஒரு மாதத்திற்கு பின்னர், தங்கள் வேலையை செய்ய அவர்கள் ஆரம்பித்து விடுகிறார்கள். இது குழந்தைகள் நலவாழ்வை பெரிதும் பாதிக்கிறது. தற்போது ஏற்பட்டு வரும் தொழிலாளர்களின் முயக்கமும் (mobility). சிறிய குடும்பமாக தம்பதிகளும், குழந்தைகள் மட்டுமே வாழுகின்ற போக்கும் பெண்களுக்கு பல இறுக்கத்தை ஏற்படுத்துகிறது. அந்த இறுக்கத்தை தாக்குப்பிடித்து வாழ அவர்களுக்கு பல உதவிகள் தேவைப்படுகிறது.

மேற்சொன்னவைகள் வேலை மட்டும் சம்பள பாதுகாப்புயின்மை நாட்டின் மீதும், அதன் குடிமக்கள் மீதும் செலுத்தும் பாதிப்புக்கான சில உதாரணங்கள் தான்.

## வறுமை குறைப்பு
## அரசின் திட்டங்களும் நிதி ஒதுக்கீடும்

1997 வரைக்கும், ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டு திட்டமும், (IRDP) ஜவஹர் ரோஜ்ஹர் யோஜனாவும்தான் முக்கியமான வறுமை குறைப்பு திட்டங்களாகும். இருந்த போதிலும், இத்திட்டங்களால் தனது இலக்கை அடைய முடியவில்லை. மத்திய அதிகாரிகள் நிர்வாகம் செய்ததாலும், மையப்படுத்தப்பட்ட வகையில் திட்டமிடப்பட்டதாலும்தான் இத்திட்டங்கள் தனது இலக்கை அடைய முடியவில்லை. இத்திட்டங்களின் முக்கிய கவனம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதின் மூலம், கிராம மேம்பாட்டை கொண்டு வருவதாகும்.

இதனால் பலன் அடைந்த பலரும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் அல்ல என அடையாளம் காணப்பட்டது. இதற்காக கொடுக்கப்பட்ட நிதியுதவி ஒரு புதிய தொழிலைத் தொடங்குவதற்க போதுமானதாகயில்லை. ஒரு புதிய முயற்சிக்கு பயிற்சி, நிர்வாகத்திற்கான உதவி மற்றும் சந்தை மூன்றும் வேண்டும். ஆனால் இதில் அதற்கான வாய்ப்பு இல்லை. பொருத்தமற்ற தொழிலும், பொருத்தமற்ற தொழில்நுட்பமும் தான் தேர்ந்தெடுக்கப்பட்டன. மொத்தத்தில் எந்த வறுமை ஒழிப்பும் நடக்கவில்லை என்பதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை.



1977ல் இத்திட்டங்கள் ஸ்வர்ண ஜெயந்தி ஸ்வாரோஜ்கர் யோஜனாவுடன் இணைக்கப்பட்டது. இந்த திட்டத்தில் சுயஉதவி குழுக்களுக்கு நிதியுதவி அளிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்குழுக்கள் சிறு தொழில்களை லாபகரமாக நடத்த உதவ வேண்டும் என்பதே இதன் நோக்கம். அரசு சமூகநலத் துறையில் இருந்து கழண்டு கொள்ளும் பட்சத்தில், மக்கள் பிழைப்பதற்கு உதவும் வண்ணம் ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகதான் இது காணப்படுகிறது. உதாரணத்திற்கு 1999-2000 பட்ஜெட்டில், கிராம மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கீடு 6% அளவுக்கு குறைக்கப்பட்டது. நகர வறுமையை கையாளுவதற்கு உள்ள பட்ஜெட் ஒதுக்கீடும் 13% அளவுக்கு குறைக்கப்பட்டு விட்டது.




நுண்-நீர்பிடிப்பு திட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக நாபார்ட் (Nabard) என்ற மத்திய ஏஜன்சிக்கு 1999-2000 பட்ஜெட்டில் ரூபாய் 50 கோடி ஒதுக்கீடு செய்து கொடுக்கப்பட்டது.

நாபார்ட் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த கிராம பஞ்சாயத்து, உள்ளூர் சுயஉதவிக் குழுக்கள், மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவியை நாட வேண்டும். இத்திட்டம் கட்டாயமாக கிராம பஞ்சாயத்து மூலம் நடைமுறைப் படாதது (குறிப்பிட்ட நிதியுடன் மாநில அரசின் வழியாய்) சந்தேகத்தை கிளப்புகிறது.

இந்தியாவில் 5 லட்சம் கிராமங்களுக்கு மேல் உள்ளன. கிராம பஞ்சாயத்துக்கள் கிட்டதட்ட 40000க்கு பக்கத்தில் இருக்கும். இத்திட்டம் ஒரு 100 மாவட்டங்களில் துவங்கப்போகிறது. 100 மாவட்டங்கள் 10000 பஞ்சாயத்தையாவது கொண்டிருக்கும். ஒரு கிராம பஞ்சாயத்திற்கு ஒரு 5-10 கிராமங்களாவது இருக்கும். நாம் விகிதாச்சாரப்படி போட்டுப் பார்த்தாலும், ஒரு கிராம பஞ்சாயத்திற்கு ரூபாய் 50000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அப்படி என்றால் ஒரு கிராமத்திற்கு ரூபாய் 5000-10000. இவ்வளவு குறைந்த நிதியை வைத்துக் கொண்டு என்ன பெரிய நீர்பிடிப்பு திட்டங்களை நிறைவேற்ற போகிறார்கள் என்பது தெளிவாக இல்லை.

ஆதாரம் : Alternative Economic Survey, 1998-99



## அத்தியாயம் 6

# பதிலடி

### வாழ்க்கையை பாதுகாக்க மாற்று வழிகளை உருவாக்குவது

நாம் எப்போதுமே வேலைவாய்ப்புகான பரிந்துரை மற்றும் கிளர்ச்சி நடவடிக்கை போன்ற வழக்கமானதில் இருந்து வித்தியாசப்பட்ட சமூக நடவடிக்கைகளை அல்லது மக்களின் முன்முயற்சிகளை திட்டமிடும் போது, அவைகள் முறைப்படுத்தப்படாத துறைத் தொழிலாளர்களை சென்றடைவதற்கு முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.




ஏனெனில்

தொழில்மயமாதலினால் ஏற்பட்ட வளர்ச்சி - இன்னும் சரியாக சொல்வதானால் - திரட்டப்பட்ட தொழிற்துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு வேலைவாய்ப்பை பெருக்கியதில் பெரும் பங்குண்டு என ஏற்றுக் கொள்ள முடியாது.

90களில் உள்ள வேலை வாய்ப்புகளை பாருங்கள். வருடத்திற்கு 1.8% என ஜனத்தொகை அதிகரித்தது. தொழிலாளர்படையின் வளர்ச்சியோ ஜனத்தொகை வருடத்திற்கு சுமாராக 2% ஆக அதிகரித்தது. ஆனால் அனைத்து துறைகளிலும் வேலைவாய்ப்புக்களின் வளர்ச்சியோ வருடத்திற்கு 1%கும் குறைவு. 1998க்குள் முதன்மையான தொழிலாளிகளின் எண்ணிக்கை குறைந்து 331 மிலியனாகி விட்டது. ஆனால் திரட்டப்பட்ட துறையில், இந்த காலகட்டத்தில் 26.8 மிலியனில் இருந்து 28.3 மிலியனாக தொழிலாளர்கள் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. எண்ணிக்கையில் இந்த உயர்வு இருந்தும், உண்மையில் மக்கள் தொகையில் 9.4% ஆக இருந்த இந்த தொழிலாளர் சக்தி 8.5% ஆக குறைந்துதான் உள்ளது. இந்த 90கள் தான் "சந்தை செயல்பாட்டினால் உருவாகிய வளர்ச்சி உலகமயமாதல் அடிப்படையிலான வளர்ச்சி என பலவாறு புகழ்ந்து பேசப்பட்டாலும் உண்மையில் நடந்த சங்கதியோ வேறு.

அப்படியானால் லட்சக்கணக்கானவர்கள் எங்கு வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள்?

• முறைப்படுத்தப்படாத துறைகளில் - நுண் துறைகளிலும், ஆரம்ப உற்பத்தி களிலும் - அவர்கள் தள்ளப்பட்டார்கள். இங்கிருந்துதான் நாம் மேம்பாட்டிற்கான மாற்று பாதையை கட்டத் தொடங்க வேண்டும். அதுதான் அனைவருக்கும் கண்ணியமான வாழ்க்கையையும், சுமையற்ற வேலையையும் உறுதி செய்யும்.

### நுண்துறைகளை பற்றிய மாற்று புரிதலை உருவாக்குவது

1. நல்வாழ்வை உறுதிபடுத்துவதற்கு திரட்டப்படாத துறையை சக்தி வாய்ந்த திரட்டப்பட்ட இணையங்களுடைய துறையாக மாற்றி அமைப்பது மிகவும்



அவசியம். இதை பன்னாட்டு நிறுவனங்களின் போட்டியை தாக்குப்பிடித்து நிற்கும் சக்தியுடன் இருக்குமளவுக்கு மேம்படுத்த வேண்டும்.இதன் மூலம் இதை நம்பி இருப்பவர்களுக்கு கண்ணியமான தரம் வாய்ந்த வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும்.

2. சிறு தொழில்களையும், குடிசைத் தொழில்களையும் வறுமையை குறைப்பதற்கான ஒரு வாய்ப்பாக மட்டும் கருத வேண்டாம். அவைகள் எதிர்கால மாற்று பொருளாதார அமைப்பிற்கான கருவாகவும் கருதலாம்.

3. சிறு தொழில்களை இணைப்பதற்கும், அந்த இணையங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கும் பல ஏற்பாடுகள் தேவை. சிறந்த நிதி நிர்வாகம், சிறந்த நிர்வாகம், சிறந்த தொழில் நுட்பம், சிறந்த விற்பனை சேவை போன்றவை. இது உண்மையிலேயே ஒரு சவால்தான்.

4. புதிய சந்தையை கட்டுவதற்கும், பெரிய உற்பத்தியாளர்களிடமிருந்துச் சந்தையைக் கைப்பற்றுவதும் அவசியமாகும். புதிய உற்பத்தி பொருட்களைக் கொண்டு, புதிய சந்தைகளை உருவாக்குவதும் அவசியமாகும். பெரும் சந்தையாளர்களுக்கு தகவல் தொடர்பு சாதனங்கள் சாதகமாக செயல்படும் சூழ்நிலையை நுகர்வோர் கல்வி, பொருளின் சிறந்த தரம், ஊர் பற்று போன்றவற்றின் மூலம் எதிர் கொள்ளலாம்.

### வறுமை ஒழிப்பு திட்டங்களை மறுவடிவமைப்பது

மத்திய மற்றும் மாநில அரசின் வறுமை குறைப்பு திட்டங்களை ஒருங்கிணைத்து கூட்டுப்படுத்தி, ஏழைகளை தொடர்ந்து வறுமை கோட்டிற்கு மேலே இருக்கும் படி செய்திருக்க முடியும். இந்த திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு கொஞ்சமானதோ, சாதாரணமானதோ இல்லை. ஆனால் இது எப்போதுமே புத்திசாலித்தனமாக உபயோகிக்கப்பட்டதில்லை. ஒருசிலர்தான் இந்த திட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு, வறுமை கோட்டுக்கு கீழிரிந்து வறுமை கோட்டுக்கு மேலே முன்னேறி இருக்கிறார்கள். இருப்பினும் இந்த திட்டங்களை வைத்துக் கொண்டே ஓரளவு முன்னேற்றம் செய்திருக்க முடியும். அரசு மானியங்களையும், நிறுவன கடன்களையும், சேமிப்பு குழுக்கள் மூலமாக பெறப்படும் சிறு சேமிப்புகளையும் அடிப்படையாகக் கொண்டு மூலதனத்தை திரட்டமுடியும். ஆனாலும் இதனைச் செய்வதற்கு தொழில்நுட்ப உதவிகள், விற்பனை செய்வதற்கான உதவிகள், நிர்வாகம் செய்வதற்கான உதவிகள் போன்ற அனைத்து உதவிகளும் தேவைப்படும்.

### மக்களை திரட்டுவதும் இணையங்களை கட்டுவதும்


சிறு தொழில்களின் இணையத்தை கட்டுவதன் முதல்படி பலமான ஸ்தாபனங்களை உருவாக்குவதாகும். அண்டைக் குழுக்களை மையமாகக் கொண்டும் இவற்றை அமைக்கலாம். தலித்துகள், பெண்கள், விவசாய கூலிகள் போன்ற ஒடுக்கப்பட்ட மக்களையும் மையமாக வைத்து இந்த இணைங்களைக் கட்டலாம். சமீப காலத்தில் பெண்களின் குழுக்கள், தங்கள் சேமிப்புகளுடனும், தேவைகளுடனும் ஒன்றாகக் கூடி, வீட்டில் இருந்தே செய்வதற்கான தொழிலுக்கு நிதி உதவி திரட்டுவது என்பது

உலகம்பூராவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த குழுக்கள் பல ஏழை பெண்களை தங்களது திறமைகளை வளர்த்துக்கொள்ள உதவியிருக்கிறது. இந்த மாதிரியான பல அமைப்பு வடிவங்கள் இதே பொது கருத்தின் அடிப்படையில் இன்னும் பல்வேறு குழுக்களுக்கும், காரியங்களுக்கும் ஏற்படுத்தலாம். நாம் குஜராத் மற்றும் வேறு இடங்களில் உள்ள கூட்டுறவுகளை பற்றி கற்று கொள்ள வேண்டும். அதிலிருந்து தாக்குப்பிடிக்க கூடிய துடிப்பான மாதிரி அமைப்பு வடிவங்களை கண்டறிய வேண்டும்.



## உயிரியல் பொருட்களை (Biomass) நம்பி

நமது மக்கள் தொகையின் 70% பேர்கள் இன்னும் விவசாயத்தை நம்பிதான் இருக்கிறார்கள். ஆகவே அதிகப்படியான உயிரியல் பொருட்களை உற்பத்தியாக்குவது, அதிகப்படியான உற்பத்திக்கு அடித்தளமாக அமையும். உயிரியல் பொருட்கள், எரிபொருளுக்கான மூலபொருளாகவும், உற்பத்திக்கான கச்சா பொருளாகவும் அமைகின்றது. உயிரியல் பொருட்கள் பல உலோக மூலப்பொருட்களைப் போல அல்லாமல் புதுப்பிக்க கூடியவை. உணவு, கால்நடை தீவனம், நார்சத்து, இரசாயினப் பொருட்கள் மற்றும் மற்ற பல பொருட்களை உயிரியல் பொருட்களை வைத்து தயாரிப்பது என்பது தற்போது தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமானது மட்டுமல்ல, சமூகரீதியாய் விரும்பக் கூடியதும் ஆகும். பலவகையான உயிரியல் பொருட்களை, பல்வேறு தேவைகளுக்கு ஏற்ப, இருக்கும் நிலத்தையும் நீரையும் (காற்றையும், சூரியனையும் கூடத்தான்) வைத்து உற்பத்தி செய்தால், பல லட்சக்கணக்கான மக்களுக்கு நலவாழ்வை ஏற்படுத்த முடியும். இன்று பல நிலங்கள் வீணடிக்கப்பட்டு விட்டது. கிட்டத்தட்ட அனைத்து நிலங்களும் சீர்கெட்டு விட்டன. இருந்த போதிலும், இது இப்படியே தொடரவேண்டிய தேவையில்லை. உள்ளூர் சமூகத்தின் பங்கேற்புடன், மக்களது





பட்டறிவு, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் ஆகியவற்றின் இணைப்புடன் மோசமான நிலத்தைக் கூட பசுமையாக்க முடியும். கண்ணியமான வாழ்க்கைக்கும் பொதிவேலையில் இருந்து விடுதலை அளிக்கும் வாழ்முறைக்கு தேவையான கால்நடை தீவனம், எரிபொருள் போன்றவற்றை தர வல்லதாகவும் செய்ய முடியும். ஒரு உதாரணம் ரலேகான் சித்தி - அண்ணா ஹசாரேவின் வெற்றிகரமான சோதனை முயற்சி. இதேபோல் இன்னும் பல உதாரணங்கள் இருக்கின்றது - பானி பஞ்சாயத்துகள், கேரள பரிசோதனைகள், ஆரோவில் பரிசோதனைகள் போன்ற பல. நமது முன்னுள்ள சவால் இந்தமாதிரி பரிசோதனைகளை ஆயிரம் மடங்காய் பல இடங்களில் மலர வைப்பதுதான். பாழ்நிலத்தை மேம்படுத்துவது, விவசாயத்தை மேம்படுத்துவது போன்ற திட்டங்களை ஒருங்கிணைத்து, அந்த நிலத்தில் வாழ்பவர்களுக்கு வேலைவாய்ப்பு எடுத்துக் கொடுப்பது மட்டுமல்லாது, நிறைய உற்பத்திகள் மூலமும், உள்ளூர் பொருளாதார மேம்பாட்டு மூலமும் இன்று பல வேலைவாய்ப்புகளை உருவாக்குவது நம் முன்னுள்ள சவால்தான்.

## இயற்கை வளங்களை உள்ளூர் சமுதாயத்தின் பொறுப்பாக்குவது

முதன்மை உற்பத்தி சார்ந்து இருக்கும் இயற்கை வளங்கள் சமமாக அனைவரும் அணுகுவது என்பது முதன்மை துறையில் பல வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பெரும்முயற்சிக்கு மிகவும் அவசியமான அம்சமாகும். நிலம் ஒரு சொத்து, அடுத்தது தண்ணீர், காடுகள் மூன்றாவது, கடலும் நதிகளும் நாலாவது. உயிரியப் பன்மை (bio-diversity) என்பது உயிர்கள் சார்ந்து இருக்கும் மற்றொரு இயற்கை மூலாதாரம். ஒரு காலத்தில் இவையனைத்தும் பொதுவாக இருந்தது. அதை அனைவரின் நன்மைக்காக உபயோகிக்கப்படுத்திக் கொள்ளும் உரிமை இருந்தது. இந்த மூலாதாரங்களை விற்கவோ வாங்கவோ முடியாது. அவைகள் பூஜிக்கப்பட தக்கவையாக இருந்தன. மெதுவாக நிலமும், நீரும் தனியார்துவப்படுத்தப்பட்டது. காடுகள் - பராமரிப்பு என்ற சாக்கில் - அங்கு வாழ்ந்து மக்களிடம் இருந்து பறித்துக் கொள்ளப்பட்டன, அல்லது மக்கள் காடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். (உதாரணத்திற்கு அணை கட்டுகிறோம் என்று). எதிர்காலத்தைப் பற்றி கவலை கொள்ளாமல், பேராசை பிடித்த தொழிற்சாலைகளால் கடல்கள் கொள்ளையடிக்கப்பட்டன. உயிரியப் பன்மையும் ஒரு மூலதனம்தான் என அங்கீகரிக்கப்பட்டதும், பெரும் விதை வங்கிகள் இந்த இயற்கை வளத்தை தனியார் சொத்தாக மாற்றத் துவங்கின. விரைவில் உயிரியப் பன்மையும் ஒட்டு மொத்தமாய் காணாமல் போவது என்பது விரைவுப்படுத்தப்படும்.

இந்த இயற்கை வளங்களைக் காப்பாற்றுவதற்கான ஒரே பாதை இவற்றின் நிர்வாகத்தை உள்ளூர் சமூகத்திடம் ஒப்படைப்பதுதான். இந்த உள்ளூர் சமூகங்கள், இந்த வளங்களை மற்றவர்களுக்கு அளிப்பதற்கு மறுக்க வேண்டும். இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான மக்களின் போராட்டங்கள் பலமடைந்தால்தான், அனைத்து இடங்களிலும் இயற்கை வளங்களை தடையற்று உபயோகிப்பதற்கு பணக்காரர்களுக்கு மறுப்பும் எதிர்ப்பும் தெரிவிக்கப்படும்.

b) பெரும் சந்தையாளர்களின் இடத்தைப் பிடிப்பதன் மூலமும் உருவாக்கப்படும் சந்தை எவ்வளவு பெரிய அளவினதாக இருக்க முடியும் தெரியுமா?

உண்மையிலேயே இதில் உள்ளவர்களின் எண்ணிக்கை மிகவும் பெரியது. ஆமாம் மிகப் பெரியது.

விவசாயம் :

விவசாயத் துறையில் தலையிடுவதற்கான வாய்ப்புகள் மிக அதிகம். முதன்மை உற்பத்தியில் தலையிடுவதற்கு நம்மிடம் உள்ள பல மாதிரி உதாரணத்திலிருந்து கற்றுக் கொள்வதும், அதை உள்ளூர் தேவைக்கு ஏற்றப்படி மலர செய்வதும் அவசியமாகும். உடனடியாக தேவைப்படுவது என்ன வென்றால் பெருமளவில் இத்திட்டங்கள் வேறு இடங்களிலும் நடைமுறைப்படுத்துவதும், தற்போதைய நலவாழ்வுக்காக நடத்தப்படும் பிரச்சாரம் போல ஒருங்கிணைந்த பிரச்சாரத்தை விவசாயத் துறையிலும் மேற்கொள்வதும் ஆகும். விவசாய துறையில் பொருளாதார சீர்திருத்தத்தினால் ஏற்படப் போகும் விளைவு, ஆரோக்கியத்தில் உள்ளதை விடக் கூட மோசமானதாக உள்ளது.

நமது முன்னுள்ள காரியம் இரட்டை தன்மையுள்ளதாக இருக்கும்

1. நிலசீர்திருத்தம், பொது சொத்தை எல்லோரும் அணுக முடிவது, அடிப்படை மனித உரிமை மற்றும் தகவல் உரிமை போன்றவற்றை மறுபடியும் அரசியல் முன்னுரிமைகளாக மாற்றுவது

2. வளர்ச்சிக்கான மாற்று மாதிரிகளை உருவாக்குவது, அவைகளை கூட்டமைப்பாக இணைப்பது. பொறுப்புள்ள நுகர்வுக்கான பிரச்சாரம் செய்வது.

இந்த இரண்டு அம்சங்களின் பொருத்தமான கூட்டமைப்புதான் சமூக மாற்றத்திற்கு அழைத்து செல்ல முடியும்.

## இந்த வரிசை நூல்கள்

1. உலகமயமாக்கல் சூழலில் நல்வாழ்வு

2. கி.பி. 2000 தில்
அனைவருக்கும் நல்வாழ்வு
என்னவாயிற்று?

3. ஒரு தரமான வாழ்க்கை

4. நம்மீது அக்கறையுள்ள ஓர் உலகம் ...

5. சந்தை பொருளாகும் நல்வாழ்வு
- சில கேள்விகள்

மேற்குறிப்பிட்ட நூல்கள் ஒவ்வொன்றும் ரூ. 20/-

ரூ. 20.00